[illegible]

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாய பரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் ஆதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணிமாலை

மூலமும்,

தமிழ்ப் பண்டிதர்

சென்னை

கொ. இராமலிங்கத்தம்பிரான் அவர்கள்

நூதனமாக எழுதிய

விருத்தியுரையும்.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1921

[All Rights Reserved]

உ

கணபதி துணை

முகவுரை

அந்தமிழ் அறிந்த அன்பர்காள்!

நால்வர் நான்மணிமாலை என்னும் இவ்வரிய நூலை இயற்றினவர், நம் தொண்டைநாட்டிற் சிறப்புற்றோங்கிய உத்தம கவிகளில் தலைமை பெற்றவரும், சிவனடியே சிந்திக்கும் சிவஞானச் செல்வரும், வீரசைவ மதத்தினருமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பெரியார். இந் நூலில், காப்புச் செய்யுள் நீங்கலாக, வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலுமாக நாற்பது செய்யுட்கள் உள்ளன. இது, சொற் சுவையும், பொருட் சுவையும், சித்தாந்தக் கருத்துக்களும் நிரம்பப் பெற்றது. திருக்கைலாச பரம்பரைப் பொம்மபுரம் ஈசானியமடம் ஸ்ரீமத். இராமலிங்க சுவாமிகளின் விருத்தியுரையையும், யாழ்ப்பாணத்து, வண்ணைநகர், ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதர் அவர்களின் குறிப்புரையையும் தழீஇ, ஷை சுவாமிகள் மாணவர், ஸ்ரீமத். க. வ. திருவேங்கட நாயுடு அவர்களிடத்துப் பாடங்கேட்டவற்றுள் மறப்பெனுங் கள்வன் வாரிக்கொண்டு போக, எம் சிற்றறிவினுக்கு இயன்ற அளவில் எம்மால் இந் நூலுக்கோர் உரை காணப்பட்டது. இந் நூலுள் சுவாமிகள் எழுதிய இலக்கணக் குறிப்புக்களை யெல்லாம் ஐயந் தீர வினா விடைகளான் நன்கு விளக்கியுள்ளோம். இந் நூலிலுள்ள சரித்திரங்களை யெல்லாஞ் சுருக்கியும், ஆங்காங்கு வேண்டிய இன்றியமையாத் தேவாரங்களை உணர்த்தியுமுள்ளோம்.

இவ் வுரையிலுள்ள குற்றங்களை எமக்குத் தெரிவிப்பவர்கள் மாட்டு நன்றி பாராட்டி, மறு பதிப்பில் திருத்திப் பதிப்பிக்க முயல்கின்றேம். சுவாமிகள் உரை கிடைப்ப தரிதாகையால், மாணவர்கட்குப் பயன்படுமாறு இவ் வுரையை யியற்றுவித்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய, ம-ா-ா-ஸ்ரீ. சை. சிவசங்கர செட்டியார் B.A., B.L., அவர்கட்கு மனப்பூர்வமாக வந்தனம் செலுத்தக் கடவேனாக.

இங்ஙனம்,

சென்னை, கோ. இராமலிங்கத்தம்பிரான்.

கணபதி துணை

சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்

நால்வர் நான்மணிமாலை நூலாசிரியராகிய சிவப்பிரகாச சுவாமிகள், தொண்டைநாட்டிலே, காஞ்சிபுரத்திலே, ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன், தொண்டைமண்டலம் வேளாளர்க்குத் தீக்ஷா குருவாகிய குமார சுவாமி தேசிகர் என்பவர் திருவண்ணாமலையில் குருதேவரிடத்துத் தாரணதீக்ஷை செய்துகொண்டு வீரசைவ மதத்தினராய், அவரிடத்து விடை பெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்துக்கு வந்து வாழுநாளில் அவருக்கு அண்ணாமலையார் அருளால் பிறந்தனர். இவருடன் வேலாயுதம், கருணைப்பிரகாசம் என இரண்டு சகோதரர்களும், ஞானாம்பிகை என ஒரு சகோதரியும் உதித்தனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய மூவரும் கல்வி பயின்று வருங்காலத்தில் தந்தையாராகிய குமாரசுவாமி தேசிகர் சிவலிங்கைக்கியமாயினார். பின்னர் மூத்தவராகிய சிவப்பிரகாச சுவாமிகள் தமது சகோதரர்களோடு திருவண்ணாமலைக்குப் போய்க் குருதேவரைத் தரிசித்து, அங்கே வாசஞ் செய்துகொண்டிருக்கு நாள்களுள் ஓர்நாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துவரும் போதே, சோணசைலமாலை யெனப் பெயரிய நூறுசெய்யுட்களால் அதனைத் தோத்திரம் பண்ணினார். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதுங் கற்பான் விரும்பித் தமது சகோ

தரர்களுடனே தக்ஷிண தேசத்திற்குப் பிரயாணமுற்று, வாலிகண்ட புரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கலம் என்னும் நகரத்தையடைந்து, ஒரு நந்தவனத்தில் சிவபூசை செய்துகொண் டிருந்தனர். அப்பொழுது கிராமாதிபதியாகிய அண்ணுமலை ரெட்டியார் என்பவர், சுவாமிகள் வரவைக் கேள்வியுற்று, அங்கு அடைந்து, அவரைத் தரிசித்து, அவர்க்குப் பணிவிடை செய்து அநுக்கிரகம் பெற வேண்டுமென் றெண்ணிச், சுவாமிகளை நோக்கி, "இவ்விடத்திற் சிலகாலம் வாசஞ்செய்யவேண்டு" மென்று விண்ணப்பஞ் செய்து, சுவாமிகளது அநுமதி பெற்றுத் தங்கள் குருவாகிய சென்னவசவையர் மடத்துக்கு மேற்றிசையில் ஒரு திருமடங் கட்டுவித்து, அதில் சுவாமிகளை எழுந்தருளச்செய்து, அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருக்க, சிவப்பிரகாச சுவாமிகள் அண்ணுமலை ரெட்டியாருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக் கொண்டு, இரண்டு வருஷம் வரையில் அங்கே எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு சிவப்பிரகாச சுவாமிகள், தாம் கொண்ட கருத்தை நிறைவேற்ற விரும்பித் திருநெல்வேலியை யடைந்து, தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரானைக் கண்டு, தாம் இலக்கணம் கற்பான்வேண்டி வந்தமையைத் தெரிவித்துக்கொண்டனர். அத் தம்பிரான், சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை யறிதற்பொருட்டு, "கு என்பதை முதற்கொண்டு, ஊருடையான் என்பதை இடைப்

பெய்து, கு என்பதையே ஈற்றிலுங் கொண்டு முடியும்படி ஒரு வெண்பாப் பாடுக!" என்று கூறச் சுவாமிகள்,

* "குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைத்தோன் மேற்கொள்ள
லூருடையா னென்னு முலகு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினர். அத்தம்பிரான் அவ் வெண்பாவை வியந்து பாராட்டிச், சுவாமிகளைத் தழுவித் தம் மருகிருத்திச், சுவாமிகள் சகோதரர்களாகிய வேலையசுவாமிகள் கருணைப்பிரகாச சுவாமிகள் என்னும் இருவருக்கும் சிவப்பிரகாச சுவாமிகளுக்கும் பஞ்சலட்சணங்களையும் பாடஞ்சொல்லி முடித்தார். அது கண்ட சுவாமிகள் பேருவகையுற்று, அண்ணாமலை ரெட்டியாரென்பவர் தங்களுக்கு வழிச் செலவிற் குபகரித்த முந்நூறு பொன்னையும் குருதக்ஷிணையாக வைத்து உபசரிக்க, அத்தம்பிரான் "இது நமக்குவேண்டா; நம்மைத் தூஷித்தலையே இயல்பாகக் கொண்டு திருச்செந்தூரில் வசிக்கும் தமிழ்ப்

---

* (இ-ள்.) மேற்றிசையை நோக்கி யோடுகிறவனாகிய சூரியனது பற்களைத் தகர்த்தவரும், திருமாலாகிய பன்றியினது வளைவாகிய கொம்பை மதாணிப் பதக்கமாக முற்காலத்தி லணிந்தவரும், வடதிசையை நோக்கி யோடுகின்ற தென்றலாகிய தேரையுடையவனாகிய மன்மதனது பகைவருமாகிய சிவபெருமானுக்குத் தில்லைநகரம் ஊராகும், யானைத்தோல் புலித்தோல்கள் வஸ்திரமாகும், ஊர்தல் இடபமாகும் என்று உலகத்தவர் சொல்லுவர்; (எ - று.)

புலவ ரொருவரோடு கல்வியில் வாதிட்டு அவரை வென்று அடிமையாக்கி அவர் வந்து நம்மை வணங்கும்படி செய்வித்தலே குருதக்ஷிணை யாகும்" என்று மறுத்தருளினர்.

அவர் கருத்தறிந்த சுவாமிகள் அதற் குடன்பட்டுத் திருச்செந்தூரை யடைந்து, அப் புலவரோடு கல்வியில் வாதிட்டு அவரை வென்று அடிமையாக்கி, அப்புலவர் தம்பிரானை வந்து வணங்கும்படி செய்வித்தனர். அதனைக் கண்டு அத் தம்பிரான் திருவுள மகிழ்ந்து, சிவப்பிரகாச சுவாமிகளைப் பார்த்து, "நீர் பாடிய வெண்பாவில் சிவபிரானுக்குரிய தலம் சிதம்பரமே யெனச் சுட்டிக் குறிப்பால் விளக்கினமையால் அத் தலத்திலே சில காலம் வாசஞ் செய்தருளுக" என்று விடைகொடுத் தனுப்பியருளினர்.

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கிச் சிவஸ்தலங்கடோறும் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, துறைமங்கலத்தைச் சார்ந்து முன்போலவே அண்ணாமலை ரெட்டியா ரென்பவருக்குத் திருவருள் பாலித்து, அவரது வேண்டுகோளின்படி அவர் ஆளுகையி லமர்ந்த வாலிகண்டபுரத்தின் வடமேற் பாகத்திலுள்ள திருவெங்கைமா நகரத்திலே தம்பொருட்டு அவராற் கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்துகொண்டு அத் தலத்திலுள்ள பழமலைநாதர்மீது திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் முதலிய பிரபந்தங்களை இயற்றியருளினர். பின்பு தம்மிடத்து அன்பு பூண்ட அண்ணாமலை ரெட்டியாரோடு சிதம்பரத்துக்கு எழுந்தருளி, அங்கே ஒரு திருமடம்

கட்டுவித்து, அதில் வீற்றிருந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச விகாசம் முதலிய பிரபந்தங்களைச் செய்தருளி, அத் தலத்தை அருமையாக நீங்கிப் பிற தலங்களையும் வணங்கித், திருக்காட்டுப்பள்ளியை யடைந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அவ்விடத்துத் தங்கி யிருந்தனர். ஆங்கிருக்கும்போது, கல்வியிற் சிறந்த ஒரு பெண்மணிக்கு உண்மை ஞான முண்டாகுப்படி கிருபா நோக்கஞ் செய்தருளினர். அதன் பின்னர்க் காஞ்சிபுரத்தைத் தரிசிக்க விரும்பி அண்ணாமலை ரெட்டியாரோடும் பிரயாணப்பட்டு வரும்போது வழியிலே சாந்தலிங்க சுவாமிகளைக் கண்டு அவருடன் அளவளாவிக் களிகூர்ந்து பின்னர்ப் பொம்மைய பாளையத்தை யடைந்து சிவஞானபாலைய சுவாமிகள் மீது தாலாட்டு முதலிய பிரபந்தங்களைப் பாடி, அவர் திருச்சந்நிதியி லரங்கேற்றி, அச் சுவாமிகளிடத்து ஞானோபதேசம் பெற்று, அஞ் ஞானசாரியரது கட்டளைப்படியே தமது தங்கையாகிய ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டு, அண்ணாமலை ரெட்டியாரைத் துறைமங்கலத்துக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்து, ஞானசாரியரைத் தரிசித்துக்கொண்டு அவ்விடத்திற்றானே யிருந்தார்.

சிலகாலஞ் சென்றபின் ஞானசாரியரிடத்தே விடை பெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து அங்கு வசிக்கும் நாளில், வேதாந்த சூடா

மணி, பிரபுலிங்கலீலை முதலிய பிரபந்தங்களைப் பாடியருளினார். ஞானாசாரியர்மீது திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டு பிரபந்தங்களையும் செய்துகொண்டு, அக்காஞ்சியினின்றும் புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருக்கூவமென்னும் தலத்தையடைந்தார். ஆங்குள்ள வேளாளர் முதலியோர் வேண்டுகோளின்படித் திருக்கூவப் புராணம் பாடி அரங்கேற்றி, அங்குநின்றும் புறப்பட்டு மயூராசலத்துப் பாலசித்தர் மடத்தை யடைந்து, ஞானாசாரியரைத் தரிசனஞ் செய்து, மேற்சொல்லிய பிரபந்தங்கள் அனைத்தையும் அவர் சந்நிதியிலரங்கேற்றி யுடன் வசித்திருந்தனர். பின்னர் விருத்தகிரியை யடைந்து பழமலைநாதரையும் தரிசித்து வணங்கி, அவ்விடத்திலே தம்பொருட்டுச் சிதம்பரபூபதி என்பவரால் கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்து, பழமலைநாதர் மீதும், பெரியநாயகி யம்மையார் மீதும் முறையே பழமலையந்தாதி முதலியனவும், பெரியநாயகி யம்மை விருத்தம் முதலியனவும் திருவாய்மலர்ந்தருளினர்.

இங்ஙனம் இருக்குநாளில், ஞானாசாரியர் இஷ்டலிங்க பரசிவத்திலே கலந்தருளினார் என்பதை அறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் மனங் கலங்கிப், பொம்மபுரத்தை யடைந்து, ஆசிரியர் ஒடுங்கிய குகையுட் சென்று, பலமுறை நமஸ்கரித்துத் துதித்துத், தாம் இயற்றிய கலம்பகத்தையும் சந்நிதியி லரங்கேற்றி, ஞானாசாரியரைப் பாவனாரூபமாக வழிபட்டுக்கொண்டு அங்கே தங்கியிருந்தனர். அற்றைஞான்று நன்னெறி வெண்பா என்னும் நூலை யியற்றியருளினார். பின்னர், மூன்றாம் பட்டத்துச் சுவாமிகளாகிய ஞானாசாரியரிடத்தே விடை பெற்றுக்கொண்டு, திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கடோறும் யாத்திரை புரிந்துவந்தனர்.

அக் காலத்திலே சதுரகராதி செய்த வீரமாமுனிவர் என்பவர் எதிர்ப்பட்டு ஏசுமதமாகிய தம் கொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கஞ் செய்ய, உடனே அக் கொள்கையை மறுத்து ஏசுமதநிராகரணம் எனப் பெயரிய ஓர் நூலை யருளிச்செய்தனர். பிறகு ஒவ்வொரு சிவஸ்தலங்களையும் இவ்விரண்டு வெண்பாக்களாற் றோத்திரஞ் செய்து முடித்து, அவற்றிற்கு க்ஷேத்திர வெண்பா எனப் பெயர் புனைந்து, நல்லாற்றூரை யடைந்து ஞானசாரியரது திருமடத்தில் வீற்றிருந்தார். அங்கு வசிக்கு நாளில், சிவநாம மகிமையும், இஷ்டலிங்கப் பெருமான்மீது அபிஷேக மாலையும், நெடுங்கழிநெடிலும், குறுங்கழிநெடிலும், நிரஞ்சன மாலையும், சீகாளத்திப் புராணத்தில், கண்ணப்பச் சருக்கமும் நக்கீரச் சருக்கமும் செய்தருளி நன்மாணாக்கர்களுக்குக் கல்வி போதித்துச் சிவாநுபவச் செல்வராய்ச் சில காலம் வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம் வயதில், கன்னிமதியில், பௌர்ணிமைத் திதியில இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினார். அப்பொழுது, வேலைய சுவாமிகள்,

"அல்லிமலர்ப் பண்ணவனு மாரியந் தமிழ்கவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான் - முல்லை
யரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப் பாடியருளினார்.

முற்றுப் பெற்றது.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணிமாலை

மூலமும் உரையும்

நால்வர் நான்மணிமாலை என்பது, நால்வரது நான்மணிமாலையென விரியும். இது, பொருட்பிறிதின்கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இனி, இத் தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளும் உடன்றொக்க தொகையாகவும் கொள்ளலாம்; அதற்குப்பொருள், நால்வரைக் குறித்துப் பாடியதோர் நூல் என்பதாம். சைவசமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரையும், திருநாவுக்கரசு நாயனாரையும், சுந்தரமூர்த்தி நாயனாரையும், மாணிக்கவாசக சுவாமிகளையும் பாடியது என்பது கருத்து. நால்வராவார்—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்முதலிய நால்வர். நான்மணிமாலை என்பது - முத்து பவளம் மரகதம் மாணிக்கம் இவற்றாலாகிய மாலை; அஃது உவமையாகுபெயராய் நூலை உணர்த்திற்று. இந்நூல், அந்தாதித்தொடையால் அமைந்த வெண்பாவும் கலித்துறையும் விருத்தமும் அகவலும் உடையது. இதனை,

> "வெண்பாக் கலித்துறை விருத்த மகவல்
> பின்பே சுமந்தா தியினாற் பதுபெறி
> னான்மணி மாலை யாமென நவில்வர்."

என்னும் இலக்கணவிளக்கப்பாட்டியலான் அறிக.

காப்பு

குறள் வெண்பா

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

(இதன் பொருள்.) எ போதும்-எக்காலத்தும், அகத்து-மனத்தின்கண், கை போதகத்தின்-துதிக்கையையுடைய யானை முகத்தையுடைய விநாயகப்பெருமானது, கழல் - திருவடிகளை, நினைவார்க்கு-நினைப்பவர்க்கு, இடர் இல்லை-யாதொரு துன்பமும் இல்லை; (என்றவாறு.)

(விசேடவுரை.) காப்பு - காத்தல்; அஃதிங்குக் காக்கின்ற கடவுள் விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர். சைவசமயிகள் யாதானும் ஓர் நூல் செய்யத் தொடங்குங்கால் முதலில் விநாயக வணக்கம் கூறுதல் மரபாதலால், இந்நூலாசிரியரும் ஆன்றோர் ஒழுக்கத்தைக் கைப்பற்றியே காப்புச்செய்யுளில் விநாயகவணக்கம் கூறினார். இங்ஙனம் கூறுதல் யாதுக்கெனின், தாம் தொடங்கும் நூல் இடையூறின்றி இனிது முடியுமென்பது கருதியென்க. இடையூறு வாராமற் காத்தலால் விநாயகக்கடவுளுக்கு விக்கினவிநாயகர் என்னும் பெயர் வழங்கும். வாழ்த்தல், வணங்கல், பொருளியல்புரைத்தல் என்னும் மூவகை வாழ்த்துள் இக் காப்புச்செய்யுள் பொருளியல் புரைத்தல் என்க.

அகத்தும் என்பதிலுள்ள உம்மை, பிரித்து 'எப்போது' என்பதனோடு கூட்டப்பட்டது. 'எப்போதகத்தும்'என்பதற்கு எக்காலத்தின் கண்ணும் எனப் பொருள் கூறினும் அமையும்; இனி, எவ்வகைப்பட்ட இருதயகமலத்தும் எனப் பொருள் கூறலும் ஒன்று; அதற்கு அகப்போது என மாறுக; எவ்வகை மனமாயினும் நினைப்பின் இடரில்லை எனவே, ஏனைக் காயத்தால் வணங்குவோர்க்கும், வாக்கால்

துதிப்போர்க்கும், இடரில்லையெனப் போதரும். விலங்கினுள் யாளியும் அத்தமுடையதேனும் அத்தியெனக் கூறப்படுவது யானை ஒன்றேயாகலின் அச் சிறப்புத்தோன்ற விநாயகரைப் 'போதகம்'என்றார். கழல் - தானியாகுபெயர்; அதனை யணியும் காலுக்காயினமையின்; அஃது அரவின் படம்போ லமைந்து கொக்கிபோலிருக்கும் ஓர் அணி; வீரத்தின்பொருட்டுக் கட்டுவது. கழல் என்புழி இரண்டாவது தொக்கது. இதனை,

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான." என்பதனாலறிக.

விநாயகப் பெருமானது திருவடிகளை எக்காலத்தும் சிந்தித்திருப்போர்க்கு யாதொரு துன்பமும் அணுகாது என்பது கருத்து.

நூல்

நேரிசை வெண்பா

1. பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு.

(இ - ள்.) பூவால் - தாமரைப் பூக்களால், மலி - நிறைந்த, மணிநீர் பொய்கை கரையின் - பரிசுத்தமான நீரையுடைய தடாகக் கரையில், மொழி ஞானப்பால் உண்டு - (அம்மையாரால் கொடுக்கப் பட்ட) புகழ்கின்ற ஞானப்பாலை உண்டு, மறித்து - மத்தித்து, அமுதாய் - அமுதாக, இயற்பாவால் - தேவாரப்பாக்களால், எம் செவி - எமது காதுகளுக்கு, வார்த்த பிரான் - வார்த்தபிரானாகிய திருஞானசம்பந்தனது, தண்டை - தண்டையணிந்த, வெறி தண் கமலமே - வாசனை பொருந்திய குளிர்ந்த தாமரைபோன்ற திருவடியே, வீடு - அடியேனுக்கு வீட்டைத் தருவதாகும்; (எ - று.)

(வி-ரை.) 'பூ' என்றது தாமரைமலரை; "பூவிற்குத் தாமரையே" என்பதனாலும், "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்பதனாலும், "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே." என இவ்வாசிரியர் இந்நூலிற் கூறியிருப்பதனாலும் அறிக. நூன்முகத்துப் 'பூ' எனக் கூறியது, மங்கலச்சொல்லாதலான். மணி - பரிசுத்தம். 'மணி நீர்' என்பதற்கு முத்துக்களையுடைய நீர் எனினும் அமையும். பொய்கை-பிரமதீர்த்தம். 'இயற்பாவால் மொழி' என்பதற்கு இயற்பாக்களால் துதிக்கப்படுகின்ற எனப் பொருள்கூறி ஞானப்பாலுக்கு அடையாக்கினும் அமையும். மறித்தல்-மத்தித்தல்; திருப்பல் எனினுமாம். ஞானப்பாலுண்டு அதனைத் தாம் மொழிந்த இயற்பாவோடு சேர்த்து எமது செவிக்கு அமுதாய் வார்த்தபிரான் எனினும் அமையும். அவ்வமைவுக்கு, ஆன், "தூங்குகையான் ஓங்கு நடைய" என்புழிப்போல ஒடுவுருபின் பொருளது. எம் செவி - எமது செவியில் என ஏழாவது தொக்கதாகவுங் கொள்ளலாம். அமுதாய் - அமுதாக; எச்சத்திரிபு. இவர், முருகக்கடவுளவதாரமெனப் பல சான்றுக ளிருத்தலின் ஆசிரியர், 'பிரான்' என்றார். கமலம் - ஆகுபெயர்; கமலம்போல்வதனைக் கமலம் என்றதனால். அதிலுள்ள ஏகாரம் தேற்றம். வீடு தருவதனை 'வீடு' என்று உபசரித்தார்.

உமாதேவியாரால் கொடுக்கப்பட்ட ஞானப்பாலை உண்ட திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் திருவடிகளே அடியேன் வீடு பெறுவதற்கு ஏதுவாகும் என்பது கருத்து.

ஆளுடையபிள்ளையார் ஞானப்பாலுண்ட சரிதம்:—

இவர், சோழமண்டலத்திலே, சீர்காழியென்னுந் திருப்பதியிலே, பிராமணகுலத்திலே, கௌணியர் கோத்திரத்திலே, உலகெலாமுய்யத் திருவவதாரஞ்செய்தவர். தந்தையார், சிவபாதவிருதயர். தாயார், பகவதியம்மை. தாய்தந்தையராகிய இவ்விருமுதுகுரவரும் தோணி

யப்பாது திருவடிகளைத் தமது மனத்தில் நிறுத்தி அன்புபூண்டு ஒழுகுபவர். பிள்ளையாரது மூன்றாம் ஆண்டிலே, ஒருநாள் தந்தையார் ஸ்நாநத்திற்குப் போக, பிள்ளையார் அழுது பின்செல்ல, ஆலயத்தின் உட்புறத்திலிருக்கும் தீர்த்தக்கரையில் பிள்ளையாரை இருத்தித் தாம் தீர்த்தத்தினுள்ளே இறங்கி, சங்கற்பம் அகமருஷண சூக்த படன முதலியன செய்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே அப்பா" என்று தம்முடைய புனித வாய் மலர்ந்து அழ, தோணியப்பர் அருள்செய்யத் திருவுளங் கொண்டு, பார்வதி தேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளி, தீர்த்தக்கரையை அடைந்தனர். உமாதேவியார், தம்முடைய திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தை அதிற் குழைத்துக் கையிலே கொடுத்துக் கண்ணீரைத் துடைத்து ஊட்டியருளினர். சிவபாதவிருதயர் சிறிது பொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக் கரையேறிப் பிள்ளையாரைக் கண்ணுற்று, "நீ யார் தந்தபாலை உண்டனை?" எனக் கோபித்து, "எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு" என்று சொல்லி, கையில் எடுத்த ஒரு சிறிய மாறுகொண்டு ஓச்ச, அப்போது பிள்ளையார் ஆனந்தக்கண்ணீர் சொரிய, உச்சியின்மேல் எடுத்தருளிய ஒரு திருக்கை விரலிலே சுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியாரோடு நின்றருளிய பெருமானைக் காட்டி,

"தோடுடைய செவியன்"

என்னும் திருப்பதிகம் பாடியருளினர் என்பதாம்.

பிள்ளையார், சிவன் சத்தி இருவராலும் ஆளப்பட்டமையினாலே ஆளுடையபிள்ளையார் என்னுந் திருப்பெயரும், சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தலினாலே திருஞானசம்பந்தமூர்த்தி என்னுந் திருப்பெயரும் உடையராயினர். (௪)

கட்டளைக்கலித்துறை

2. வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல்
வேந்தபொது
வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான
வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன்
னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப்
படியினுமே.

(இ - ள்.) வீட்டிற்கு - முத்தியடைதற்கு, வாயில் எனும் - (யாவரானும்) ஏது என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, தொடை சாத்து - தேவாரப்பாக்களை (ச்சிவபெருமானுக்கு) அணிந்த, சொல் வேந்த - திருநாவுக்கரசே!, பொது ஆட்டிற்கு வல்லன் - கனகசபையில் நடனஞ் செய்தற்கு வல்லனாகிய சிவபெருமான், ஒருவற்கு - ஆளுடையபிள்ளையார்க்கு, (நாட்டிற்கு இலாத - உலகத்திற்கு இல்லாத,) ஞான அமுது உதவி - ஞானப்பாலைக் கொடுத்து, நாட்டிற்கு இலாத-உலகத்திற்கு இல்லாத, குடர் நோய்-சூலைநோயை, நினக்கு-உனக்கு, முன் நல்கினும் - முற்காலத்துக் கொடுத்தபோதிலும், பாட்டிற்கு - (அச் சிவபெருமான்மீது பாடும்) பாட்டிற்கு, அவனும் நீயும்-அவ்வாளுடைய பிள்ளையாரும் நீயும், எப்படியினும்-எவ்வகையினும், ஒப்பீர் - ஒத்திருக்கின்றீர், என் - (அங்ஙனம் கொடுத்த அச் சிவபெருமானுக்கு) யாது பயன்? (எ-று.)

(வி - ரை.) இவர் அருளிய தேவாரம் ஒவ்வொன்றும் வீட்டு நெறிக்கு ஏதுவாயிற்று என்பார், 'வீட்டிற்கு வாயி லெனுந்தொடை' என்றார். வாயில் - வழியுமாம். இனி, இவர் அருளிய தேவாரம் வீட்டிற்கு நிமித்த காரணமாகிய முதற்பொருளை உணர்தற்கு வழி என்பார், 'வீட்டிற்குவாயிலெனுந் தொடை' என்றார் எனினும் அமையும். வீட்டிற்குவாயி லெனுந்தொடை என்பதற்கு, வீட்டிற்கு

வாயில் என்னும் கருத்தினைக்கொண்ட தேவாரம் எனப் பொருள் கூறலும் ஒன்று. என்னை, இவ்வாசிரியரே பிறண்டும்,

"வேண்டுவார் வேண்டியதே யீவா னென்னும்
வியன்திருநா வுக்கரசின் மாற்றம் பொய்யோ"

எனக் கூறுதலானும் அறிக. பொது - ஈண்டுக் கனகசபை. இனி, பொதுவாகப் பேசுதலில் வல்லனாகிய சிவபெருமான், ஒருவனுக்கு ஞானப்பாலைக் கொடுத்து, இதுகாறும் நாட்டில் இல்லாத குடர்நோயை உனக்கு முன்கொடுத்தாலும், எனது பாட்டிற்கு நீயும் அவ்வாளுடைய பிள்ளையாரும் எவ்வகையினும் ஒத்திருக்கின்றீர் எனப் பொருள் கோடலும் ஒன்று. 'நாட்டிற்கிலாத' என்பது, தாப்பிசைப் பொருள்கோளாதலின், ஞானவமுது என்பதற்கு முன்னும் கூட்டப்பட்டது. நாட்டிற்கு - வேற்றுமைமயக்கம்; அது, நான்காவது ஏழாவதன்கண் வந்தது. குடர் - குடல் என்பதன் போலி. 'நல்கினும்' என்பதில், உம்மை - இழிவுசிறப்பு. ஆன்மாக்கள், தம்மை இயக்கினன்றித் தாமே இயங்குந் தன்மையின்மையின் ஆடுவார் போன்று பொதுவினின்று அவற்றை ஆட்டுவிப்பார் என்பார், 'பொதுவாட்டிற்குவல்லன்' என்றார். எவ்வகை நோயினும் இந்நோய் மிகக் கொடிதென்பார், 'நாட்டிற்கிலாத குடர்நோய்' என்றார். பொதுவிலிருந்தும் தாம் ஒருபாற்கோணி ஒருவற்கு நன்மையும் மற்றொருவற்குத் தீமையும் செய்தலான் குறைபாடு அவர்க்கேயன்றி நமக்கு இல்லை என்பார், 'நல்கினும் என்' என்றும் கூறினார். சிவபெருமான் வேறுபாடாக நல்கினும், இருவரையும் வழிபட்டுய்தற்குரிய என் தகுதிக்கு நீவிரிருவரும் எவ்விதத்திலும் ஒப்பாவீர் என்பதும் ஒன்று. என் பாட்டிற்கு - என் தகுதிக்கு. (பாடு - தகுதி.)

திருநாவுக்கரசு நாயனருக்குக் குடர்நோய் நல்கிய சரிதம்:—

இந்நாயனார், தம் தாய்தந்தையர் சிவபதமடைந்தபின், தமக்கையாராகிய திலகவதியாரைக் கைவிட்டுச் சைவசமயத்தினின்றும்

சமணசமயத்திற் புக்குத், தருமசேனர் என்னும் பெயர் பெற்றிருந் தனர். அதுகண்ட திலதவதியார் திருவதிகை வீரட்டானேச் சுரனை இரந்து வேண்ட, அப்பெருமானும் அவ்வேண்டுகோளுக் கிணங்கி, அவ்வம்மையின் கனவிலே தோன்றி, "அம்மா! நீ உன் மனக்கவலையை ஒழி; உன் தம்பி, நம்மை அடையும் பொருட்டே முன் தவஞ் செய்துளான்; அத்தவத்தில் சிறிது வழுவுற்றதினால் அன்னிய மதத்திலே பிரவேசித்தான்; இனி அவனைச் சூலைநோயி னால் வருத்தி ஆட்கொள்வோம்" என்று சொல்லி மறைந்தனர். அவ்வாறே தருமசேனர் வயிற்றில் கொடிய சூலைநோயுண்டாகிக் குடலைக் குடைதலுற்றது. அதனால் அவர் வருந்தித் தமக்குக் கை வந்த மந்திரோச்சாரணத்தால் தடுக்கவும், அந்நோய் தடைபடாமல் மேற்கொள்ள, சர்ப்பவிடந் தலைக்கொண்டாற்போல மயங்கி மூர்ச் சையடைந்தனர். அதுகண்ட சமணர் பலர், கமண்டலஜலத்தை அபி மந்திரித்துக் குடிப்பித்தும், மயிற்பீலிகொண்டு தடவியும், நோய் தணியாமல் முன்னிலும் அதிகப்பட, அவர்கள் "இதனை நீக்குதற்கு யாம் வல்லமல்லோம்" எனக்கூறிக் கைவிட்டுப்போயினார்கள். பின், தருமசேனர் தம்முடைய சகோதரியாகிய திலதவதியாரை நினைந்து, 'அவரே தமக்கு உதவிசெய்ய வல்லர்' எனத் துணிந்து தம்முடைய பாகுகனை அவரிடத்திற் கனுப்பினார். அப்பாகுகன் திருவதிகையிற் சென்று செய்தியைத் தெரிவிக்க, அவ்வம்மையார், "சமணர்க ளுடைய பள்ளிக்கு யான் வாரேன்" என்றனர். அச் செய்தியைப் பாகுகன் தருமசேனருக்குத் தெரிவிக்க, தருமசேனர், சிவபெருமா னுடைய திருவருள் கூட்டுதலால், தமக்குக் கைதந்து வருகின்றவர் களைப் பற்றிக்கொண்டு, இரவிலே ஒருவருங் காணாதபடி திருவதிகை யிற் சென்று, திலதவதியாரை அணுகி, "தமியேன் உம்மையே கதி யென்று அடைந்தேன்; இனிக் கரையேறும் வழியை அருள்செய் யும்" என விண்ணப்பித்து, அவர் பாதத்திலே விழுந்து அயர்ந்தனர். திலதவதியார் தம்பியாரை நோக்கித் தமக்குப் பெருமான், கனவிலே

அருள்செய்தபடி முடிந்ததை கினைந்துருகி, அஞ்சலித்து, "இது திருவருட் செயலேயாகலான், அப்பெருமானையே வணங்கி அவருக்கே திருத்தொண்டு செய்யும்" என வுபதேசித்துத் திருவருளை நினைந்து, ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஓதி விபூதியைக் கொடுக்க, நாயனர் அதனை அன்போடு வணங்கி வாங்கிச் சரீரமுழுதிலும் அணிந்துகொண்டனர்.

திலதவதியார், திருப்பள்ளி யெழுச்சியிலே, திருவலகு திருமெழுக்குத்தோண்டி யெடுத்துக்கொண்டு, திருக்கோயிலுக்குத் தம்பியாரை அழைத்துக்கொண்டு போனர். தம்பியார் வீரட்டானேசுவரரை வலம்வந்து, சந்நிதானத்தில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அப்பெருமானுடைய திருவருளினலே தமிழ்ச் செய்யுள் பாடுஞ் சத்தி உண்டாகப்பெற்று, தம்முடைய சூலைநோய் நீங்கும் பொருட்டும், பிற்காலத்திலே அன்போடு ஓதுகின்ற யாவருடைய துன்பமும் நீங்கும்பொருட்டும், சிவபெருமான்மீது,

"கூற்றுயினவாறு விலக்ககிலீர்
　　கொடுமைபல செய்தனநானறியே
னேற்றுயடிக்கே யிரவும்பகலும்
　　பிரியாதுவணங்குவ னெப்பொழுதும்
தோற்றுதென்வயிற்றி னகம்படியே
　　குடரோடுதொடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக்கெடில
　　வீரட்டானத் துறையம்மானே."

என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது நாயனர், தமக்கு உயிரையுந் தந்து முத்திநெறியையுந் தந்த சிவபெருமானுடைய கருணைக்கடலில் அழுந்தி, ஆனந்தக்கண்ணீர் சொரிய நிலத்திலே விழுந்து புரண்டு "சமணசமயப்படு குழியில் விழுந்து மயங்கிய் பாவியேன், இப்பேரின்ப வாழ்வைப்

பெறும்படி செய்த சூலைநோய்க்குக் கைம்மாறென்செய்வேன்" என்றார். அப்பொழுது வீரட்டானேசுவரருடைய திருவருளினால், "நீ அற்புத சின்மய அதிமதுரமாகிய தேவாரப்பதிகத்தைப் பாடினபடியால், உனக்கு நாவுக்கரசு என்னும் பெயரே வழங்குக" என ஓர் அசரீரி வாக்குத் தோன்றிற்று. திருவதிகையிலுள்ள யாவரும் அதனைக் கேட்டு, "திருநாவுக்கரசுநாயனார், சமணசமயம் பொய்மார்க்கம் என்பது புலப்படும்படி சைவசமயத்திலே பிரவேசித்துத் திருவருள் பெற்றபடியால் உலகம் உய்ந்தது உய்ந்தது" என்று சொல்லிக் களிப்புற்றார்கள். (உ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

3. படியிலா நின்பாட்டி லாரூர நனிவிருப்பன்
பரம னென்ப [தாட்
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச னினைத்தடுத்
கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத்
தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன்றமையால்
விளங்கு மாறே.

(இ - ள்.) ஆரூர - நம்பியாரூரனே!, வான் தொழும் ஈசன்-தேவர்கள் தொழுகின்ற சிவபெருமான், நினை - நின்னை, தடுத்து ஆட்கொண்டும் - திருமணஞ் செய்யாவண்ணந் தடுத்து அடிமை கொண்டும், அன்றி - அஃதல்லாமல், தொடி உலாம் - வளைகள் பொருந்தியுள்ள, மென் கை மடமாதர்பால் - மெல்லிய கைகளையும் மடமையையுமுடைய பெண்களிடத்து, நினக்காக - நின்பொருட்டு, தூது சென்றும் - தூதுபோகியும், மிடி இலா - வறுமையில்லாத, மனைகள்தொறும் - வீடுகள்தோறும், இரந்து இட்டும் - அன்னம் ஏற்றுக்கொடுத்தும், உழன்றமையால் - நின்பின் திரிந்தமையாலும்,

நின் படி இலா பாட்டில் - நினது ஒப்பில்லாத பாட்டில், பரமன் கனி விருப்பன் என்பது - அப்பெருமான் மிக விருப்பமுடையன் என்பதை, அடியேன் - அடியேன், விளங்குமாறு - விளங்கும்படி, அறிந்தனன் - யான் ஆராய்ந்து அறிந்தேன்; (எ - று.)

(வி - ரை.) ஏனைய பாக்கள்போலாது பத்திரசமேயன்றிச் சிங்கார முதலிய ரசங்களும் நம்பியாரூரர் திருப்பாட்டில் குடிகொண்டன வென்பார், 'படியிலா நின்பாட்டு' என்றார். படி - ஒப்பு. ஆரூரஅண்மைவிளி. சிவபெருமான், நரை திரை மூப்பு மிக்க அந்தணவுருக்கொண்டு புத்தூருக்கும் திருவெண்ணெய்நல்லூருக்கு முழன்று, அந்தணர் அவைமுன் வல்வழக்கிட்டுச் சாதித்து அடிமைகொண்டதும், திருவொற்றியூரிலும் திருவாரூரிலும் நாச்சிமாரிருவரையும் கூட்டுவித்தற்பொருட்டு, சங்கிலியார் கனவிற் றூது சென்றதேயன்றிப் பரவையாரிடத்தும் எழுது கண்படுக்கும் பானாளில் அடிமலர் சிவக்க ஒருகாலன்றி இருகாற் றூது சென்றும், திருக்கச்சூரில் கடும்பகற் பொழுதில் இடும்பலிவேண்டிச் செல்வர் மனை தொறுஞ் சென்று இரந்து அமுது அளித்ததும், பாட்டின் விருப்பானன்றிப் பிறிதொன்றானன்று என்பார், 'பாட்டில் நனிவிருப்பன் பரமன்' என்றார். பரமன் என்பது, எவர்க்கும் முதற்கடவுள் என்பதை விளக்கிற்று. 'என்பது' - என்று சொல்லுதல்; இது பிறர் கூற்று. பிறர் கூற்றாற் றுணிதலின்றி, யானே இவ்வேதுக்களால் ஐயமின்றித் துணிந்தனன் என்பார், 'விருப்பன் என்பது உழன்றமையால் விளங்குமாறு அறிந்தனன்' என்றார். விளங்குமாறு - விளங்கும்படி; ஆறீற்று வினையெச்சம். வான் - இடவாகு பெயராய்த் தேவர்களை உணர்த்திற்று. ஈசன் என்றது சிவபெருமானை. சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்டது, திருவெண்ணெய் நல்லூரில் நிகழ்ந்த திருமணத்தில் என்க. தொடியுலா மென்கை மடமாதர் என்றது, பரவைநாச்சியாரும்

சங்கிலிநாச்சியாருமாகிய இருவரை. இனி, மாதர் என்பதில் அர் போலியாக்கிப் பரவைநாச்சியாரை மாத்திரங் கூறுதலும் ஒன்று; சிவபெருமான் தூதுசென்றமை பிரசித்தமாதலான். மகளிர்க்கு அணி பலவற்றுள்ளும் வளையல் இன்றியமையா அணியாதலான், 'தொடியுலா மென்கை மடமாதர்' என்றார். இதனை,

> "இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய
> விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை
> மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனின்
> அரும்பிய முலையினார்க் கழகுண் டாகுமோ."

என் வரும் திருவிளையாடற்புராணம் வளையல்விற்ற படலச் செய்யுளா னுணர்க. தொடி-வளையல். பரமன் நின்பாட்டில் கனிவிருப்பமுடைமையாலும், நட்பு மிகுதியாலும், தம்பிரான் தோழன் என்பதனாலும், தானே நீயாயிருத்தலினாலும், நின் கருமம் தன் கருமமாக எண்ணுதலாலும் 'நினக்காகத் தூதுசென்றும்' என்றார். தூதுசெல்லுதல்-தூது மொழிகளைச் சொல்லச் செல்லுதல், தானே வகுத்துக் கூறுதல், கூறியது கூறுதல் எனத் தூது இருவகைத்து. அவற்றுள் இது, முந்தியது. வறிஞர் மனையில் செல்லின் இன்னடிசிலும் இனிய கறிகளும் கிடைக்காவாகலின், செல்வர் மனைகடோறும் தேடிச் சென்று யாசித்தனர் என்பார், 'மிடியிலா மனைகடொறும் இரந்திட்டும்' என்றார். மிடியிலா மனைகள் என்பது, இடத்திலுள்ளார் தன்மை, இடத்தின்மேல் ஏற்றப்பட்டதென்க. இரந்து இட்டு - யாசித்து (அமுது) அளித்து; ஒரு சொன்னீர்மைத்தாகக் கொள்ளுதலும் ஒன்று. சுந்தரமூர்த்திசுவாமிகள் திருக்கைலையினின்றும் பூமியில் அவதரிக்குங்கால்,

> "செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
> மையன் மானுட மாய்மயங் கும்வழி
> ஐயனேதடுத் தாண்டருள் செய்யென"

வேண்டியார்க்கு, ஆட்கொண்டும், தூதுசென்றும், இரந்திட்டும் சாத்தமை முதலிய புலப்படுப்பார், 'ஈசன்' என்றார். ஈசன் என்பது, அடியார்க்கு மறுமையின்பமும் அருள்பவன் என்பதை விளக்கிநின்றது. மடமாதர் என்புழி, மடமை - பிறர் உணர்த்துவதை உட்கொள்வதன்றித் தாமுணர்ந்ததை வெளியிடாமை; மடப்பத்தையுடைய மாதர் எனினும் அமையும்; அப்பொருட்கு, மடம்-மென்மை; அழகுமாம். இனி, மடவம் என்பதன் கடைக்குறையாகக் கொண்டு, இளமையுடைய மாதர் எனலும் ஒன்று. கொண்டும், சென்றும், இரந்திட்டும் என்பவற்றிலுள்ள உம்மைகள் மூன்றும் எண்ணின்கணின்ற உயர்வுசிறப்பு; இனி, தடுத்தாட்கொண்டு உழன்றமையாலும், தூது சென்று உழன்றமையாலும் என உம்மையைப் பிரித்து, உழன்றமையால் என்பதனோடு சேர்த்து, அவ்வுழன்றமை என்பதனை கடைநிலைத்தீபகமாக ஆங்காங்குக் கூட்டிப் பொருள்கொள்ளுதலும் ஒன்று.

சுந்தரமூர்த்திநாயனாரைத் தடுத்தாட்கொண்ட சரிதம்:—

சுந்தரமூர்த்திநாயனார், திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே, ஆதிசைவ குலத்திலே, சடையனார் என்னும் சிவாசாரியருக்கு அவருடைய மனைவியாராகிய கற்பிலே சிறந்த இசைஞானியார் என்பவரிடத்திலே அவதரித்தனர். தாய்தந்தையர் நம்பியாரூரர் என்று நாமகரணஞ் செய்தார்கள். இவரது அரிய செயலைக் கண்டு திருமுனைப்பாடிநாட் டரசராகிய நரசிங்கமுனைய ரென்பவர் தாய் தந்தையர் உத்தரவுபெற்று இவரை வளர்த்துக்கொண்டார். நம்பியாரூரர் உபநயனஞ் செய்யப்பெற்று,வேதங்களை அத்தியயனஞ்செய்து, சகல கலைகளிலும் மகாபாண்டித்திய முடையராய், விவாகஞ் செய்தற்குரிய பருவத்தை அடைந்தார். அதுகண்டு சடையனார், ஆதிசைவகுலத்திலே சடங்கவிசிவாசாரியருடைய புத்திரியை மணம்பேசிமுடித்து,விவாகத்திற்குச் சுபதினமும் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துப், புத்தூருக்குச் சென்று நம்பியாரூரரை அலங்கரித்துத் திருக்கல்யாணப் பந்தலில் ஆசனத்தி லிருக்கச்செய்தார். நம்பியாரூரர், ஆக

னத்தி லிருக்குந் தறுவாயில், சிவபெருமான், தாம் கைலாசத்திலே இவ்வாலாலசுந்தரர்க்கு வாக்களித்தபடி, அவரை ஆட்கொள்ளும் பொருட்டு ஒரு வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு அவ்விடத்திற் செழுந்தருளி, யாவருங் காண நம்பியாரூரரை நோக்கி, "எனக்கும் உனக்கும் ஒரு வழக்கிருக்கின்றது; அது முடிந்தபின்பே நீ விவாகம் நடத்தல்வேண்டும்" என்று அருளிச்செய்தார். நம்பியாரூரர் திடுக்கிட்டு, அங்ஙனம் உள்ளதேல் அதனை முடித்தன்றி யான் விவாகஞ் செய்யேன் என்று சொல்ல, அந்த ஐயர் யாவரையும் நோக்கி, "இந்தத் திருநாவலூரான் எனக்கு அடியவன்; இவன் பாட்டன் எனக்கு எழுதித்தந்த அடிமையோலை இதுவே" என்றார். உடனே நம்பியாரூரர் "பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் எங்கேனும் உண்டோ?" என்று சொல்லி, அவர் கையிலிருக்கும் ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்தனர். ஐயர், சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு சபையாரை நோக்கி "இது முறையோ" என்று சத்தமிட, சபையார்கள், "பிராமணரே! நீர் எங்குள்ளவர்?"என்ன,ஐயர், "நாம் இருப்பது இந்தத் திருவெண்ணெய்நல்லூர்"என்றனர். பிராமணர்கள் யாவரும் நீர் இருப்பது இந்தத் திருவெண்ணெய்நல்லூராயின், அங்குத்தானே இவ்வழக்கைப்பேசித் தீர்ப்புச்செய்ய வாரும் என்று சொல்ல, ஐயர் அவ்வாறே அவர்களுடன் திருவெண்ணெய்நல்லூருக்குச் சென்று பிராமணர்களுடைய சபையில் நடந்தவற்றைச் சொல்லி, மூலவோலையைக் காட்டி, அனுபவம் லிகிதம் சாக்ஷி என்னும் மூன்றினாலும் வழக்கை வென்று, தமக்கு இருப்பிடமாக அவ்வூரில் திருவருட்டுறை என்னும் சிவாலயத்தைக் காட்டி, அதினுட்புகுந்து மறைந்தனர். உடன்சென்ற பிராமணர்கள் யாவரும் ஐயரைக் காணாது திகைத்து நின்றார்கள். அப்போது, சுந்தரமூர்த்தி நாயனார், தம்முடன் வல்வழக்கிட்டுத் தம்மை அடிமைகொண்டவர் சிவபெருமானே எனத்தேர்ந்து, அத்தியந்த ஆசையோடு அவரைத் தனியே தொடர்ந்துபோய்க் கூப்பிட, பெருமான் இடபவாகனத்தின்மேல் உமாதேவி சமேத

நாய் வெளிப்பட்டு, சுந்தரமூர்த்தி நாயனாருக்கு, "நீ நமக்குத் தொண்டனாயிருந்து பெண்கள்மேல் இச்சைவந்ததினால் நம்முடைய ஆஞ்ஞையின்படி பூமியிலே பிறந்தாய்; இப்பொழுது துன்பத்தைத் தருகின்ற சமுசார பந்தமானது உன்னைத் தொடராதபடி நாமே வலிய வந்து ஆட்கொண்டோம்; நம்முடன் நீ வலிந்து பேசினமையால் வன்றொண்டன் என்னும் பெயர் பெற்றனை; நமக்கு அருச்சனையாவது பாட்டேயாதலின் தமிழ்ப்பாக்களைப் பாடுக" என்று அருளிச் செய்தனர். அதற்கு நாயனார் "என்சொல்லிப் பாடுகேன்?" என்ன, கடவுள், "நீ முன்னே என்னைப் பித்தனென்றாய்; அதனையே அடியாக வைத்துப் பாடுக" என்ன, உடனே நாயனார், "பித்தா பிறைசூடி" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். கடவுள், நாயனாரை நோக்கி, "தொண்டனே! நீ இன்னும் நமது புகழைக் குறித்துப் பலவகையாகப் பாடுக" என்று அருள்செய்து மறைந்தனர்.

திருவொற்றியூரில் சிவபெருமான் சங்கிலிநாச்சியாரிடத்துத் தூது சென்றமையை,

"ஆண்டு கொண்ட வந்தணனா ரவருக் கருளிக் கருணையினா
னீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானி னிறைமதியந்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ்சங் கிலியாராந்
தூண்டு சோதி விளக்கனையார் தம்பாற் கனவிற் றோன்றினார்."

"தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமா
யாற்ற வன்பு பொங்கியெழுந் தடியே னுய்ய வெழுந்தருளும்
பேற்றுக் கென்யான் செய்வதெனப் பெரிய கருணை பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியருந் நேர்நின் றருளிச் செய்கின்றார்."

"சாருந் தவத்துச் சங்கிலிகேள் சால வென்பா லன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரி
லியாரு மறிய யானாள வுரியா னுன்னை யெனையிரந்தான்
வார்கொண் முலையாய்! நீயவனை மணத்தா லணைவாய் மகிழ்ந்தென்றார்."

என வரும் பெரியபுராணச் செய்யுட்களான் உணர்க.

சிவபெருமான் பரவைநாச்சியாரிடத்துத் தூது சென்றது:—

சுந்தரமூர்த்தி நாயனார், திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்ட செய்தியைக் கேட்டு, மிக்க கோபங் கொண்டிருந்த, முதல் மனைவியாராகிய பரவையார், நாயனார் தம்மிடம் வருதற்கு உடன்படாமல், 'வந்தால் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்வேன்' என்றிருக்க, அதனையறிந்த நாயனார் பரமசிவனைத் தியானிக்கலுற்றனர். அப்பெருமான் ஓர் ஆதிசைவ வடிவங்கொண்டு, நள்ளிருளில் பரவையார்பாற் றூது சென்று, அவ்வம்மையாரது ஊடலைத் தணிவித்து, நாயனாரை அவரிடத்துப் போம்படி செய்தனர் என்பதாம்.

திருக்கச்சூரில் சிவபெருமான் இரந்து அன்னம்படைத்த சரிதம்:—

சுந்தரமூர்த்தி நாயனார், திருக்கச்சூரிற் சென்று, ஆலயத்துட் புகுந்து பெருமானைத் தரிசித்து, புறத்திலே வந்து, அமுதுசெய்யும் பொழுதாகியும் பாகம்பண்ணப் பரிசனங்கள் வாராமையால் மிக்க பசியினால் மதிற்புறத்தில் இருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஓர் அந்தணராகி, அவரிடத்திற் சென்று, "நீர் பசியினால் இளைப்புற்றிருக்கின்றீர்; யான் உமக்கு அன்னம் யாசித்துவருவேன்; நீர் எங்கும் போகாமல் சிறிதுபொழுது இங்கேயிரும்" என்று சொல்லி, அவ்வூரிலுள்ள பிராமண வீடுகளில் அன்னம் யாசித்துக்கொண்டு வந்து நாயனாருக்குக் கொடுக்க, நாயனார் மகிழ்ச்சியோடு பெற்றுத் தாம் தம் தொண்டர்களுடனே அமுதுசெய்தார், உடனே பெருமான் அந்தணவுருக் கரந்து மறைந்தருளினார். நாயனார் அதுகண்டு அன்னம் படைத்தவர் பெருமானேயென் றுணர்ந்து மனங் கசிந்துருகி,

"முதுவா யோரி கதற முதுகாட்
டெரிகொண் டாடன் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகடன் மணவாளா!

கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டா லடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூ
ராலக் கோயி லம்மானே."

என்னுந் திருப்பதிகம் பாடியருளினார் என்பதாம். (௩)

நேரிசையாசிரியப்பா

4. விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவி ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

(இ - ள்.) விளங்கு இழை - விளங்குகின்ற ஆபரணத்தை யுடைய உமாதேவியார், பகிர்ந்த-பங்கிட்டுக்கொண்ட, மெய் உடை-திருமேனியையுடைய, முக்கண் காரணன் - மூன்று கண்களை யுடைய உலககாரணனாகிய சிவபெருமானது, உரை எனும் - திருவாக்கு என்று சிறப்பித்துச் சொல்லும், ஆரணமொழியோ - வேத வாக்கோ, ஆதி சீர் பரவும் - அச் சிவபெருமானது சிறப்பைத் துதிக்

கின்ற, வாதவூர் அண்ணல் - திருவாதவூர்த் தலைவராகிய மாணிக்க வாசகரது, மலர் வாய் பிறந்த - செங்குமுதம்போன்ற வாயினின்றும் உண்டான, வாசகத்தேனோ - திருவாசகமாகிய தேன்தானோ, சிறந்தது - மேன்மையுடையது, யாதோ என்குவீராயின் - யாதோ என்று வினவுவீரேல், மன்பதை உலகில் - மக்கட் பரப்பையுடைய இவ்வுலகத்தில், வேதம் (பலகால்) ஓதின் - வேதத்தைப் பலமுறையோதினாலும், (அது கேட்டு), விழிநீர் பெருக்கி - கண்களினின்றும் நீரைப் பெருகச்செய்து, நெஞ்சம் நெக்குருகி - மனம் குழைந்துருகி, நிற்பவர் காண்கிலேம் - நிற்கின்றவர்களை (யாம்) கண்டிலம்; திருவாசகம் - திருவாசகத்தை, ஒருகால் ஓதின் - ஒருமுறையோதினாலும், கருங்கல் மனமும் - கருங்கல்லைப்போன்ற மனமும், கரைந்து உக - உருகிக்கசிய, தொடு மணல் கேணியில் - தோண்டுகின்ற மணற்கேணி சுரக்குமாறுபோல, கண்கள் நீர் சுரந்து - கண்கள் நீர் பெருகி, பாய - (சுற்றும்) பாய, மெய் மயிர் - உடலிலுள்ள மயிர்கள், பொடிப்ப - சிலிர்க்க, விதிர்விதிர்ப்பு எய்தி - நடுநடுக்கமடைந்து, அன்பர் ஆகுநர் அன்றி - அன்பர் ஆகுபவரல்லது, மற்றையர் இலர் - அன்பர் ஆகாரிலர்; (எ - று.)

(வி-ரை.) உமாதேவியார், தமக்கும் சிவபெருமானுக்கும் உள்ள பேதமின்மையை ஆன்மாக்களுக்குப் புலப்படுத்துவான் தவங்கிடந்து அச் சிவபெருமானது வாமபாகத்தைப் பெற்றனர் என்பார், 'விளங்கிழை பகிர்ந்தமெய்' என்றார். விளங்கிழை - விளங்குகின்ற ஆபரணத்தையுடையாள் (உமாதேவி); வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பகிர்ந்த - செம்பாதியாகக் கொண்ட. மெய்யுடை முக்கட்காரணன் என்பதற்கு, மெய்யையும் சோமசூரியாக்கினிகள் என்னும் மூன்று கண்களையுமுடைய முதற்கடவுள் எனலும் ஒன்று. ஆதி - சிவபெருமான். ஆரணமொழியோ - வேதமொழியோ; ஓ-வினா. வாதவூர் என்பது வாயு பூசித்த தலம்; இது

பாண்டிநாட்டி லுள்ளது; இவ்வூரில் மணிவாசகப் பெருமான் அவதரித்தமையால் 'வாதவூரண்ணல்' எனப்பட்டார். இனி, எவரால் எந்நகர் விளக்கமுற்றதோ அவரை அந்நகர்த்தலைவ ரென்றல் ஆன்றோர் வழக்காகலின் 'வாதவூரண்ணல்' என்றார் எனினும் அமையும். இதனை,

"கொச்சைக் கிறைவன் சிவஞான சம்பந்தன்"

எனப் பிறர் கூற்றானு மறிக. வேதம், தம் வழி நிற்பார்க்கு இன்பத்தையும் நில்லார்க்குத் துன்பத்தையும் பயக்கியும், விதிவிலக்குகளை அனைவர்க்கும் உணர்த்தியும், உண்மையுணர்வு கொளுத்தியும், இகபரங்களைத் தருதற்கே இறைவரால் அருளிச்செய்யப் பட்டன வென்பார், 'காரண னுரையெனு மாரண மொழியோ' என்றார்; இனி, பராமுகமாகக் கூறினர் எனினும் அமையும். மலர்வாய் என்பதற்கேற்ப, வாசகத்தேனோ என இயைபு உருவகஞ் செய்யப்பட்டது. தேனோ என்புழி ஓகாரம் வினா. திருவாசகம் மனத்திற்கினியதும் செவிக்கினியதும் வாய்க்கினியதுமாகி, மலர்த்தேனை யொப்ப இனித்தும்; எவரையும் சிவானந்தமயமாக்குவதும் என்பார், 'மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ' என்றார். அன்பை விளைத்தலில், ஆரணம் சிறந்ததென்பது சித்தாந்தமன்று எனவும், திருவாசகம் சிறந்ததென்பது சித்தாந்தமாமெனவும் கூறும் அக்குறிப்புத் தோன்ற 'ஆரண மொழியோ வாசகத் தேனோ யாதோ சிறந்தது' என்றுங் கூறினர். இனி, வேதத்தினும் திருவாசகம் சிறந்ததென்பது, வாசகத்தேன் என உருவகித்தமையாலும் விளங்கும். பெருக்கி உருகி நிற்பார் எனச் சினைவினை முதலொடு செறிந்தது. வேதமோதின் அதன் உண்மைப்பொரு ளறிந்தார் சிலர் எவ்விடத்தேனும் அரிதாக மனமுருகி நிற்றலும் கூடுமேனும் எமக்குப் பிரத்தியக்ஷமின்று என்பார், 'உருகி நிற்பவர்க் காண்கிலேம்' என்றார்.

மலரிற் பிறந்த தேன் என்பதோர் நயந் தோன்றுதற்கும், இவர் நூலில் ஞானவாணி குடிகொண்டமையை நாட்டுதற்கும் வாய் என

வேண்டாது கூறினர். என்குவீராயின் - என்குவீரேல்; இஃது, ஒரு சொன்னீர்மைத்து: கு - சாரியை. கருங்கல்மனமும் என்புழி மலரன்மையின் இழிவின் மிகுதியைத் தெரிவிக்கின்றமையால் உம்மை இழிவு சிறப்பு. தொடு மணற்கேணி-வினைத்தொகை. கண்கள் நீர் சுரந்து பாய என்பது, பாய்தல் என்னும் இடத்தின் நிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது; "ஊருணி நீர்நிறைந்தற்று" என்புழிப்போல. மயிர் பொடித்தல் - மயிர் கூச்செறிதல். 'விதிர்விதிர்ப்பு' என்பது, இரட்டைக்கிளவி; இதனை,

"இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா."

என்பதனு லறிக. ஓதுவோரும் கேட்போரும் அன்பின் பயனாகும் முத்திப்பேறடையாதலை முன்னர்த் தனித்தனி கூறுபவாகலின் அன்பராகுமென்றது அவ்விரு திறத்தினரையும் என்க. மற்றையர்-அன்பராகாதார்; இது சுட்டியதற் கினம்.

உமாதேவியார் சிவபெருமானது மெய்யைப் பகிர்ந்துகொண்ட சரிதம்:

பிருங்கிமுனிவர், பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷிணம் செய்யக் கண்ட உமாதேவியார், நாயகனை நோக்கி, "பிருங்கிமுனிவர் என்னைப் பிரதக்ஷிணம் செய்யாமைக்குக் காரணம் யாது?" என வினவ, அதற்குப் பெருமான், "இஷ்டசித்தி பெற விரும்புமவர் உன்னையும், மோக்ஷம் பெற விரும்புமவர் என்னையும் வழிபடுவர்" என, அது கேட்ட தேவியார் பெருமானிடத்தினின்றும் என்றும் பிரியா திருக்குமாறு தவம்புரிந்து பெற்றனர் என்பதாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் பாடினமை:—

சிவபெருமானால் ஆளப்பட்டு ஆளுடைய அடிகள் என்னும் பெயரையுடைய வாதவூரர், சிதம்பரத்தில் வந்துதங்கித் திருப்படை

யாட்சி முதலியவைகளைப் பாடி சிவானந்தப் பெருவாழ்வை யுடையவராயிருக்கும்நாளில், ஒருநாள் பொன்னம்பலமுடையார் வேதியவுருக்கொண்டு ஒரு புத்தகத்தைக் கையிலேந்திச் சிவந்த திருவடிகள் நோவ எழுந்தருளி எதிராக நின்றார். நின்ற வேதியரைத் திருவாதவூரர் பார்த்து, "இரும்" என்று சொல்ல, அவர் இருந்தபின்பு "வேத வேத்தியரே! நீவிர் யாண்டுள்ளவர்; இங்கு வந்த காரியம் யாது?" என வினவ, வேதியர், "சிற்சபையிலாடுகின்ற கடவுளைப் பத்தியினால் நீர் பாடிய தமிழ்ப்பாடல் முழுமையும் ஓதவேண்டு மென்று இங்கு வந்தேன்; அப்பாடல்களை யான் எழுதிக்கொள்வேன்" என்றார். வாதவூரரும் அதற்கிசைந்து திருவாசகத்தைச் சொல்லினர். சொல்லிய பாடல்களை யெல்லாம் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற கடவுளானவர், தமது அருமைத் திருக்கரத்தால் ஏட்டில் தெளிவாய் எழுதின பின்பு, வாதவூரரைப் பார்த்து, "சபாநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒருகோவை பாடவேண்டும்" என்றார். அங்ஙனமே வாதவூரரும் பாட, அதனையும் பெருமான் எழுதிமுடித்து, முடிவில், "திருவாதவூரர் சொல்லிய இந்தத் திருவாசகம் பொன்னம்பலத்திலே நிருத்தம் செய்கிற அழகிய திருச்சிற்றம்பல முடையான் கையெழுத்தாம்"என்று மைக்காப்புமிட்டு வாதவூரர் பெருமையை யாவருக்கும் அறிவிக்க நினைத்து, அம்பலத்தின் வாசற்படியில் திருவாசகத் திருமுறையை வைத்து மறைந்தருளினார். பூசை செய்யும் ஓர் அந்தணன் அத்திருமுறையைக் கண்டு தில்லையிலுள்ளார்க்குத் தெரிவிக்க, அவர்களும் "இஃதென்ன வதிசயம்" என்று ஓடோடி வந்து அப்புத்தகத்தைப் பார்த்தார்கள். அதன் இறுதியில் 'திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து'என்று இருத்தலையுங் கண்டார்கள். உடனே வாதவூரரிடம் சென்று இதன் பொருளைக் கேட்டார்கள், அவர், "இத்தமிழ் நூலுக்குப் பொருள் இவர்தாம்" என்று சபாநாயகரைக் காட்டிச் சபையிலே எல்லோருங் காண மறைந்தருளினார் என்பதாம். (௪)

நேரிசை வெண்பா

5. இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ! முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு.

(இ - ள்.) சம்பந்தா - திருஞானசம்பந்த மூர்த்தியே! இலை படர்ந்த - தாமரையிலைகள் பரவிய, பொய்கையிடத்து - தடாகக் கரையில் (பிரமதீர்த்தக் கரையில்), அழுதல் கண்டு - (நீ) அழுதலைப் பார்த்து, முலை சுரந்த - திருமுலைப்பால் சுரந்த, அன்னையோ - அன்னையாகிய அம்பிகையோ?, முன்-முன்னே, நின் நிலை விளம்ப - நினது நிலைமையைச் (சோழநாட்டந்தணன் ஒருவன்) சொல்லும் போதே, கொங்கை சுரந்த - திருமுலைப்பால் சுரந்த, அருள் கோமகளோ - அருட்பெருக்கையுடைய மங்கையர்க்கரசியோ?, இங்கு - இவ்வுலகத்தில், உயர்ந்தாள் - இவ்விருவருள் உயர்ந்தவர், ஆர்-யாவர்? எனக்கு சொல் - எனக்குச் சொல்லுவாய்; (எ - று.)

(வி - ரை.) இலை - தாமரையிலை; பொய்கைக்கு அழகாகப் புகழப்படுவது அதுவாகலான். பொய்கை - பிரமதீர்த்தம். பொய்கை என்பது, அதன் கரையை யுணர்த்தினமையால் முதலாகுபெயர். அழுதல் - தோணியப்பரையும் திருநிலைநாயகியையும், "அம்மே! அப்பா!" என்று அழைத்து அழுதல். சிவபிரான் பணிக்கத் திருமுலைப்பால் சுரந்து பொன்வட்டிலிற் கறந்து அப்பாலடிசிலையூட்டியருளினராகலின், இறைவியை, 'அழுதல் கண்டு முலைசுரந்த அன்னையோ' என்றார். 'முன்' என்பதனை இடைநிலை விளக்காகக் கொண்டு முன் முலைசுரந்த அன்னையோ எனவும், முன் நிலை விளம்பக் கொங்கை சுரந்த அருட்கோமகளோ எனவும் கூறினும் அமையும். 'முலை' என்பது அதன்பாலை உணர்த்தினமையின் முதலாகுபெயர், சுரத்தல் என்னும் இடத்தின் நிகழ்பொருளாகிய

பாலின்தொழில் மூலையாகிய இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. அன்னை - உமாதேவியார். 'நிலவிளம்பல்' என்பது, சோணாட்டந்தணர் ஒருவர் எய்தி உணர்த்தினமையைச் சுட்டி நின்றது.

இதனை, "திருமூலப் பாலினோடு" என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளா னுணர்க. 'விளம்ப' என்பது, மூற்பிற்பாடின்றி நிகழ்காலத்தில் இது நிகழாநிற்க, இது நிகழ்ந்ததென்னும் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். 'கொங்கை' என்பது, அதன்பாலை யுணர்த்தலின் முதலாகுபெயர். 'சுரத்தல்' என்னும் இடத்து நிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. மங்கையர்க்கரசியார் என்னும் பொருள்படக் கோமகள் என்றார். அன்பின் முதிர்வே அருள் என்பதை, "அருளென்னும் அன்பீன் குழவி" என்பதனானும், அன்பை, மூலைப்பாலும் கண்ணீரும் வெளிப்படுத்தலானும், 'கொங்கை சுரந்த அருட் கோமகளோ' என்றார். அன்பினால் மூலைப்பாலும் கண்ணீரும் உண்டாதலை,

> "இல்லா மூலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபா
> னல்லா யுளவாம்"

என்பதனாலறிக.

நிலவிளம்பக் கொங்கை சுரந்ததை:

திருக்களிற்றுப்படியார்

> "சுரந்த திருமூலைக்கே துய்யதிரு ஞானஞ்
> சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
> தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
> மனமுடையா ளன்பிருந்த வாறு."

என்பதனாலறிக. "அன்னையோ, கோமகளோ" என்பவற்றிலுள்ள ஓகாரங்க ளிரண்டும் வினாப்பொருள. இக்கு என்பதை அசையாகக் கோடலும் ஒன்று. நின் நிலவிளம்ப அவற்றைக் கேட்கும்போதே,

கொங்கை சுரந்தாரேனும், அதனை யூட்டுதற்செயல் இவரிடத்து நிகழாமையின் அன்னை யென்னாது, 'கொங்கை சுரந்த அருட்கோமகன்' எனப் பராமுகமாகக் கூறினாரேனும், பிள்ளையினியல்பைக் கேட்புழி முலைசுரத்தல் தலையன்பும், கண்டுழி முலைசுரத்தல் இடையன்பும், அழுதல் கண்டு பிறர் தூண்ட முலைசுரத்தல் கடையன்புமாம். ஆகலின், அருட்கோமகள் அம்பிகைபோலாது, தலையன்புடையராயினமை தோன்ற, 'உயர்ந்தானார்' என்றார். தேவரீர் ஞானசம்பந்தராய் இருவ ரியல்பும் அறிந்துள்ளீராகலின், உண்மை யுணர்த்துக என்பார், 'சம்பந்தா எனக்குச் சொல்' என்றார்.

மங்கையர்க்கரசியார் கொங்கை சுரந்தமை:—

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாருமாகிய இருவரும், 'பொய்ச்சமயமாகிய சமணங்கெடச் சைவந் தழைக்கச் செய்யுமவர் யாவரோ' என்று மனங்கவன்று, சோமசுந்தரக்கடவுளை யடைந்து பிரார்த்தித்திருக்க, ஒருநாள் ஒரு பிராமணர் சோமசுந்தரக்கடவுளை வணங்கும்பொருட்டு அங்கு வந்தனர். அவரை, அவ் விருவரும் "ஐயரே! நீவிர் யாண்டுள்ளவர்? விசேடம் யாது?" எனக் கேட்க, அதற்கு அவர், "யான் இருப்பது சீர்காழி; அங்குச் சிவபாதவிருதய ரென்று ஒருவர் உளர். அவருக்குச் சிவானுக்கிரகத்தினாலே ஒரு குழந்தை உதித்தது. அக்குழந்தைக்கு மூன்றும் ஆண்டிலே உமாதேவியார் தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து ஞானத்தோடு கலந்து ஊட்டினார். உடனே அக்குழந்தை, சகல வேதாகமாதி சாத்திரங்களின் உண்மை யுணர்ந்து திருஞான சம்பந்தமூர்த்தி யென்னும் பெயரைப் பெற்று, சிவஸ்தலங்கடோறும் சென்று வேதசாரங்களையெல்லாம் தமிழிலே தோத்திரமாகப் பாடிப், பெருமானிடத்திலே பொற்றாளமும் முத்துப்பல்லக்கும் முத்துச்சின்னமும் முத்துப்பந்தரும் படிக்காசும் பெற்று, வேதாரணியத்திலே திருக்கதவம் அடைக்கப் பாடி, சிவஸ்தலயாத்திரை செய்கின்றார். அவர், சுவாமி

தரிசனத்தின்பொருட்டு இங்கும் வருவார்" என்றனர். அதுகேட்ட மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மகிழ்ச்சி யெய்தி, உடனே நாயனுருக்கு ஓர் ஓலையெழுதி அந்தப் பிராமணர் கையிற்கொடுத் தனுப்பிவிட்டுச் சுவாமியை வணங்கித் திரும்பினூர்கள். மங்கையர்க் கரசியார் திருஞானசம்பந்த மூர்த்திநாயனுரைத் தம் காதன்மைந்த னுக முறைகொண்டமையால் உடனே முலைப்பால் சுரத்தலோடு அவ் விருவரும் வீட்டிற்குப் போயினூர்கள் என்பதாம்.

இச்சரித்திரத்தைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்துக் கூறுராயினும், இந்நூலாசிரியர் பிறர் நூன்மதமேற்கொண்டு கூறி னூர் என்க. இதனை,

"சுரந்த திருமுலைக்கே தூய்யதிரு ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு."

என்னும் திருக்களிற்றுப்படியாரான் உணர்க. (௫)

கலித்துறை

6. எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள்
ளே றுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவித்
தாரணியி
னிணக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ
நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து
மியல்பறிந்தே.

(இ - ள்.) வெள் ஏறு உடையான் தனக்கு - வெள்ளிய இடப வாகனத்தையுடைய சிவபெருமானை, அன்பு செய் - அன்புசெய்வித்

கின்ற, திருத்தாண்டக வேந்த - திருத்தாண்டகமென்னும் தேவாரப் பாக்களைப் பாடியருளிய திருநாவுக்கரசே!, இத்தாரணியில் - இவ்வுலகத்தில், நினக்கு-நின்னிடத்து, அன்பு செய்கின்ற—, அப்பூதியை-அப்பூதிநாயனாரை, சிவநேசம் உறும் - சிவபெருமானிடத்து அன்புற்ற, இனர்க்கு - அடியவரிடத்து, அன்பு செய்-அன்புசெய்கின்ற, நம்பிஆரூரன் - சுந்தரமூர்த்திநாயனார், எத்தும் இயல்பு அறிந்தும் - துதிக்கின்ற இயல்பை அறிந்திருந்தும், எனக்கு—, அன்பு-அன்பானது, நின்பொருட்டு - நின்னிமித்தம், எய்தாதது - அடையாதது, என் - யாது காரணம்; (எ - று.) கொல் - அசை.

(வி - ரை) வேந்த! ஆரூரன் அப்பூதியை ஏத்தும் இயல்பறிந்தும் நின்பொருட்டு எனக்கு அன்பு எய்தாதது என் எனக் கூட்டுக. சுந்தரமூர்த்தி சுவாமிகள் நின் அடியவராகிய அப்பூதிநாயனாரைத் துதித்தது, கேள்வியளவானாய சரித்திர மன்றி அருள்வாக்காகிய திருத்தொண்டத்தொகையாலும் அறிந்துவைத்தும் நின்பால் அன்பு உதியாமை யாதுகாரணம் என்பார், 'எனக்கன்பு நின்பொருட் டெய்தாதது என்' என்றார். இனி, 'அன்பு எய்தாதது என்கொல்' என்பதற்கு அன்பு உதியாதது என்னை வியப்போ எனலும் ஒன்று. அப்பொருட்குக் கொல் வியப்பிடைச்சொல். சிவபெருமான் ஏறிச்செலுத்துவது தருமவிடையாதலின், 'வெள்ளே றுடையான்' என்றார். ஏறு - இடபம். மூவர் பாடிய தேவாரப்பாக்களுள் இத்திருத்தாண்டகம் இறைவர் அருட்டிறங்களையே இனிது புகழ்ந்துள வாகலின், அதில் இறைவற்கு அதிவிருப்ப முண்டாகின்றமையின், 'அன்பு செய் திருத்தாண்டகம்' என்றார். தாண்டகமாவது:— ஒவ்வோரடியும் இருபத்தாறெழுத்தின் மிக்குவர நான்கடியாற் பாடப்படும் பாட்டு. பெருமானை இப்பாடலால் பெரிதும் துதித்துளராகலின் திருத்தாண்டகவேந்தர் எனத் திருநாமம் பெற்றார் என்க. வேந்த-அண்மைவிளி; ஈறு அழிதலினால். அப்பூதியடிகள் திருநாவுக்கரசு—

நாயனாரை வழிபட்டதும், அவ்வப்பூதியடிகளைத் திருத்தொண்டத் தொகையில் ஆளுடையநம்பிகள் துதித்ததும் நம் கண்களுக்குப் புலப்படாத வேறுலகத்தன்று, கண்கூடாக இவ்வுலகத்திலே இத்தமிழ் நாட்டிலே என்பார், 'இத்தாரணியில்' என்றார். இப்பொருட்கு இத் தாரணியில் என்பதனை 'அன்புசெய்கின்ற அப்பூதி' என்பதனோடும், 'நம்பியாரூரன் எத்து மியல்பறிந்தே' என்பதனோடும் இயைக்க. அப்பூதியடிகள் அன்பு செய்தமையை,

> "அந்தணரின் மேம்பட்ட வப்பூதி யடிகளார்
> தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்
> பந்தர்பல வாண்டவர செனும்பெயராற் பண்ணினமை
> வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனைநண்ண."

எனவரும் பெரியபுராணச் செய்யுளானும் அறிக: இனி, அப்பூதி யடிகளிடத்துச் சிவநேசமுற்ற அடியவரிடத்து அன்பு செய்கின்ற நம்பியாரூரன் எனினும் அமையும். இதனை,

> "ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்"

என்னுந் திருத்தொண்டத்தொகையானும் உணர்க.

அன்பு செய்கின்ற என்பது, இயல்புபற்றி வந்த காலவழுவமைதி. உறு - மிகுதிப்பொருட்டுமாம். இனர்க்கு - இனரிடத்து: வேற்றுமைமயக்கம். நம்பி-ஆடவரிற் சிறந்தவன் (குணபூஷணன்); 'நம்பி' என்பது சிறப்புப்பெயரும், 'ஆரூரன்' என்பது மூதாதைக் குரிய முறைமையிற் போந்த இயற்பெயருமாதல்பற்றி 'நம்பியாரூரன்' என முறைப்படுத்தார். 'எத்தும்' என்னும் எச்சத்தை 'இயல்பு' என்பதனோடு இயைத்து, அறிந்து என்பதில் உம்மை விகாரத்தாற் றொக்கதாகக் கொள்க; அல்லது, எத்து என்பதனை வினைத்தொகையாக்கி அதிலுள்ள உம்மையைப் பிரித்து, அறிந்து என்பதனோடு கூட்டினும் அமையும்.

அப்பூதியடிகள் சரிதம்:

சோழமண்டலத்திலே, திங்களூரிலே, பிராமண குலத்திலே, அப்பூதியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கிருகஸ்தாச்சிரமத்திலிருந்து சிவபத்தி அடியார்பத்தியில் மிகச் சிறந்தவர். திருநாவுக்கரசு நாயனாருடைய மகிமையைக் கேள்வியுற்று அவர்மீது மிக அன்புகூர்ந்து தம்முடைய வீட்டிலுள்ள அளவை தராசு பசு எருமை பிள்ளைமுதலிய யாவற்றிற்கும் அந்த நாயனாரது பெயரை இட்டு வழங்கிக்கொண்டுவருவார். இன்னும் அவர்மீது வைத்த பேரன்பினாலே திருமடங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் குளங்கள் நந்தனவனங்கள் முதலியவற்றை அந்நாயனாரது பெயரினாலேயே செய்துகொண்டிருந்தனர். இருக்கும் நாளிலே ஒருநாள் திருநாவுக்கரசு நாயனார் திங்களூருக்குச் சமீபமாகிய வழியே செல்லும்போது ஒரு தண்ணீர்ப் பந்தரை யடைந்து, அதில் தம்முடைய பெயரே எங்கும் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு, அங்குள்ள சிலரால் அப்பூதியடிகளின் கொள்கையை யறிந்து, அவருடைய வீட்டுத் தலைக்கடைவாயிலிற் செல்ல, உள்ளிருந்த அப்பூதியடிகள் கேள்வியுற்று விரைவாகவந்து வணங்கி நிற்க, நாயனார், "அப்பூதியடிகள் நீர்தானோ; அடியார்கள் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரிலே உம்முடைய பெயரை எழுதாது வேறொரு பெயரை எழுதியதற்குக் காரணம் யாது?" என்று வினவ; அப்பூதியடிகள் அதனைக் கேட்டதும், "திருநாவுக்கரசு நாயனார் என்னும் பெயரோ வேறொரு பெயராகும்? அவரது மகிமையை நீர் அறிகிலீர்போலும். நீவிர் யாவர்? எங்கே யுள்ளவர்? சொல்லும்" என்றார். அதற்கு நாயனார், "பரமசிவனால் ஆட்கொள்ளப்பெற்ற அப் பெயருடையன் யான்" என்றனர். உடனே அப்பூதியடிகள் நடுக்கமுற்று அஞ்சலியஸ்தராய் நாயனாரது திருவடிகளைப் பணிய, நாயனார் எதிர்வணங்கி எடுத்தருளினார். பின், தமது மனைவியார் புத்திரர் முதலாயினரையும் பணிவித்தனர். அப்பூதியடிகள் நாயனாருக்குத்

திருவமுது செய்விக்க விரும்பித் தமது புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசை நோக்கித், "தோட்டத்திற் சென்று வாழைக்குருத்தை யரிந்துகொண்டுவா?" என்றனுப்ப, அவர் வாழைக்குருத்து அரியப் புகுந்தபொழுது பாம்புதீண்டி யிறந்துபட்டனர். அச்செயலைத் திருநாவுக்கரசு நாயனார் அறிந்து அச் சவத்தைச் சிவாலயத்தின்முன் கொணர்வித்து,

> "ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
> ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
> ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
> ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே,"

என்னும் திருப்பதிகம் பாடியருள, உடனே அப்புத்திரர் உயிர்பெற்றெழுந்தனர். அப்பூதியடிகளும் மனைவியாரும் தமது புத்திரர் பிழைத்தமையைக் கண்டும், அதைக்குறித்துச் சந்தோஷியாமல் நாயனார் திருவமுது செய்யாதிருந்தமையால் சிந்தைநொந்திருந்ததை திருநாவுக்கரசுநாயனார் அறிந்து திருவமுது செய்தருளினார். அப்படியே சிலநாள் அங்கிருந்து, பின் திருப்பழனத்திற்குப் போயினர். அப்பூதியடிகள் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைத் துதித்தலே தமக்குப் பெருஞ் செல்வமெனக்கொண்டு வாழ்ந்திருந்து, சிலகாலஞ் சென்றபின், பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார் என்பதாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

7. அறிந்து செல்வ முடையானு
　　மளகைப் பதியாற் றேழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
　　மொருவன் வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பாவை
　　துணைவா! நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
　　திகழு ஞதற்கட் பெருமானே.

(இ - ள்.) துறந்த முனிவர் - முற்றத்துறந்த முனிவர்கள், தொழும் - தொழுகின்ற, பரவை துணைவா - பரவை கேள்வனே!, சிறந்த அறிவு வடிவமாய் - இயற்கையறிவு சொரூபமாய், திகழும் - விளங்குகின்ற, நுதல்கண் பெருமானே - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான்றனே, அறிந்து - தெரிந்து, செல்வம் உடையான் - பொருட் செல்வத்தை யுடையவனும், அளகைப்பதியான் ஆம் - அளகாபுரிக்குத் தலைவனுமாகிய குபேரனை, தோழமை கொண்டு - சிநேகங்கொண்டு, உறழ்ந்த - தம்மை ஒத்த, கல்வி உடையானும் - கல்விச்செல்வ முடையவனும், ஒருவன் வேண்டுமென - ஒருவன் வேண்டுமென்று, இருந்து-தேடியிருந்து, நின்-நின்னை, தோழமை கொண்டான் - சிநேகமாகக் கொண்டான்; (எ - று.)

(வி - ரை.) கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் உடையார் நட்பு ஒருவற்கு இன்றியமையாத தென்பார், 'அறிந்து' என்றார். பொருட்செல்வம் இழிந்தார்கண்ணும் உளதொன்றாகலான் அரிது நாடுதலின்றி எளிதிற் பெற்றனர் என்பார், 'செல்வமுடையானும் அளகைப்பதியாற் றோழமைகொண்டு' என்றார். தாம் இயற்கையறிவினராகலின் தமக்கிணையொத்துக் கல்வியிற் சிறந்தாரைப் பெறுத லருமையான் நெடுங்காலம் நேடியிருந்தனர் என்பார், 'உறழ்ந்த கல்வி யுடையானும் ஒருவன் வேண்டுமென இருந்து' என்றார். இனி, 'உறழ்ந்த' என்பதற்கு அப்பொருட் செல்வத்திற்கொத்த எனப் பொருள் கூறலும் ஒன்று. உடையானும் என்பதில், உம்மை உயர்வு சிறப்பு. இருந்து - காத்திருந்து எனினுமாம். 'துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா' என்பதற்குத் துறந்த முனிவராற் றொழப்படும் பரவை துணைவா எனச் செயப்பாட்டு வினையாக்கலும் ஒன்று. பரவை துணைவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். முனிவர் என்றது உபமன்யுமுனிவர் முதலாயினாரை. தொழும் என்னும் எச்சத்தைப் பரவையோடு இயைப்பாரும் உளர். 'நின்னை' என்பது, நெற்றிக்கண் படைத்

தவரே தோழமை கொள்வாராயின் நின் பெருமை புகலவெளிதோ என்பது தோன்றநின்றது. 'சிறந்த அறிவு' என்றது, இயற்கையறிவை. 'பெருமானே' என்பதில் ஏகாரம் சிறப்பு. (எ)

நேரிசையாசிரியப்பா

8. பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே.

(இ - ள்.) பெருந்துறை புகுந்து - திருப்பெருந்துறையென்னும் திருப்பதியையடைந்து, பேரின்பவெள்ளம் மூழ்கிய-பேரின்பமாகிய வெள்ளத்தில் அமிழ்ந்த, புனிதன் - பரிசுத்தனாகிய மணிவாசகப்பெருமான், மொழிந்த வாசகமே - சொல்லிய திருவாசகமே, வாசகம் - வாசகமாகும்; அதற்கு-அத் திருவாசகத்திற்கு, வாச்சியம்-வாசகத்தால் உணர்த்தப்படும் பொருள், தூசு அகல் அல்குல்-ஆடையணிந்த அகன்ற அல்குலையும், வேய் தோள் - மூங்கிலையொத்த தோளையுமுடைய உமாதேவியை, இடத்தவனே - இடப் பாகத்திற் கொண்ட சிவபெருமானே ஆவன்; (எ - று.)

(வி - ரை.) 'பெருந்துறை' என்றது பாண்டிநாட்டுத் திருப்பதியுள் ஓர் பதியை. சிறுதுறையிற் புகுந்தால் குறைபாடின்றி மூழ்க முடியாதாகலின் சிவபெருமான் அருளால் வியன்துறை வாய்த்ததென்பார், 'பெருந்துறை புகுந்து' என்றார். இளமை துறந்தே இம்மை மறுமை யின்பங்களில் வெறுப்புற்றமையாலும், அதனால் தூயோராய்த் தோன்றினமையாலும், 'பேரின்பவெள்ள மூழ்கிய புனிதன்' என்றார். பேரின்பவெள்ளம் என்றது சிவானந்த வெள்ளத்தை. (வெள்ளம் - பெருக்கு.) ஒவ்வொரு சொல்லும் மாணிக்கம் போலுதலின், மாணிக்கவாசகரெனச் சிவபெருமானால் திருநாமம்

பெற்றாராகலின், இவர் அருளிய வாசகத்தையொத்த வாசகம் பிறி தின்றென்பார், 'மொழிந்த வாசகமே வாசகம்'என்றார். வாசகமே என் புழி ஏகாரம் தேற்றம். அதற்கு என்பது, மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தைச் சுட்டி நின்றது. வாச்சியம் - சொல் லாற் பெறும் பொருள். மொழிந்த வாசகத்திற்குப் பொருளறிவுறுப் பான் அனைவரும் வேண்டச், செப்புவாமெனச் செம்பொன்னம் பலத்தை யடைந்து "இவரே பொருள்" என்ன இறைவரைச் சுட்டிக் காட்டி மறைந்தாராகலின், சொற்பொருளுருவாய் விளங்கும் அம் பிகைபாகரே அதற்குப் பொருளாவார் என்பார், 'அதற்கு வாச்சியம் தூசக லல்குல்வேய்த் தோளிடத்தவனே' என்றார். அல்குல்வேய்த் தோள் - உமாதேவி; அன்மொழித்தொகை. 'தோளிடத்தவனே' என்பதற்குத் தோள்களையுடைய முதல்வியை வாமபாகத்திலுடைய தவசொரூபராகிய சிவபெருமானே எனினும் அமையும்; அதற்கு, தோள் இடம் தவன் எனக் கண்ணழிக்க; தவன்-கணவனுமாம். ஆன் மாக்களுக்குப் போகநிகழ்ச்சியின்பொருட்டுப் போகிபோன்று அம் பிகைபாகராயிருப்பினும், திருக்கைலையைச்சூழ்ந்த நாற்பெருங்கிரிக ளுள், ஆமர்த்தகிரியில் திருமாலுக்கும், புட்பகிரியில் பிரமதேவருக் கும், கோணகிரியில் இருடிகட்கும், சந்தானகிரியில் தேவர்கட்கும், திருக்கைலையில் திருநந்திதேவர் சனகாதியர்க்கும் ஞானோபதேசம் பாலித்துக், காமனை முனிதல் நெடுஞ்சடைமுடித்தல் கல்லாடைபுனை தல் முதலிய அருட்சின்ன முடையவரா யமர்தலின், யோகியே என்பார், இரட்டுறமொழிதற் பொருள்படத் 'தவனே' என்றும், சாற்றினார் என்க. 'தோளிடத்தவனே வாச்சியம்' என்றது, புறப் பொருளை நோக்கிநிற்குநிலையில் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையில் சிவமெனவும், ஒளி யும் ஞாயிறும் போல முதல்வனொருவனே தாதான்மியசம்பந்தத்தால் இருதிறப்பட்டு இயைந்துநிற்கும் உரிமை தோன்றலான். தாதான் மிய சம்பந்தமாவது - பொருளான் ஒன்றேயாகியும் ஒருவாற்றாற்

பேதமாதற்குரிமை யுடைமை. 'இடத்தவனே' என்பதில்எகாரம் தேற்றம். (அ)

நேரிசை வெண்பா

9. இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—னொடுகாட்டுஞ்
சம்பந்தா! என்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு.

(இ - ள்.) சுடுகாட்டுள் - சுடுகாட்டிலே, ஆடுவான் - நடிப்பவனாகிய சிவபெருமானை, சுட்டினொடு காட்டும் - சுட்டுதலோடு காட்டிய, சம்பந்தா-திருஞானசம்பந்த மூர்த்தியே!, இடுகாட்டுள்-சுடுகாட்டுள், மாதர் - பிருந்தையினது, எலும்பில் – எலும்பிலே, புரள் மால்– புரண்ட திருமால், என்பு நின்பால் தந்து - அவ்வெலும்பை நின்னிடத்துக் கொடுத்து, கும்பம் தாம் என்னும் - அமுதகலசமென்று சொல்லும்படியான, முலைக்கொம்பு - தனங்களையுடைய பூங்கொம்பு போலும் ஓர் அரிய பெண்ணாக, ஆக்கிக்கொண்டிலன் என் - அங்ஙனம் செய்துகொள்ளாமைக்குக் காரணம் யாது? (எ - று.)

(வி-ரை.) மால் என்பு தந்து கொம்பு ஆக்கிக்கொண்டிலன்என் எனக் கூட்டுக. சலந்தரன், திருமாலாதியரை வென்ற செருக்கால் சிவபெருமானையும் வெல்வான் கருதித் திருக்கைலையை யடைந்து, ஆங்குப் பெருமான் திருவடியால் நிலத்திற் கீறிய திகிரியான் மடிந்தழி, அத்திருமால் அவனுடம்பிற் புக்கு, அவன் மனைவியாகிய பிருந்தையை அனுபவித்திருக்க, அவளஃதுணர்ந்து, கற்பழிந்தமைக்குக் கவன்று, அக்கினியில் மூழ்கலும், தான் வெந்து எலும்பாய்க் கிடக்க, விரகமிக்கு அவள் என்பில் புரண்டார் என்பார், 'இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்' என்றார். இதனை,

"இக்கொடு மொழிபுகன் றெரியை மூட்டியே
புக்குயிர் துறந்தனள் புலம்பி யாங்கவ

வக்குறு சுடலை நீறாடி வாடினான்
மைக்கடன் மேனியன் மாலின் மூழ்கியே.''

என்னும் கந்தபுராணத்துத் ததீசியுத்தரப்படலச் செய்யுளானறிக. சுடுகாட்டு ளாடுவான் என்றது சிவபெருமானை; இவர், எவற்றையும் ஒடுக்கும் ஆற்றல் திருமால் முதலியோர்க்கு இன்மையாலோ, அத் தொழிலைத் தாமே மேற்கொண்டு ஒடுக்கப்படுந்தானமே சுடலையாகக் கொண்டு அதில் நடித்துநிற்பவர் என்பார், 'சுடுகாட்டுள் ஆடுவான்' என்றார். 'ஆடுவான்' என்புழி உயர்திணைப்பெயர் இயல்பாக வேண்டு மிடத்து இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலான் னகரவீறு திரிந்தது. 'சுட்டினொடு காட்டுஞ் சம்பந்தா!' என்பது, தந்தையாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானம் பண்ணுதற்குப் போம்பொழுது, பிள்ளையார், பரமசிவனுடைய திருவருள்கூட்ட அவரைத்தொடர்ந்து சென்று பிரமதீர்த்தக்கரையில் நின்று, பிரமபுரேசரது திருத்தோணிச் சிகரத்தை நோக்கி, ''அம்மே! அப்பா!'' என்று அழுகையில், தோணியப்பர் திருநிலைநாயகியோடும் இடபாரூடராய் எழுந்தருளி, உமாதேவியாரை நோக்கி, ''உன்னுடைய முலைப்பாலைப் பொன்வள்ளத்திற் கறந்து இப்பிள்ளைக்கு ஊட்டு'' என்று அருளிச்செய்தார். அங்ஙனம் உண்ட பிள்ளையாரது கடைவாயில் பால் ஒழுகுதலைக்கண்ட சிவபாத விருதயர், ''நீ யார் தந்த பாலை யுண்டாய்?'' என்று கோபித்து மாறு கொண்டு ஓச்ச, பிள்ளையார் ஆனந்தபாஷ்பஞ் சொரிய, உச்சியின் மேல் எடுத்தருளிய ஒருதிருக்கை விரலினாலே சுட்டி, ஆகாயத்தில் இடபாரூடராய் உமாதேவியாரோடு நின்றருளிய பரமசிவனைக் காட்டி,

''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.''

என்று பாடந்தொடங்கினமையாம். சுட்டியொடு காட்டும் என்புழி ஒடு, "ஊசியொடு குயின்றதூசு" என்புழிப்போல ஒடு கருவிப் பொருட்டு; விசேடணமுமாம். காட்டும் - காலமயக்கம். சுட்டு - முதனிலைத் தொழிற்பெயர். 'என்பு' என்றது பிருந்தையின் எலும்பை. என்பு என்புழி அகரச் சுட்டு எஞ்சிற்று. புரளக்கண்ட பிராமணொியர் அம்பிகை யளித்த வித்தை அச்சுடலையிலிட்டு அமுதம் பெய்ய, அதிற்றோன்றிய துளபம் கன்னிகையாகக் காணப்பெற்றமைபோலாது அயிர்தின்றிச் சொல்லளவானே அங்கம் பூம்பாவையாக்கவல்ல ஆற்றலை நம்பால் கண்டிருந்தும் திருமாலானவர் அங்ஙனம் செய்து கொள்ளாமை ஆராய்ச்சியின்மைபோலு மென்பார், 'என்பு நின்பாற்றந்தாக்கிக் கொண்டிலன் என்' என்றார். 'கும்பந்தாம்' என்பதில் தாம் என்பது "அல்லமரிவர்தாம்" என்புழிப்போலக் கட்டுரைக்கண் வந்த அசை. கொம்பு - பெண்: உவமையாகுபெயர்.

இனி, மால் பந்தாமென்னும் மூலைக் கொம்பு ஆக்கிக் கொண்டிலன் என்கும் எனக் கண்ணழித்து, திருமால் பந்தை நிகர்க்கும் எனப்படும் தனங்களையுடைய ஓர் பெண்ணை ஆக்கிக்கொண்டிலன் என்கும் என்றலும் ஒன்று. 'பந்தாம்' என்புழி, ஆதல் உவமைப்பொருள் குறித்து நின்றது; "ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற்போல. இப்பொருட்கண், என்கும் என்பது குச்சாரியையேற்ற செய்யுமென்னு முற்றெனக் கொண்டு, அது பல்லோரொழிந்த படர்க்கை நான்குபாற்கும் உரித்தாகலின் ஆணொருமைப் பயனிலை யாக்கினொனக் கூறுவாருமுளர். அற்றேல், 'என்னும்' என்ற செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று என்கும் எனக் குச்சாரியை பெற்றபோது கும் விகுதியாக நின்று தன்மைப்பன்மையை உணர்த்துமேயன்றிப் பலர்பால் ஒழிந்த வினைப் படர்க்கை முற்றுப்பாலை யுணர்த்தாதெனக் கூறி மறுக்க.

திருமால் பிருந்தையின் எலும்பிற் புரண்டது:—

பரமசிவத்தின் கோபத்தியிற் றோன்றிய சலந்தரன், அப்பெருமானது சக்கரத்தால் இறந்துபட்டமையைக் கேள்வியுற்ற திருமால்

சலந்தரன் மனைவியாகிய பிருந்தையின் பேரழகைக் கண்டு மையல் கொண்டு, அவள், தன்னைத் தன் கணவனென்று நம்பும்படி தந்திரஞ் செய்து அவளுடன் நெடுங்காலம் கலவிசெய்திருந்தனர். ஒருநாள், விஷ்ணுகோலம் காணப்பட்டது. அதுகண்ட பிருந்தை 'இவன் மாயோனாகும்' என்றுணர்ந்து, திருமாலுக்குச் சாபமிட்டுத் தீப்பாய்ந் திறந்தாள். இவள்மீதுள்ள விருப்பமிகுதியால் இவள் எரிந்துபோன சாம்பரில் திருமால் விழுந்து புரண்டழுதனர் என்பதாம். (௯)

கட்டளைக்கலித்துறை

10. கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய்!
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே.

(இ - ள்.) நாவரசு ஆய பெருந்தகையோய் - வாகீசரெனும் திருநாமம் பொருந்திய பெருந்தகைமை வாய்ந்தவரே!, வள்ளை குழை உமை பங்காளர் கையில் - வள்ளையிலைபோலும் காதுகளையுடைய அம்பிகைபாகராகிய சிவபெருமானது கையில், கொள்ளைக்கதிர் முத்தின் பந்தரும் - (திருப்பட்டீச்சரத்திலே) கிரணங்களை வீசும் முத்துப்பந்தரும், சின்னமும் - (திருவரத்துறையிலே) முத்துச் சின்னமும், கொள்ளும் ஒரு பிள்ளைக்கு - வாங்கிக்கொண்ட ஆளுடைய பிள்ளையாருக்கு, குவளை கள்ளை உமிழ் வீழியில் - குவளை மலர் தேனைச் சொரிகின்ற திருவீழிமிழலையிலே, படிக்காசு ஒன்று அது தகும் - படிக்காசு ஒன்றை வாங்குதலும் தகும், நீ என் வாங்

னே - நீர் (அப் பிள்ளைபோல அப் படிக்காசு ஒன்றை) யாதுக்குப் பெற்றீர்? (சிவபெருமானது கட்டளையை மறுத்தற்கு அஞ்சியோ?) (எ - று.)

(வி - ரை.) பெருந்தகையோய்! பிள்ளைக்கு அதுதகும் நீ வீழியில் படிக்காசொன்று உமைபங்காளர் கையில் வாங்கினை என் என மாற்றிப் பொருள்கூறலும் ஒன்று. 'அது' என்றது படிக்காசு ஒன்று வாங்குதலை. சுட்டைப் பெயர்க்குமுந்திக் கூறினர். கொள்ளை-மிகுதி. சிவபெருமானுக்குரிய புதல்வர் இருவருள் இளையபிள்ளையார் (முருகர்) அவதாரம் இவர் என்பார், 'ஒரு பிள்ளை' என்றார். ஒரு பிள்ளையென்றது ஆளுடையபிள்ளையாரை (திருஞானசம்பந்தரை). பெருந்தகையான் என்னும் முதல்வேற்றுமை 'பெருந்தகையோய்' என விளிவேற்றுமையாயிற்று. பந்தரும் சின்னமும் என்றதனுல் முத்துச்சிவிகை முத்துக்காளம் முத்துத்தாரை பொற்கிழி முதலியவும் தழீஇக்கொள்க. 'கொள்ளும்' என்பது இயல்புபற்றி வந்த காலமயக்கம். கள்ளைக் குவளை யுமிழ்வீழி என்றதனுல் இத்தலம் எத்தன்மையார்க்கும் இன்பம் பயப்பதொன்றென்று உள்ளுறையுவமையாற் கூறலாயிற்று. படிக்காசு - படியில் வைக்கப்படுங் காசு. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசும் திருவீழிமிழலையில் சிவபெருமானிடத்துப் படிக்காசு பெற்றதனை,

"ஈசர் மிழலை யிறையவர்பா லிமயப் பாவை திருமுலைப்பால்
தேச முய்ய வுண்டவர்தாந் திருநா வரசு மாதலினுல்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகு மடிமையினுல்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்."

என்னும் செய்யுளானும் அறிக. வள்ளை - வள்ளைக்கொடி; அது பொருளாகுபெயராய் அதன் இலையை உணர்த்திற்று. குழை-குண்டலம்; அது தானியாகுபெயராய்க் காதை உணர்த்திற்று. கையில் - இடத்தில்; கை இடத்தை உணர்த்திற்று. நாவின் செல்வமுடைமை

பின் நாவுக்கரசெனச் சிவபெருமான் அருளப்பெற்றமையே யன்றி, அறிவு முதலியவற்ருன் முதிர்தலின் அப் பிள்ளையும் 'அப்பர்' என முறைகொண்டாடத்தக்க பெருமையையுடைய நீர் படிக்காசு ஒன்று வாங்கத்தகுமோ என்பார், 'என் வாங்கினே?' என்ருர். 'என் வாங்கினே' என்பதற்கு யாதுக்குப் பெற்றீர் எனப் பொருள் கொள்ளுமிடத்து என் என்பதில் நான்கனுருபு தொக்கது. அப்பொருட்கு அது பெயர். இறைவர் கட்டளையை மறுத்தற்கு அஞ்சியோ என்பது குறிப்பெச்சம்.

திருஞானசம்பந்தர் முத்துப்பந்தரும் முத்துச்சின்னமும் பெற்றது:-

திருஞானசம்பந்தர், தந்தையார் தோளின்மேலிருந்து, தலயாத்திரை செய்துவந்து, பின் திருவடித்தாமரை நோவப் பைய நடந்து மாறன்பாடி என்னும் பதியை அடைய, திருவாத்துறையில் எழுந்தருளியிருக்கும் கடவுள் அது கண்டு மனம் பொருது, அத்தலத்திலுள்ள பிராமணரனைவருக்கும் தனித்தனியே கனவிலே தோன்றி ஆளுடையபிள்ளையாருக்கு முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்னம் இவைகளைக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து பார்க்க அவைக ளிருக்கக்கண்டு ஆனந்த பரிதராய் முத்துச்சிவிகை முதலியவற்றைத் துந்துபிமுதலிய வாத்தியங்கள் ஒலிக்கப் பிள்ளையாருக்குக் கொண்டுபோய்ச் சமர்ப்பித்தார்கள். அதற்குமுன் சிவபெருமான் ஆளுடையபிள்ளையாருக்கும் கனவிலே தோன்றி, "நாம் உனக்கு முத்துச்சிவிகை முதலியவற்றை அனுப்புகிருேம்; நீ அவைகளை ஏற்றுக்கொள்" எனத் திருவாய்மலர்ந்தருளினர். பிள்ளையார் விழித்தெழுந்து தாம் கண்ட கனவைத் தந்தையாருக்கும் அடியார்களுக்கும் அருளிச்செய்து, வைகறையிலே விபூதி தரித்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினர். அவ்வமயத்தில், பிராமணர்கள் சிவனடியார்களோடு 'ஹர ஹர' என்னும் ஓசையுடனே முத்

அச்சிவிகை முதலியவற்றைக் கொண்டுவந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, "இவை, திருவாத்துறையில் எழுந்தருளியிருக்கிற கடவுள் தந்த பொருள்கள்; ஏற்றருளும்!" என்றார்கள். பிள்ளையார் அதைக் கேட்டுக் கடவுளுடைய திருவடிகளை,

"எந்தை யீச னெம்பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வா யரத்துறை யடிகடம் மருளே."

என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, திருவருள்வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு உலகெலாம் உய்யும்படி அதில் ஏறியருளினர். அப்போது அடியார்களனைவரும் ஆரவாரித்தார்கள். அந்தணர்களனைவரும் வேதகோஷஞ் செய்தார்கள். இந்திராதி தேவர்களனைவரும் புஷ்பமாரி பொழிந்தார்கள். பலவகைப்பட்ட வாத்தியங்கள் ஒலித்தன. சிவிகையில் ஏறியருளிய பிள்ளையாரின் மேலே முத்துக்குடை நிழற்ற அடியார்களும் பிராமணர்களும் ஆனந்தவெள்ளத்தே குளித்தார்கள். முத்துச் சின்னங்கள், "பரசமயகோளரி வந்தார்; சைவசிகாமணி வந்தார்; ஞானப்பாலுண்டவர் வந்தார்; ஓதாதுணர்ந்த பெருமான் வந்தார்" என்று ஊதச் சென்று திருவரத்துறையை யடைந்து, கோபுரவாயிலுக்குத் தூரத்திலே சிவிகையினின்றும் இறங்கி வணங்கிய கையராய் திருக்கோயிலினுட் சென்று வலம்வந்து, சன்னிதானத்தை வணங்கித் திருப்பதிகம் பாடிச்சிலகாள் அத்தலத்தில் எழுந்தருளியிருந்தார் என்பதாம்.

திருநாவுக்கரசுநாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும் திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றமை:—

இவ்விரண்டு நாயன்மார்களும் திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் நாளிலே, பஞ்சம் நேர்ந்தது. அதனால் உயிர்களெல்லாம்

வருத்தமுற்றன. அக்காலத்தில் பரமசிவன் இவ்விருவருக்குந் தோன்றி, "காலபேதத்தால் நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும் உங்களை வழிபடுகின்ற அடியார்களுக்காகத் திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும், மேற்குப்பீடத்திலும் தினந்தோறும் படிக்காசு வைக்கின்றோம் பெற்றுக்கொள்ளுங்கள்" எனத் திருவாய்மலர்ந்தனர். அவ்வாறே தாங்கள பெற்றுச் சிவனடியார்களைப் போசனம் பண்ணுவித்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், வாக்குத் தொண்டுமாத்திரஞ் செய்தமையால் பெற்ற படிக்காசை வட்டங் கொடுத்து மாற்றப்பெற்றார். திருநாவுக்கரசு நாயனாரோ, வாக்குத் தொண்டுடன் காயத்தொண்டும் செய்தமையால், தாம் பெற்ற படிக்காசை வட்டங் கொடாது மாற்றப்பெற்றார். இருவருடைய திருமடங்களிலும் சிவனடியார்கள் நாடோறும் போசனம் பண்ணி மகிழ்ந்திருக்குங்காளில் எங்கும் மழைபெய்து தானியவகைகள் மிக விளைந்தமையால் பஞ்சம் நீங்கிற்று என்பதாம். (௧0)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

11. வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றும்
நீங்கினுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனால்
ஓங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையின் [டாய்
உமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே.

(இ - ள்.) கோங்கம் முகை - கோங்கரும்பை, கவற்றும்-(தாம் அழகால்) வருத்தும், இளமுலை-இளமைவாய்ந்த தனங்களையுடைய, பரவை மகிழ - பரவைநாச்சியார் மகிழ்ச்சியடையும்படி, முன்

முன்பு, குண்டையூர் - குண்டையூரிலுள்ள, நெல் மலை - நென் மலையை, கொண்ட - (திருவாரூரில் பூதங்களாற் கொணர்ந்து) குவிக்கப்பெற்ற, அருட்கடலே - கருணைக்கடலாகிய நம்பியாரூர ரே!, வாங்கு சிலை புரையும் - வளையும் வில்லை யொத்திருக்கின்ற, உடல் எனும் குளத்தில் - தேகம் எனப்படும் மடுவிலே, மூலமலம் எனும் - ஆணவமலம் எனப்படும், ஓர் வெம் கரவின் - ஒரு வெவ் விய முதலையினது, பகுவாயின் நின்றும் - பிளவுபட்ட வாயிலிருந் தும், தீங்கு இல் - அழிவில்லாத, உயிர் எனும் - உயிர் எனப்படும், பனவக்குலமகனை - அந்தணகுலப் புதல்வனை, ஆதி திரோதாயி எனும் - தொடக்கத்தே திரோதானசத்தி யெனப்படும், ஒரு வெம் திறல் கூற்றவனால் - ஒரு வெவ்விய வலிய இயமனால், ஓங்குறும் - உயர்ந்த, நாதாந்தம் என பெயரிய - நாதாந்தமெனப் பெயர்பெற்ற, அ கரையின் - அக்கரையிலே, உமிழ்வித்து - கக்குவித்து, சிவம் எனும் - சிவமெனப்படும், ஓர் தந்தையொடும் - ஒப்பற்ற பிதாவோ டும், கூட்டாய் - சேர்ப்பீராக; (எ - று.)

(வி - ரை.) நிலைபேறின்றித் தோன்றியழியும் தன்மையதாக லின் இவ்வுடல் இந்திரதனுவை நிகர்ப்பதென்பார், 'வாங்குசிலை புரையும்' என்றார். வாங்குசிலை - இந்திரதனுசு; வினைத்தொகைக் குறிப்பு. புண்ணாகிய சோறும், உதிரமாகிய புனலும், புழுக்க ளாகிய கொடிகளும், பிணிகளாகிய சலசரமும் முதலியனவும் நிறை ந்ததென்பார், 'உடலெனுங் குளம்' என்றார். மூலமலம் - ஆணவ மலம்; அது ஆகந்துகமன்றிச் சகசமாய் மற்றைக் கன்மமாயையென் னும் இருமலங்கட்கும் மூலமாய் அநாதிபந்தமா யுள்ளது. அம்மலம் உயிரின் அறிவை விழுங்க நிற்றலின் முதலையையொத்த தென் பார், 'மூலமலமெனும் ஓர் வெங்கரவு' என்றார். மறைப்புண்டு கிடப்பினும் அநாதிநித்தமாகலின் அழிவின்று என்பார், 'தீங்கில் உயிர்' என்றார். அதனைப் பனவக்குலமகனாக உருவகப்படுத்திக் கூறி

ஞர்; அவிநாசியில் முதலையுண்ட பாலனை மீட்டுத் தந்தைபாற் சேர்த்தமையின், இவ்வுயிரையும் சிவமாகிய தந்தையிடத்துச் சேர்ப்பாரென்பது குறிப்பு. திரோதாயி என்னும் ஒரு வெந்திறற் கூற்றுவன் என்பது, அவ்வவ்வுடலினீட்டிய வினைகளின் பயனை ஒருவாறு நுகர்விக்கும் இயமன்போன்று, சிருட்டிதொடங்கியே மலத்தின் வழிநின்று, அம்மலத்தின் காரியமாகிய மோக முதலியவற்றைத் தொழிற்படுத்தும் சிவசங்கற்பத்திற்கு ஏதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படுவதாய், உயிரைத் தன்வசப்படுத்து வினைப் பயன்கள் நுகர்வித்துப் பாகம் வருவிக்கும் திரோதானசத்தி யெனப்படும் சிவசத்தியே பின் அருட்சத்தியாய் அம்மூலமல சத்தியை யொழித்துச் சிவத்தை யடைவித்தற் கேதுவென்பதாம். வெந்திறல்-கடத்தற்கரிய ஆஞ்ஞை. கூற்றுவனால் உமிழ்வித்து எனக் கூட்டுக. ஊனக்கண்கொண்டு உணரப்படாத நாதமுடிவே சிவம் நிலவுந் தானமாகலின், ஆங்குச் சேர்த்துக என்பார், 'ஓங்குறு நாதாந்தமெனப் பெயரிய வக்கரையி னுமிழ்வித்து' என்றார். 'சிவமெனும் ஓர் தந்தை' என்றது, அவ்வுடற்குக் காரணமாய்வரும் தந்தையர்போலாது, சிவம் சர்வான்மாக்களுக்கும் தனு கரண புவன போகங்களைத் தந்து உண்ணின் றுணர்த்தி உபசரித்துநிற்கும் தனித்தந்தை என்றபடி. உயிர் முத்தியினும் முதல்வன்போல ஐந்தொழிற்கும் வினைமுதலாகுமுரிமையின்றிச் சிவானுபவ மொன்றினுக்கே உரியதாய் முதல்வனில் வியாப்பியமாவதாகலின் அங்ஙனம் ஆக்குக என்பார், 'கூட்டாய்' என்றார். 'தந்தையொடு' என்பதில் ஒடு கலப்புறபொருள்; பாலொடு தேன்கலந்தற்றே என்பதிற்போல. கோங்கமுகை என்புழி அம் சாரியை: கோங்கரும்பு. கோங்க என்புழி அகரம் ஆறும்வேற்றுமைப் பன்மையுருபு என்பர்; அது தன கைகள் என்பதுபோல வாராமையால் பொருந்தாதென்க. முலையைக் கவற்றுவது முலைக்கில்லையாகவும் உளதாக வுபசரித்தது, அதுபோன்று அலர்தலின்மை குறிப்பித்தற்கென்க, மங்கைப்பருவமுடைமை தோன்ற 'இளமுலைப்

பரவை' என்றார். 'வாங்குசிலை' என்பது, குறிப்பான் இந்திரதனுசை உணர்த்திற்று; உடற்கு உவமிக்கப்படுவது அச்சிலையேயாகலான்: "வானிடுவில்" என்றார் பிறரும். புரையும்-நிகழ்காலப் பெயரெச்சம்; இயல்பு பற்றிவந்த காலவழுவமைதி. அல்லதூஉம், தனுவெனப் பெயரிய இவ்வுடல் இளமையில் கூனுதலின்மையின் தனுவை நிகர்த்திலதேனும் பின்னாளில் நிகர்த்துவிடுமென்பார், 'வாங்குசிலை புரையும்' என எதிர்காலத்தாற் கூறினார் எனினும் அமையும். வாங்குசிலை-வளையும் வில். எனப்படுமெனற்பாலது, செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படு விகுதி தொக்கு எனும் என நின்றதென வருமிடந்தோறும் கொள்க. காவு என்பது முதலைக்குக் காத்தலுடைமையாற் போந்தபெயராய் இரட்டுறமொழிதலாய் நின்றது. 'ஆதி திரோதாயி என்னும்' எனவே, அந்தத்தில் அதுவே அருட்சத்தியெனப்படும் என்றாராயிற்று. (௧௧)

நேரிசையாசிரியப்பா

12. கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பாற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்

பூக்கொளு மாதின் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
யாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே.

(இ - ள்.) செம் கண் மால் - செந்தாமரை மலர்போலும் சிவந்த கண்களையுடைய திருமாலினது, தட கையில் சங்கம் நாண- பெரிய கையிலேந்திய பாஞ்சசன்னியமென்னும் சங்கு நாணும்படி, முள் தாள் தாமரை - முள்ளரைகளையுடைய நாளத்தையுடைய தாமரையினது, முறுக்கு அவிழ் மலர்மேல் - கட்டவிழ்ந்த மலரின் மீது, வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப - வலம்புரிச்சங்கு தங்கும் திருவாதவூரில் அவதரித்த அன்பரே!, கடல் நிறம் வண்ணன்-கடல் போலும் கரியநிறத்தையுடைய திருமால், கண் ஒன்று இடந்து- (திருவீழிமிழலையில்) தன் கண்களிலொன்றைப் பெயர்த்து, மறைச் சிலம்பு அரற்றும் - வேதமாகிய சிலம்பு ஒலிக்கின்ற, மலர் அடிக்கு அணிய - மலர்ந்த திருவடிக்குச் சாத்த, பரிதி கொடுத்த - (அத்திருமாலுக்குச்) சக்கரப்படையைக் கொடுத்த, சுருதி நாயகற்கு - வேத முதற்பொருளாகிய சிவபெருமானுக்கு, முடி விளக்கு எரித்தும் - (கணம்புல்லநாயனார்) தம்முடியை விளக்காக எரியச்செய்தும்,

கடி மலர் கோதை - வாசனை பொருந்திய மலர்மாலை யணிந்த, சுரி குழல்-சுருண்ட கூந்தலையும், கரும் கண் - கரிய கண்களையுமுடைய, துணைவியை - (இல்வாழ்க்கைத்) துணையாகும் தம்மனைவியை, அளித்தும் - (இயற்பகைநாயனார்) கொடுத்தும், அருமகள் - (மானக்கஞ்சாறநாயனார்) தம் அரிய புதல்வியின், நறும் பூ கரு மயிர்-வாசனை மிக்க அழகிய கரியகூந்தலை, உதவியும் - கொடுத்தும், நெல் மூளை வாரி - (இளையான்குடிமாற நாயனார்) வயலில் நீரில் மிதந்த நெற்களின் மூளையை வாரிக் கொண்டுவந்து, இன் அமுது அருத்தியும்- இனிய அமுதாகச் சமைத்து அதனை உண்பித்தும், கோவணம் நேர்- கோவணத்திற்கு நேராக, தனை நிறுத்து கொடுத்தும் - (அமர்நீதி நாயனார்) தன்னையும் நிறுத்துக்கொடுத்தும், அகப்படும் மணிமீன்- (அதிபத்தநாயனார் தம் வலையில் முன்) அகப்படுகின்ற இரத்தின கசிதமாகிய உறுப்புக்களமைந்த பொன்மீனை, அரற்கு என விடுத்தும்-சிவபெருமானுக்கு உரித்தெனக் கடலில் விடுத்தும், அரிவாள் பூட்டி - (அரிவாட்டாயநாயனார்) அரிவாளைப் பூட்டி, ஊட்டி அரிந்தும் - தம் கழுத்தை யறுத்தும், உடை ஒலிக்கும் - ஆடையைத் துவைக்கின்ற, சிலையிடை - கற்பாறையினில், தலை மோதியும் - (திருக்குறிப்புத்தொண்டநாயனார்) தம் தலையைத் தாக்கியும், மொய் மலர் கோதை - (கழற்சிங்கநாயனார் தமது) வண்டுகள் மொய்க்கின்ற மலர்களையணிந்த கூந்தலையுடைய மனைவியின், மலர் கை துணித்தும் - செந்தாமரை மலர்போன்ற கையைச் சேதித்தும், தந்தையை தடிந்தும் - (சண்டேசுரநாயனார்) தம் பிதாவின் தாளைத் துணித்தும்; மைந்தனை கொன்றும் - (சிறுத்தொண்ட நாயனார்) தம் புதல்வனைச் சமைத்தற்குக் கொன்றரிந்தும், குற்றம் செய்த-சிவாபராதம் செய்த, சுற்றம் களைந்தும் - உறவினருள் ஓர் சிறுவனும் எஞ்சாவகை (கோட்புலிநாயனார்) சிதைத்தும், பூ கொளும் - (சிவபிரான் திருமுற்றத்துச் சிந்திய) மலரையெடுத்த, மாதின் மூக்கினை - மங்கையின் நாசியை, கொய்தும்-(செருத்துணைநாயனார்) அரிந்தும்,

இளமுலை மாதர் வளமை - இளங்கொங்கைகளையுடைய மகளிர்பால் நுகரும் இன்பத்தை, துறந்தும் - (திருநீலகண்ட நாயனார்) ஒழித்தும், பண்டைநாளில் - முற்காலத்தில், ஒரு சிலர் அடியார் ஆயினர்- ஒப்பற்ற சிலர் அடியாராயினர்; (அவர் அங்ஙனமாக) இருக்கும் அடுக்கல் - தான் இருக்கின்ற கைலையை, அரக்கன் எடுப்ப - இராவணன் தூக்கவும், (அதுகண்டஞ்சி) வரை பொரும் - மலையையொத்த, மொய்ம்பில் - தோள்களில், முலை பொர-முலைகள் தாக்கும்படி, மலைமகள் தழுவ - மலையரையன் மகளாகிய உமாதேவியார் அணைக்க, மனம் மகிழ்வோனே - மனம் மகிழ்வோராகிய சிவபெருமானே!, பாடும் பணி - பாடுகின்ற திருத்தொண்டை, நீ கூடும்பொருட்டு - நீ அடையும் நிமித்தம், மதுரைமாநகரில்-மதுரைமாநகரத்தில், குதிரை மாறியும் - (நரியைப் பரியாக்கிப் பாண்டியனுக்கு) அதனை விற்றும், விண் புகழ் - தேவரும் துதிக்கின்ற, முடிமிசை - திருமுடிமீது, மண்பொறை சுமந்தும் - மண்செறிந்த கூடையை வலிந்தெடுத்தும், நீறு எழில் மேனியில் - திருநீற்றின் எழில் படைத்த திருமேனியில், மாறு அடிபட்டும் - அப்பாண்டியனால் பிரம்படியேற்றும், நின்னை தொண்டன் என்ன - நின்னைத் திருத்தொண்டன் என்று சொல்லும்படி, கொண்டனன் - கொண்டருளினார்; (எ - று.)

(வி - ரை.) திருமாலைக் 'கடனிறவண்ணன்' என்றது, காத்தற்றொழிலால் சத்துவகுணமுடையவரேனும் தமோகுணவுருவத்தராதலான். சுருதிநாயகன் - வேதநாயகன் (சிவபெருமான்). பரிதி- சக்கரப்படை. சிவபெருமானது திருவடியில் வேதங்களே சிலம்பு வடிவம் என்பார், 'மறைச்சிலம்பரற்று மலரடி' என்றார். இதனை,

"மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையா
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமா
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகு
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்."

என்பதனு லுணர்க. ஈண்டுக் கூறிய நாயன்மாருள், கணம்புல்லநாயனார், அரிவாட்டாயநாயனார், திருக்குறிப்புத்தொண்டநாயனார் ஆகிய இவர்கள் தமக்கு வரும் இறுதியையும் நாடாது தம் விரதமுடித்த தவத்தினரும்; இயற்பகைநாயனார், மானக்கஞ்சாறநாயனார், கழற்சிங்கநாயனார், சண்டேசுரநாயனார், சிறத்தொண்டநாயனார், கோட்புலிநாயனார், செருத்துணைநாயனார் ஆகிய இவர்கள் உலகியலைக் கடந்து வழிபட்ட உத்தமரும்; இளையான்குடிமாறநாயனார், அதிபத்தநாயனார் ஆகிய இவர்கள் சுற்றமுந் தாமும் உறுபசி யுழந்தும் தங்கியதிருஞ்றுத் தகையினரும்; அமர்நீதிநாயனார், திருநீலகண்டநாயனார் இவர்கள் சத்தியநெறி வழாச் சால்பினரும் ஆவர் என்க. இங்ஙனம் உலகவாஞ்சை யொழித்து தற்போத மிறந்து சிவபெருமானை வழிபடல் சிவபுண்ணிய முதிர்ந்த சிலர்க்கன்றிப் பிறர்க்கெய்தாமையின் அவ்வியல்பினர் அவனியில் மிக அரியர் என்பார், 'ஒரு சிலர் தொண்டராயினர்' என்றார்.

"கடனிறவண் ணக்கவியிற் கஞலியமெய்த் தொண்டர்
கணம்புல்ல ரியற்பகையார் கஞ்சாற ரிளையான்
குடிமாற ரமர்நீதி கோதிலதி பத்தர்
கூடரிவாட் டாயர்திருக் குறிப்பறிநற் றொண்ட
* ரடல்கொள்கலிக் கம்பர்மைந்த ராயசண்டி கேச
ரரியசிறத் தொண்டர்சுற்ற மதுகளைகோட் புலியார்
திடமுடைய செருத்துணையர் திருநீல கண்டர்
செப்புமிவ ராமென்னத் தேர்ந்தறிக முறையே."
(இஃது, இத்திருப்பாடற்குறிப்பு)

செங்கண்மால் - செந்தாமரைபோன்ற கண்களையுடைய மால். 'செங்கண்மால்' என்பது குறிப்பு மொழியாய்த் தாமரையை யுணர்த்திற்று; அடியவர்க்கு அருள் செய்துசெய்து சிவந்தகண் எனினும்

* அடல்கொள் கழற்சிங்கரெனவும் பாடம்.

அமையும். சங்கம் - பாஞ்சசன்னியம்; அது பஞ்சசனன்உரு எலும்பாதலை,

"சங்க நேருருப் பஞ்ச சனப்பெயர்
வெங்க ணுனையு மாயிடை வீட்டியே
துங்க வோசை வலம்புரித் தோற்றமா
மங்க வன்ற னெலும்பை யணிந்தனன்."

என்பதனாலு மறிக. இப்பி ஆயிரஞ் சூழ்ந்தது இடம்புரியும், அஃதாயிரஞ் சூழ்ந்தது வலம்புரியும், அஃதாயிரஞ் சூழ்ந்தது சலஞ்சலமும், அஃதாயிரஞ் சூழ்ந்தது பாஞ்சசன்னியமுமாக, செங்கண்மா றடக்கையிலுள்ள அத்தகைப் பாஞ்சசன்னியம் நாணுவதெற்றுக்கெனின், தான் உயர்ந்த இனத்ததாயினும் தெய்வீக தலத்தின் உதிப்பின்றி பஞ்சசனனென்னும் அசுரனுருவெலும்பா யுதித்தமையின் இகழப்படுதலும், இவ்வலம்புரி தன்னிற் றாழ்ந்த இனத்ததாயினும் தெய்வீகமுடைய இத்திருவாதவூரில் உதித்தமையின் எவரானும் புகழப்படுதலும் பற்றியென்க. அன்றிப் பாஞ்சசன்னியமும் வலம்புரி (வலம்புரிமுறுக்குடையது)யேயாகலின் தடக்கையிலுள்ள தனக்கு சுயேச்சா சஞ்சார மின்மையும், அதற்கஃதுண்மையும்பற்றி இனங்கண்டுழி நாணுகின்றதெனினும் அமையும். எனவே, அம்பிகைபாகரை வழிபடுவான் திருமாலனுக்குத்தோறும் அவர் தடக்கையிற் சங்கம், ஈங்குள வலம்புரி கண்டு இவ்வியல்பான் நாணுகின்றதென்பது. வாதவூர் - வாயுதேவன் சிவபெருமானைப் பூசித்தமையால் அப்பெயர் ஆயது.

திருமால் சிவபெருமானிடத்துச் சக்கரப்படை பெற்றது:—

ததீசிமுனிவர்பேரில் திருமால் சக்கரப்படை பிரயோகஞ்செய்ய அது தன் கூர்வாய்மழுங்கித் திரும்பிற்று. அங்ஙனங் கண்ட திருமால், சிவபிரானிடம் சலந்த சங்காரஞ்ச செய்த சக்கா மிருக்கக் கண்டு அதனைப் பெறக்கருதித் திருவீழிமிழலையில் ஆயிரந் தாமரை

மலர்களால் நாடோறும் சிவபிரானைப் பூசித்து ஒருநாள் ஒரு மலர் ஒரு மந்திரத்திற்குக் குறையத் தன் கண்ணையே மலராகப் பாவித்து அதனை இடந்து திருவடியில் அருச்சித்து அச் சக்கரத்தையும் ஆழியான் என்னும் பெயரையும் பெற்றனர். இதனை,

"அவன்சலந் தரனை வீட்டு மாழியை வாங்கப் பன்னாட்
சிவன்கழல் வழிபட் டோர்நாட் செங்கணே மலராச் சாத்த
வுவந்தனன் விடைமேற் றோன்றி யப்படை யுதவப் பெற்று
நிவந்தன னதனால் வைய நேமியா னென்ப மாதோ."

என்னும் கந்தபுராணத்துத் ததீசி யுத்தரப்படலச் செய்யுளானும்,

"அலரா யிரந்தந்து வந்தித்து மாலா யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய் தாற்கள வில்லொளிகள்
அலரா விருக்கும் படைகொடுத் தோன்றில்லை யானருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம் மிக்கைய மெய்யருளே."

என்னும் திருக்கோவையாரானும் அறிக.

முடிவிளக் கேரித்தவர் கணம்புல்லநாயனார்:—

இவர், சிதம்பரத்திலே புலீச்சுரமென்னும் சிவாலயத்தில் திருவிளக்குத் தொண்டினை மேற்கொண்டு, அதனால் தமது செல்வத்தையெல்லாம் இழந்து வறியராயினர். அங்ஙனமாகியும் திருத்தொண்டிற்கு முட்டின்றி கணம்புல்லை அரிந்து விற்று அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு செய்துவருநாளில், ஒருநாள் நெய் போதாது தமது திருமுடியைத் திருவிளக்கிலேற்றித் தமக்கு வரும் இறுதியையும் காடாது எரிக்கையில் சிவபிரானால் முத்தியளிக்கப் பெற்றனர்.

துணைவியை அளித்தவர், இயற்பகை நாயனார்:—

இவர், காவிரிப்பூம் பட்டினத்தில் வசிக்கருளிய வைசியர் குலத்தவர். சிவனடியார்கண்மாட்டு அன்பு பூண்டொழுகுமவர், சிவபெரு

மான் அவரன்பினை வெளியிடும்பொருட்டு, ஓரந்தண வடிவங்கொண்டு திருமேனியில் விபூதி பிரகாசிக்கத் தூர்த்த வேடத்தராய் நாயனார் வீட்டிற்கு எழுந்தருளினர். நாயனாரும் செய்த உபசாரத்திற்கு அளவில. பெருமான் அவ்வுபசாரங்கட்கு மகிழ்ந்து, நாயனாரை நோக்கி, "உம்மிடத்திலுள்ள ஒரு பொருளை விரும்பியே இற்றைக்கு ஈண்டு வந்தேன்" என்றனர். அதற்கு நாயனார், "எத்தகைய பொருளாயினுமாகுக; அப்பொருள் அடியேனிடத்துள்ளதேல் நும்முடையதே; திருவுளம் விரும்பியதை இன்னதெனவருளுக" என வினவினர். அதற்கு ஐயர் "உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன்" என்றார். நாயனார் அதற்கிசைந்து தம் மனைவியைக் கொடுக்கத் தாம் பெற்றுச் செல்லுகையில், அவரது சுற்றத்தார் அத் தீச்செய்கைக்கு இசையாது இறைவரைச் சூழ்ந்து தடுக்க, நாயனார் சென்று அவர்களைக் கண்டித்து இறைவரை வழிவிட்டனுப்பி மீண்டனர். நாயனார் மீண்டதும், சிவபெருமான், ஓரிடையூறு வந்தவர்போல நாயனாரை ஓலமிட்டழைத்து இடபவாகனரூடராய்க் காட்சிதந்தருளினார். நாயனார் ஆராமை மேற்கொண்டு நிலத்தில் விழுந்தனர்; எழுந்து ஆரத் துதித்தனர். சிவபெருமான், அவரை நோக்கி, "நம்மேலும் நம்முடைய அடியார்கள்மேலும் நிஷ்களங்கமாகிய அன்புவைத்த இயற்பகையே! நீ உன் மனைவியோடும் நம்முடனே வா!" என்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தானமாயினர். நாயனாரும் மனைவியாரும் சிவலோகத்தை யடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள்.

அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியவர், மானக்கஞ்சாற நாயனார்:—

இவர் கஞ்சாறூரில் வேளாண்குலத்துதித்து, சிவபத்தி அடியார் பத்தியிற் சிறந்த புண்ணிய சீலர். தாம் அருமையாகப் பெற்ற புதல்வியை ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு மணஞ் செய்விப்பதாய் நிச்சயித்து மணநாளில் மறைச்சடங்கு நடக்கும் சமயத்தில்

சிவபெருமான் மாவிரதவேடந் தாங்கிவந்து மணப்பெண்ணை ஆசீர்வதித்து, பிதாவாகிய மானக்கஞ்சாறரை நோக்கி, "இப்பெண்ணின் கூந்தல் நமக்குப் பஞ்சவடிக்குதவும்" என்று சொல்ல, உடனே நாயனார் தம் உடைவாளை யுருவிக் கூந்தலை அடியோடரிந்து அம்மாவிரதியர் கையிற் கொடுத்தனர். உடனே இறைவர் மறைந்தனர். பின்னர்ச் சிவகடாட்சத்தால் கூந்தல் வளர்ந்தது. ஏயர்கோன் கலிக்காமநாயனாருக்குத் தம் பெண்ணை மணமுடித்துக் கொடுத்து முத்தி பெற்றனர்.

பஞ்சவடி - மயிரினாலே அகலமாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணூலாகத் தரிக்கப்படும் ஓர் வடம். பஞ்சம் - விரிவு; வடி-வடம்.

நென்முளை வாரி இன்னமுதருத்தியவர், இளையான்குடிமாற நாயனார்:—

இவர், இளையான்குடியென்னும் ஊரிலே, வேளாண்குலத்தில் மாறனென்னும் பெயருடையராய் அடியார்கட்குத் திருவமுது செய்விப்பதே கடனெனக்கொண்டு ஒழுகுபவர். சிவபெருமான் இவரது பத்தியை வெளியிடுதற்பொருட்டு இவரைப் பெருமிடியி லிருத்தினார். அங்ஙனமாக்கியும், தமது கொள்கைக்கு மாறாது கடன்பட்டும் சிவனடியார்களை உபசரித்துவந்தனர். இறைவர், பெருமழை பொழியும் ஓர் நள்ளிரவில் ஓர் அடியவர்போல இவர் வீட்டினை யடைந்து "உணவு வேண்டும்" எனக் கூற, நாயனார் அவரை உபசரித்திருத்தி, பகல் வித்திய நெல்லினைக் கழனியிற் சென்று கூடையிற் றூங்கியேற்று, பாத்திகிரம்பா இளங்கீரையுடன் கொணர்ந்து மனைவிபாற் கொடுப்ப, மனைவியார் அந் நெல்லினை வறுத்துப் பதஞ்செய்து அரிசியாக்கிச் சமைத்து, கீரையைக் கறியாக்கி அடியவருக்கு உணவளிப்ப, சிவபெருமான் நாயனாரது அன்பின் முதிர்ச்சிக்குக் களிகூர்ந்து நாயனார் முத்தியளிக்கப் பெற்றனர்.

கோவணநேர் தனைநிறுத்துக் கொடுத்தவர், அமர்நீதி நாயனார்:—

சோழநாட்டிலே, பழையாறையென்னு மூரிலே, வைசியர் குலத்துதித்துத் திருநல்லூரில் மடங் கட்டுவித்து, அடியார்கட்குக் கந்தை கீள் கோவணம் என்பவற்றை யீந்து, அவர்களை உபசரிப்பவர். சிவபெருமான், அந்நாயனாரது பெருங்குணத்தை உலகினர்க்கு வெளியிடும்பொருட்டு ஓர்நாள் பிரமசாரி வடிவந் தாங்கிவந்து தமது கோவண மிரண்டனுள் ஒன்றை அவரிடங் கொடுத்து, "நாம் நீராடி வருகிறோம்; அதுவரையில் இதனை வைத்திருந்து மெக்குக் கொடும்" என்று கூறிச்சென்று, அதனைத் தாமே மறைத்தருளி, மழையில் நனைந்துவந்து, "வைத்த கோவணத்தைக் கொடும்" எனக்கேட்க, நாயனார் வைத்தவிடத்திற் சென்று தேடிக் காணாமையால் அஞ்சிநிற்க, அப்பிரமசாரியார் கண்டு "அதுபோனாலும் போகட்டும்; அதற்குச் சமமான இம்மற்றொரு கோவணத்திற்கு ஒப்பான எடையுடையதைக் கொடுத்தால்தான் உடன்படுவோம்" என்று கூற, நாயனார் துலைநாட்டி, ஓர் தட்டில் அக்கோவணத்தையிட்டு மற்றோர் தட்டில் தமது ஆடை பொன் முதலிய பொருளனைத்தையும் இட்டும் அதற் கொப்பாகாமையால் தாமும் ஏறி எடையை நிறுத்திச் சிவகதியை யடைந்தனர்.

அகப்படுமணி மீன் அரற்கென விடுத்தவர், அதிபத்தநாயனார்:—

சோழமண்டலத்திலே, நாகைப்பட்டணத்திலே, கடற்கரையிலுள்ள நுளைப்பாடியில் பரதவர்குலத்துதித்த அதிபத்தநாயனார், சிவபத்தியிற் சிறந்து தமது குலத்தொழிலாகிய மீன் பிடித்தலையே தொழிலாகக்கொண்டு, முதலில் அகப்படுமீனைச் சிவப்பிரீதியென்று விட்டுவந்தவர். ஒருநாளில் ஒருமீன் அகப்படினும் அதனைப் பரமசிவனுக்கென்றே விடுபவர். இங்ஙனம் ஒழுகுநாட்களில், அடுத்தடுத்து அநேக நாட்களில் ஒவ்வொரு மீனே யகப்பட அதனைக் கடலிலே விட்டுவந்தார். இங்ஙனம் நெடுநாள் கழிய உணவின்மையால் திரு

மேனி தளரவும் தம்முடைய தொழிலிலே நிலைநின்றமையைப் பரம சிவன் அறிந்து அவரது அன்பென்னு மமுதை உண்பவராயினர். இவ்வாறு நிகழும்நாளில் வேறொரு நாள் பரதவர்கள் முதலில் அகப் படும் ஒரு மீனையும் அவ்வாறே விட்டு மறுவலும் விலைமதிப்பில்லாத மகாதிவ்விய பிரகாசங்கொண்ட நவரத்தினங்களால் உறுப்பமைந்த அற்புதமாகிய ஒருமீனை வலைப்படுத்துக் கரையில் ஏறியபோது அம் மீன் சூரியன் உதித்தாற்போல உலகமெல்லாம் வியக்கும்படி மிகப் பிரகாசிக்கக்கண்டு அதனை யெடுத்து "ஒருமீன் படுத்தோம்" என்றார் கள். "இது இரத்தினங்களால் உறுப்பமைந்த பொன்மீனாதலால் என்னை ஆட்கொண்டருளிய பரமசிவனுக்காகும்" என்று கடலிலே விட்டார். அப்பொழுது பரமசிவன் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருள, அதிபத்தநாயனார் ஆனந்தவருவிசொரிய மனங் கசிந்துருகி நமஸ்கரித்துச் சிரசின்மேலே அஞ்சலிசெய்தார். சிவ பெருமான் தமது உலகத்திலே அடியார்களோ டிருக்கும்படி அவ ருக்கு அருள்செய்தனர்.

பூட்டியரிவா ளூட்டியரிந்தவர், அரிவாட்டாயநாயனார்:—

சோழமண்டலத்திலே, கணமங்கல மென்னுந் திருப்பதியில் வேளாண்குலத்துதித்த தாயனார் என்பவர், நாடோறும் சிவாலய நிவே தனத்திற்குச் செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவும் கொடு போய்ப் பரமசிவனுக்குத் திருவமுது செய்வித்து வருவார். இவ்வாறு நிகழுங்காலத்தில், கடவுளுடைய திருவருளினால் அவருக்கு வறுமை யுண்டாயிற்று. உண்டாகியும் தம் வழக்கத்தை விடாமல் அரிசிமுத லியவற்றைச் சிவாலயத்தில் கொடுபோய்க் கொடுத்துவரும் நாளில், ஒருநாள் அரிசி முதலியவற்றை எடுத்துச் செல்லுகையில் பசியினாற் பால் கால்இடறிவிழ, அப்பொழுது நிலவெடிப்பில் எல்லாம் சொரி ந்துவிடவே, தமது நியதிகெடுதலின் மிகவருத்தமுற்றுத் தம் ஊட்டி யை அரிவாள்கொண்டு அரிகையில், சிவபெருமான், "அக்கமரில்

அதனை உண்டோம்'' என மாவடுவைக் கடித்துக்கொண்டு திருக்கரத்தை நீட்டி அரியவொட்டாது தடுத்து முத்தி கொடுக்கப்பெற்றனர்.

சிலையிடை தலைமோதியவர், திருக்குறிப்புத்தொண்டநாயனார்:—

தொண்டைநாட்டில் காஞ்சி நகரில் ஏகாலியர் குலத்திலே தோன்றி, அடியார்களின் குறிப்பறிந்து அவர்கள் வஸ்திரங்களை மாசு நீக்கிக் கொடுத்தலால், திருக்குறிப்புத்தொண்டர் என்னும் பெயருடையவராயினர். இவரது பத்தி வெளியாகும்பொருட்டு, சிவபெருமான் ஏழையராய் அழுக்குக் கந்தை தரித்த ஓர் சிவனடியார் போல் நாயனாருக்கு முன்வந்து நின்றனர். நாயனார் அவரை வணங்கி, "சுவாமி! தங்கள் உடையைத் தந்தால் அந்திக்குமுன்னே மாசுநீக்கித் தருகிறேன்'' என்ன, சுவாமிகள் "இக் கந்தையைவிட எனக்கு வேறில்லையாதலால் பொழுதுபோகு முன்னர்த் தருவீராயின், தருவேன்'' எனச் சொல்லித் தந்து, பெருமழை யுண்டாக்கி அதனால் திசைகள் தெரியாமல் மயங்குமாறு இருளையு முண்டாக்கினர். நாயனார் குளத்தில் வஸ்திரம் நனைத்தவுடன் மழை வந்தது கண்டு மனம் புழுங்கிக், "குறித்தகாலம் தவறிவிட்டதே; அன்றியும், அடியவர் திருமேனியும் குளிரால் வருந்தும்படி தீங்கு செய்தேனே'' என்று வருந்தித் துவைக்குங் கற்பாறையின்மேலே தம் தலையை மோதிக் கொள்ளத்துணிந்தனர். பெருமான், நாயனாரின் அன்பினை வியந்து அப்பாறைக்கருகில் ஓர் கரத்தை நீட்டித் தடுத்து, "அன்பனே! உவந்தனம்; இனி நமது உலகத்தில் பிரியாதிருக்கக்கடவை'' எனக் கட்டளையிட்டருள, நாயனார் சிவலோக மடைந்தனர்.

மொய்மலர்க்கோதை கைம்மலர் துணித்தவர், கழற்சிங்க நாயனார்:—

காடவர் குலத்திலே அவதரித்துப் பரமசிவன் திருவடியன்றி வேறொன்று மறியாத கழற்சிங்கநாயனார் அரசுபூண் டொழுகு

காலில், ஒருநாள் மாதேவியுடன் திருவாரூரை யடைந்து சுவாமி தரிசனஞ் செய்தனர். மாதேவியார், நாயனாருடனே திருக்கோயில் வலஞ்செய்து வரும்பொழுது திருமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்தில் விழுந்துகிடந்த ஒரு புதுப்பூவை எடுத்து மோந்தாள். செருத்துணை நாயனார் அதுகண்டு, சிவார்ச்சனைக்குரிய மலரை மோந்த குற்றத்தால் அத் தேவியாரது மூக்கினை அரிந்தனர். கழற்சிங்க நாயனார் அதுகண்டு "புஷ்பத்தை எடுத்த கையையன்றோ முன் துணிக்கவேண்டும்" என்று சொல்லி, கட்டிய உடைவாளை யுருவித் தமது மாதேவியினது கையைத் துணித்தனர். இவ்வரிய திருத்தொண்டைச் செய்த கழற்சிங்க நாயனார், சைவநெறி தழைத்தோங்க நெடுங்காலம் அரசியற்றிப் பரமசிவனுடைய திருவடி நீழலை அடைந்தார்.

தந்தையைத் தடிந்தவர், சண்டேசுரநாயனார்:—

இந்நாயனார், சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரிலே, பிராமண குலத்திலே, காசிபகோத்திரத்திலே, எச்சதத்தன் என்பவருக்குப் பவித்திரை வயிற்றில் அவதரித்தவர். பெற்றோர் விசாரசருமர் எனப் பெயரிட்டனர். ஐந்து வயசிலேயே இவர் ஓதுவிப்பாரின்றி யாவுமுணர்ந்தவர். இவர் அறிவின் திறத்தை யாவருங் கண்டு வியப்புற்றார்கள். இவர், பாலிய தசையிலேயே 'பதி ஒன்று உண்டு' என்பதையும் 'அப்பதிக்கு அன்பு செய்தாலன்றித் தமக்கு வேறு கதியில்லை' என்பதையும், ஆராய்ச்சியுடன் சந்தேக விபரீதமறத் தெளிந்தவர். பசு மேய்ப்போன் பசுக்களைத் துன்புறுத்துவதை இவர் கண்டு மனஞ் சகியாது, தாம் அத்தொழிலை மேற்கொண்டு அவ்வூரினருகே மேய்த்து வந்து, ஆங்குள்ள மண்ணியாற்றங்கரையிலே மணலைச் சிவலிங்கமாகக் குவித்துப் பாலைக்கறந்து அபிஷேகித்துச் சிவப்பிரீதி செய்துவருவதைக் கேள்வியுற்ற ஊரார், அவர் தந்தைக்குணர்த்த, அவர் தந்தையார் ஓர் மரத்தில் மறைந்துகொண்டு நின்று அங்ஙனம்

கிகழ்வுழி, அப்பாற்குடத்தைக் காலாலிடற, நாயனார் கண்டு தந்தை யென்றும் வேதிய னென்றும் கருதாது அருகிலுள்ள கோலொன்றை யெடுத்து மழுவாகக்கண்டு தந்தையின் காலைத் தடிந்தார். சிவபூசைக்குவந்த இடரை நீக்கிய விசாரசருமர் முன்போல அருச்சனை செய்ய, சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றி, அவரைத் திருக்கரங்களினால் எடுத்து, "நீ நம்பொருட்டு உன் தந்தையின் காலை வெட்டினாய்; இனி உமக்கு நாமே தந்தை" என்றருளிச்செய்து, "நாம் நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கினோம்; நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி செய்தோம்" என்று கூறித் தாமணிந்திருக்கும் கொன்றைமாலையை யெடுத்து அவருக்குச் சூட்டினர். பின்னர், அவ்விசாரசருமர் பரமசிவனாலே தரப்பட்ட சண்டேசுரபதத்தை யடைந்தார்.

மைந்தனைக் கொன்றவர், சிறுத்தொண்டநாயனார்:—

இவர், சோழமண்டலத்திலே, திருச்செங்காட்டங்குடியிலே, மாமாத்திரர் குலத்திலே, பரஞ்சோதியா ரென்னும் பெயருடையவர். 'பரமசிவனே மெய்க்கடவுள்' என்றும், 'அவருடைய திருவடிகளை யடைதலே முத்திநெறி' என்றும் தெளிந்து அகோராத்திரம் பரமசிவனையே இடைவிடாது தியானித்துச் சிவனடியார்கட்குத் திருத்தொண்டு செய்துவருவார். இவர், அரசனிடத்தில் அணுக்கராகி, அவன்பொருட்டு யானை செலுத்திக்கொண்டு சென்று, அவனோடு மாறுபட்ட பலவரசர்களை வென்று அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி அரசனால் நன்கு மதிக்கப்பட்டவர். இவருடைய கற்புடைய மனைவி திருவெண்காட்டு நங்கையார். அந் நங்கையாரோடு கூடி இல்லறத்தில் வாழ்ந்திருந்து, நாடோறும் முன்னே சிவனடியார்களை உண்பித்து, பின் தாம் உண்பார். இவருடைய புத்திரர் பெயர் சீராள தேவர். அப் புத்திரனுக்கு வித்தியாரம்பஞ் செய்தநாளிலே அத்

திருப்பதிக்கு எழுந்தருளிவந்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரை எதிர்கொண்டழைத்து, வணங்கித்துதித்து அவராலே திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடி யருளப்பட்டார். சிவபெருமான் இவருடைய உள்ளன்பை வெளியாக்குதற் பொருட்டு ஒரு வைரவர் கோலங்கொண்டு இல்லின்கட் சென்றனர். நாயனார் அவரை வணங்கித் திருவமுது செய்தற்கு வேண்ட, அதற்கு, வைரவர் கோலங் கொண்டு வந்த சிவபெருமான், நாயனாரை நோக்கி, "அன்பரே! நாம் உத்தரதேசத்துள்ளோம்; உம்மைக் காண வந்தோம்; நம்மை அமுது செய்வித்தல் உம்மால் முடியாது; அது மிக அருமை; ஏனெனின், நாம் ஆறுமாதத்திற் கொருமுறை பசுவைக் கொன்றுண்போம்; அதற்குரிய நாளும் இந் நாளேயாம்; ஆதலால், அப்படி யூட்டுதல் உம்மால் இயலாது" என்று கூறினர். நாயனார் "மிக நன்று; அடியேன் அநேக பசுக்களையுடையேன்; தேவரீருக்குப் பிரீதியாகிய பசு இன்னது என்று அருளிச்செய்வீராகில், அங்ஙனமே செய்வேன்" என்றனர், வைரவர், "நாம் உண்பது நரபசு; அஃது ஐந்து வயசினையுடையதாயும், அவயவப் பழுதில்லாததாயும், ஒரு குடிக்குத் தான் ஒன்றேயாயும் இருக்கவேண்டும்; அவ்வியல்புடைய சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய் பிடிக்கத் தந்தை அரிதல்வேண்டும்; இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் உண்போம்" என்றனர், நாயனாரும் நங்கையாரும் அதற்குச் சம்மதித்து அங்ஙனமே செய்து வைரவருக்குத் தெரிவிக்க, அவர், "நம்முடன் உண்ணும் பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டேல் அழையும்!" என்ன, நாயனார் "அவன் இங்கு உதவான்" என்ன, வைரவர், "அவன் வந்தாற்றான் நாம் உண்போம், தேடியழையும்" என்றனர். நாயனார் தரியாதெழுந்து மனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலே சென்று "புதல்வனே! வா" என்றழைக்க, மனைவியாரும், "சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும்பொருட்டு உன்னை அழைக்கிறார், வா!" என்றழைக்க, அப்பொழுது அப் புதல்வர் பரமசிவனுடைய திரு

வருளினாலே பள்ளியினின்றும் ஓடிவருபவர்போல வந்தனர். வந்த அப் புதல்வரை நங்கையார் எடுத்துத் தழுவி நாயனார் கையிற் கொடுக்க, அவர் "இனிச் சிவனடியார் திருவமுது செய்யப் பெற்றோம்" என மகிழ்ந்து அடியவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தனர். அதற்கு முன்னரே, இறைவர் மறைந்தருள, நாயனார் அவரையும் கலத்திலே இறைச்சியையும் காணாமையால் திகைத்து அச்சமுற்று, "இறைவர் அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்குச் சென்றனரோ?" என்று தேடி மயங்கிப் புறத்தே செல்ல,, நாயனார் செய்தது நிஷித்தானுட்டானமாயினும், அவர் சிவாநந்தாநுபவமேலிட்டு நிற்கையால், அதனை விகிதானுட்டானமாகவே கொண்டருளிய சிவபெருமான், உமாதேவியாரோடும் சுப்பிரமணிய சுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோற்றியருளினார். நாயனார் மனைவியார் புதல்வர் தாதியாராகிய நால்வரும் அவர்களைத் தரிசித்து ஆனந்த வருவிசொரிந்து நிற்க, பரமசிவனும் பார்வதியம்மையும் சுப்பிரமணிய சுவாமியும், அந் நால்வர்களையும் தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப் பேரின்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும் பொருட்டு உடன்கொண்டு திருக்கைலாசத்தை அடைந்தார்கள்.

இவர், சிவனடியார்களின் திருமுன்பே, மிகச் சிறியராய் ஒழுகுவாராதலின், சிறுத்தொண்டர் என்னும் பெயர் பெற்றனர்.

துற்றஞ் செய்த சுற்றங் களைந்தவர், கோட்புலிநாயனார்:—

இந் நாயனார், சோழநாட்டிலே, நாட்டியத்தான்குடி யென்னும் ஊரிலே, வேளாண் குலத்திலே அவதரித்தவர். சேனாபதியாயமர்ந்து அவ்வூதியத்திற்கு நெற்கொண்டு சிவனடியார்க்கும் சிவாலயத்திற்கும் செலவிடக் கட்டிவைத்து, அரசன் கட்டளைப்படி போருக்குச் சென்று மீண்டு வந்து பார்க்க, அந் நெல்லைத் தமது உறவினர் செலவிட்டதறிந்து, அவரைத் தமது வாளால் வீழ்த்திச் சிவபதமடைந்தனர்.

பூக்கோளுமாதர் முக்கினை அரிந்தவர், செருத்துணைநாயனார்:—

இவருடைய சரித்தை கழற்சிங்கநாயனார் சரிதத்திற் காண்க.

இளமுலைமாதர் வளமை துறந்தவர் திருநீலகண்டநாயனார்:—

இவர் சிதம்பரத்திலே குயவர் குலத்திலே அவதரித்தவர்; சிவ பத்தி அடியார் பத்தியிற் சிறந்தவர்; தம்முடைய குலத்திற்கேற்ப மட்கலங்களை வனைந்து விற்றும், திருவோடுகளைச் சிவனடியார்கட்குக் கொடுத்தும் வந்தார். இந் நாயனார் சிவபெருமானது கண்டத்தைத் திருநீலகண்டமென்று எப்பொழுதும் சிறப்பித்துச் சொல்லுவார். அதனால் அவருக்குத் திருநீலகண்ட நாயனாரென்று பெயர். ஒருநாள் நாயனார் அவ் வூரிலே ஒரு வேசியிடத்துச் சென்று வந்ததை அவர் மனைவியார் அறிந்து தம்மைத் தீண்டவந்த ஓர்நாளில், "நீவிர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். நாயனார் அச்சமுற்றுத் தம் மனைவியேயன்றி மற்றப் பெண்களையும் மனத்திலுந் தீண்டேனென்று உறுதிகொண்டு அயலறியாமல் வாழ்ந்து மூப்படைய, சிவபெருமான் சிவயோகி வடிவாய் ஓர் பாத்திரத்தைத் தாங்கித் திருநீலகண்டரிடம் வந்து, "இப் பாத்திரம் மிகவும் சிறப்புள்ளது; இதை நீர் வைத்திரும்" என்று கொடுத்துப் போய்ப் பின்னர் வந்து பாத்திரத்தைக் கேட்க, அது வைத்தவிடத்திற் காணாமையால் "வேறு பாத்திரம் தருகிறோம்" என்று வேண்ட, சிவயோகியார் கோபமுற்று, "காணாமற்போனது உண்மையாயின் நீர் உமது மனைவியைக் கைப்பற்றி நீரிலே மூழ்கிச் சத்தியம் பண்ணித் தாரும்" என்றனர். அந் நாயனார் ஒரு மூங்கிற்றடி யெடுத்து மனைவியுந் தாமுமாக இரண்டு பக்கமும் பற்றி நீரில் மூழ்கப் போகையில், "நீர் மனைவி கையைப்பற்றி மூழ்கும்" என்ன, நாயனார் பலருமறிய ஆதியில் நடந்தவை யெல்லாம் தெரியச் சொல்லித் தண்டத்தைப் பற்றிக்கொண்டே நீரில் மூழ்கி மூப்பு நீங்கி

வாலிபத்தோ டெழுந்து சின்னுள் வாழ்ந்திருந்து சிவபெருமான் அருளால் கைலாயத்தை அடைந்தார்.

சிவபெருமான் குதிரை மாறினது:—

அரிமர்த்தன பாண்டியரிடம் மந்திரியாயிருந்த வாதவூரடிகள், குதிரை வாங்கும்பொருட்டு, அவன் கொடுத்த பொருளைத் திருப்பெருந்துறையில் பரமசிவன் தந்த காட்சியைத் தரிசித்து உண்டான அன்பின் மிகுதியால் அச் சிவத்தொண்டில் செலவிட, பின்பு அப் பொருளின் பொருட்டு வருத்த முறுவிக்கப்பட்ட அவ்வடியவரது துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் நரிகளைக் குதிரைகளாக்கிக் கொணர்ந்து விற்றனர் என்பதாம்.

சிவபெருமான் மண் சுமந்தது:—

வாதவூரடிகளை வருத்தியதன் பொருட்டு அரிமர்த்தன பாண்டியன்மீது உண்டான கோபத்தால் சிவபிரான் வையையாற்றை அவனுடைய நகர்மேலேவ, அந் நதி மதுரையை அழிக்குமாறு பெருகிவர, அந் நகரத்தார் யாவரும் அரசன் கட்டளைப்படி கூலியாட்களை வைத்துக் கரை கோலுகையில், சோமசுந்தரக் கடவுள், பிட்டுவிற்றுண்ணும் வந்தியென்பாள் பொருட்டு வேலையாளாக வந்தமர்ந்து முடியின்மேல் கூடையில் மண்ணைச் சுமந்துகொண்டு போய்க் கொட்டினர் என்பதாம்.

சிவபெருமான் மாற்றடி பட்டது:—

சோமசுந்தரக்கடவுளாகிய கூலியாளர், யாற்றங்கரையை யடைந்து, 'வந்தியின் கூலியாள்' என்று தம்மை எழுதுவித்துக்கொண்டு, கரையைக் கோலாது விளையாடிக்கொண்டு நின்றார். அப்பொழுது அடைக்கப்பட்ட கரைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்த ஏவலாளர்கள், வந்தியென்பாளுக்கு விட்ட பங்குமாத்திரம் அடைபடா

மை கண்டு அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன், அவரைக் கண்டு கோபமிகுந்து பொற்பிரம்பைக் கையினால் வாங்கி உலகமே யுருவமாக யோனிகளுருப்பாக்கொண்ட அவருடைய திருமுதுகில் அடித்தான். சோமசுந்தரக் கடவுள் கூடையோடு மண்ணை உடைப்பில் கொட்டிவிட்டு உடனே மறைந்தருளினார். பெருமான்மீது பட்ட அவ் வடித் தழும்பு அப் பாண்டியன் முதலாயினார்மேல் பட்டது என்பதாம்.

இராவணன் கைலையை யெடுத்தது:—

இராவணன், தேவாசுரர்களால் இறவாவரம் பிரமனிடம் பெற்றுத் திக்கெல்லாம் செயங்கொண்டு, குபேரனை யெதிர்த்துப் புஷ்பக விமானத்தைக் கவர்ந்துகொண்டு, அதிலிவர்ந்து கைலை மலைக்கு நேரே வர, திருநந்திதேவர் கண்டு தடைபடுத்த, இக் கைலையை வேரோடு பறித்தெறிவேன்'' எனக் கல்லுகையில், சிவபெருமான் பெருவிரலால் அழுத்தத் துன்புற்று, நெடுங்காலம் கீழே கிடந்து வருந்தி, சிவபிரானைத் துதித்து அதினின்று நீங்கி இலங்கைக்குச் சென்றான் என்பதாம். (கஉ)

நேரிசை வெண்பா

13. மகிழ்ச்சி மிகவுண்டு போது மெதிர்வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரை யுந் தண்புகலிச் சம்பந்தா!
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

(இ - ள்.) நெகிழ்ச்சி மலர் - விரிதலையுடைய மலர்களில், சந்தையினும் வண்டு இரையும் - சந்தையொலியினும் வண்டுகள் மிக வொலிக்கும் (சோலை சூழ்ந்த), தண் புகலி சம்பந்தா - குளிர்ச்சி வாய்ந்த சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்த மூர்த்தியே! எதிர் வந்து - சன்னிதிமுன்னர் அடைந்து, புகழ்ச்சியொடு - சீர்த்தியொடு,

நீ பாடும்போது - நீ (வேதசிவாகம நெறிகளைப்) பாடுங்கால், தந்தை யினும் பால்கொடுத்த தாய்க்கு - தந்தையாகிய சிவபெருமானினும் ஞானப்பாலைக் கொடுத்த அன்னையாகிய உமாதேவியாருக்கு, மிக மகிழ்ச்சி உண்டுபோலும் - மிக உவகையுண்டுபோலும்; (எ-று.)

(வி-ரை.) பிறதேயங்களில் பெறற்கரிய வளமனைத்தும் ஆண்டு நிரம்பலின் அவை கொள்வான் வேண்டி செறியும் பதினெண்டேய மாந்தரும் பகரும் சொற்கள், அக்கரவடிவாய்ப் பொருள் பயக்கும் சுத்த மாயாகாரியமாகிய ஒலியேயாகியும், அவை சந்தையிற் றிரண் டெழிப் பொருள்பயவாப் பூதகாரிய ஒலியாய் முழங்காநிற்க, வண்டு கள் மணங்கவர்ந்து மதுமாந்திப் பாடும் இசைகள் அவ்வொலியினு மிக்கு இசையெனு மியல்பின்றிப் பெருமுழக்காய் முழங்குமென் பார், 'சந்தையினும் வண்டிரையும்' என்றார். சூரிய வெப்பத்தை வெறுத்துத் தன்பா லடைபவரை மீட்டும் அவ் வெப்பத்தை விரும் பச்செய்யும் சீதளச்சோலையுடைத் தென்பார், 'தண்புகலி' என்றார். சந்தை - பற்பல பொருளுங் கொள்வான் பலருங் கூடுமிடம். 'புகலிச் சம்பந்தா' என்றது, வேண்டிய வேண்டியாங்களித்தலின் எவரும் விழைந்து புகலடையும் தலத்தினர் என்றல். புகழ்ச்சியைப் பாடு மென்னாது 'புகழ்ச்சியொடு பாடும்' என்றது, சிவஞ்சத்திகளின் புக ழ்ச்சியோடு வேதசிவாகம நெறிகளையும் தெரிந்துணர்த்தலான். தந் தையார் கல்வியறிவுடைமையால் தனயர் அறிவுடைமையைத் தாம் மதித்து மகிழ்தலும், தாயார்க் கஃதின்மையான் "உன் மகன் சால் புடையன்" எனக் கற்றோ ருரைக்கக் கேட்டு மகிழ்தலும் பெரிதும் உலகியல்பாக, இறைவியார் இயற்கை யறிவுடைமையின் எதிர்வந்து பாடுங்கால் அத் திருநெறித் தமிழின் அருமையை மதித்தும், தா மளித்த ஞானப்பால் அதற் கேதுவாதலைத் துணிந்தும், இறைவரி னும் இனிது உவந்திருப்பர் என்பார், 'தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு மகிழ்ச்சி மிக வுண்டுபோலும்' என்று கூறினார்.

'உண்டுபோலும்' என்புழிப், போலும் ஒப்பில் போலி. வேத சிவாகம நெறிகளை என்பது, அவாய்நிலை. சந்தையினும் தந்தையினும் என்புழியுள்ள உம்மைக ளிரண்டும் உயர்வுசிறப்புப் பொருள வேனும் ஒன்றற்கொன்று குறைபா டுடைத்தன் றென்னும் பொருளவாய் நின்றன. 'புகழ்ச்சியொடு' என்புழி, ஒடு என்பதை ஐயுருபாக்கிப் புகழ்ச்சியை எனினும் அமையும். (கங)

கட்டளைக் கலித்துறை

14. தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னாறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னாணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னோக்குதற்கே.

(இ-ள்.) நோயிலியாகிய-பிறவி நோயில்லாதவராகிய, சொல் இறை - வாகீசமூர்த்தி, தான் எனும் - ஆன்மா எனப்படுகின்ற, ஓர் கோயிலின் - ஒப்பற்ற கோயிலின்கண், ஆர் - பொருந்திய, அறிவு ஆகிய நாமம் - அறிவு என்னும் பெயரை, முன் கொண்டிருந்த - அநாதியே கொண்டுள்ள, வாயிலின் - வாயிலில் பந்தித்து நிற்கும், ஆணவம் ஆகும் - ஆணவமலமென்கின்ற, கபாடமும் மன்றிறந்து - கதவையும் மிகத் திறந்து, தாய் இலி ஆகும் - தனக்கொரு தாயு மில்லாதவராகிய, சிவபெருமான்தனை - சிவபெருமானை, நோக்குதற்கு காட்டுவன் - காணக்காட்டுவர்; (எ-று.)

(வி - ரை.) 'தாயிலியாகுஞ் சிவபெருமான்' என்பதற்கு, உயிருணர்வு முளைக்குமளவும் அவ்வுணர்வேயாகிக் காணப்படுதலில், பொருளாய் விளங்கும் சிவபெருமான் எனினுமாம். இப்பொருட்கு, தாய் - வினையெச்சம். தனக்கொரு தாயிலி - தனக்கொரு மூலமில்லாதவர் என்பது பொருள். "பிறந்திறந்த கதை கேட்டிலம்" என்பார், 'தாயிலி' என்றார். அன்றி, உயிர் அறிவு முளைத்துத் தோன்றுஞ்

காறும் அவ்வறிவேயாய்த் தானென் றொருமுதல் காணப்படுமா றின்றி நிற்பர் என்பார், 'தாயிலி' எனினும் அமையும். சிவபெருமான் என்றது, எவர்க்கும் நிரதிசய இன்பம் பயக்கும் இறைவராதலால். 'தானெனுமோர்கோயில்' என்பது, உயிர்க்குயிராய் உண்ணின் றுணர்த்தலின் அவ்வுயிரனைத்தும் இறைவர்க்கு ஆலயம் என்று உபசரிக்கப்படுதலாம். சிவன்போலத் தானே அறிவதன்றேனும் அறிவிக்கின் அறிவதாதல்பற்றி அநாதியே அறிவென்று உபசரிக்கப் பட்டு வருவதென்பார், 'அறிவாகிய நாமமுன் கொண்டிருந்த' என்றார். 'வாயில்' என்றது, உணர்த்திய வழியும் அவ்வறிவு யானென்றும் அவனென்றும் ஞாதுரு ஞேயங்களைப் பகுத்துணர்ந்து உயிரின் மூலைத்துத் தோன்றுதலான். உயிர் வியாபகமாகலின் ஆன்மாவெனப் பெயர் பெற்றதாக, அவ்வியாபக உயிரை அணுத்தன்மைபடுமாறு செய்தலின் மலம் 'ஆணவம்' என்னும்' பெயர்த்தாயிற்று. அது ஞானநிரோதகமாய் உயிரென்பதொன்றில்லை யென்னும்படி பொதிந்துகொண்டு நிற்பதொன்றென்பார், 'கபாடம்' என்றார். 'திறந்து' என்றது, அம்மலமும் அநாதி நித்தமாகலின் அதனை யொழிப்பது அதனது மறைத்தற்சத்தி மடங்கக் கீழ்ப்படுத்தலான். மலமுத்தராயினாரே பிறரையும் மலமுத்தராக்குதற் குரியார் என்றும், இவர் சொல்லளவானே ஆக்கவல்லுநரென்றும் கூறுவார் 'நோயிலியாகிய சொல்லிறை' என்றும், வழிபாடுடையார்க்குப் பதியறிவை யுறுவித்துக் காணப்படுமாறில்லாத அக்கடவுளை அகத்தே காணக்காட்டுவர் என்பார், 'நோக்குதற்குக் காட்டுவன்' என்றும் கூறினார். உயிர் முற்றும் சூக்குமவாலயமும் அவற்றி னுடலனைத்தும் தூலவாலயமுமாகக் கூறுவது நூற்றுணிபாகலின் பொதுப்படத் 'தானெனுமோர் கோயில்' என்றார் எனினும் இழுக்கன்று; இப்பொருட்கண், ஓர்-அசை யென்க; உம்மை - உயர்வு சிறப்பு; அல்லது திருமறைக்காட்டுத் திருக்கதவன்றி இதையும் என எச்சவும்மையாக்குக. பின்வருத்தாது

ஒழிப்பரென்பார், 'மன் திறந்து' என்றார். சிவதரிசனத்தினன்றிப் பாச க்ஷயமாகிய ஆன்மசுத்தி பிறவாதாகலான், 'ஆகிய' என்பதனைச் செய்யிய என்னும் வினையெச்சமாகக் கொண்டு, நோயிலியாகும்படி காட்டுவன் என்னலுமாம். முன்னுரைக்கு 'ஆகிய' என்பது ஆக்க வினை யில்லாததினாலே, இலக்கணைவகையாற் செய்த வென்னும் பெயரெச்ச வாய்பாட்டின்பாற்படுவதோர் வினையிடைச்சொல்.

திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காட்டில் திருக்கதவம் திறந்தமை:—

திருநாவுக்கரசு நாயனாரும், திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் பல ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருமறைக்காட்டை யடைந்து ஆலயத்துட் சென்று வலம்வந்து, வேதங்கள் அருச்சித்துத் திருக் காப்புச்செய்த திருக்கதவுக்கு முன்னின்று, பிள்ளையார் நாயனாரை நோக்கி, "அப்பரே! நாம் அபிமுகத் திருவாயில்வழியே சென்று சுவாமியைத் தரிசித்தற்குத் திருக்கதவு திறக்கும்படி பதிகம் பாடுக" என்றார். நாயனார்,

"பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்ம்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே."

என்னுந் திருப்பதிகம் பாட, கதவந் திறக்கப்படாமல் தாழ்த்தது கண்டு, "இரக்க மொன்றிலீர்" என்று திருக்கடைக் காப்பிலே பாடி வணங்கினார். உடனே திருக்கதவந் திறக்கப்பட்டது என்பதாம். ()

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

15. நோக்குறு துதலோ னின்னிடை விருப்பால்
நூற்பசு வன்ன நுண் மருங்குல்

வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றன னென்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றுநா வலனே.

(இ - ள்.) விழுங்கிய முதலை - விழுங்கிய முதலையே, கான்றிட - கரையிற் கக்கும்படி, காக்கரும் - (ஒருவராலும்) உதிப்பித்தற் கரிய, மதலை - புதல்வன், தோன்றும் - தோன்றுதற் கேதுவாகிய, நாவலனே - வாக்கின் வன்மையையுடைய புலவரே! நோக்குறும் நுதலோன் - நெற்றிக் கண்ணராகிய சிவபெருமான், நின்னிடை விருப்பால் - நின்னிடை வைத்த அன்பால், நூல் பகவு அன்ன - நூலின் நேர்பாதியை ஒத்த, நுண் மருங்குல்-நுண்ணிய இடையை யும், வார் குவி முலை - கச்சணிந்த குவிந்த தனங்களையு முடைய, மெல் மகளிர் தம்-மெல்லிய பரவைநாச்சியாரது, புலவி மாற்றுவான்- ஊடலைத் தணிக்க, சென்றனன் என்றால் - (மகிழ்ந்து) சென்றன னென்று பெரியோர் சொல்லுவாராயின், கோ கலிக்காமன் - ஏயர் குடித் தலைவராகிய கலிக்காமநாயனா ரொருவரும், (அது காரண மாக) வயிற்றிடை - தம் வயிற்றிலே, குத்திக்கொண்டது எதுக்கு - குத்திக்கொண்டது யாதுக்கு? நீ புகலாய்-நீ சொல்லுவாய்! (எ-று.)

(வி-ரை.) நோக்குறு நுதலோன் - நுதல் உறு நோக்கினோன் என விகுதி பிரித்துக் கூட்டுக; கேடரியன் என்பது அருங்கேடன் என்றாயவாறுபோல. நுதல் நோக்குறுவோன் எனினுமாம். இனி, நுதல் நோக்குறுவோன் என்பதற்கு, கருத்தின் குறிப்பைக் கண் டறிந்த கடவுள் எனினு மமையும். நுதலல்-கருதல். நோக்கு-குறிப்பு. உறுதல் ஈண்டு உற்றுணர்தல். 'நோக்குறும்' ஒரு சொன்னீர்மைத்து

எனினும் ஒக்கும். கருத்தின் குறிப்பாவது - பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக நுகர்தல். இவர் இங்ஙனம் நுகர்ந்தமை முன்னர்ப் பெறப்படும். நுதற்கட் பெருமானே சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தோழமை கொண்டான் எனவே, புலவி தீர்க்கச் சென்றாரும் அவரே என்பது போதர, 'நோக்குறு நுதலோன் நின்னிடை விருப் பால்.........மகளிர்தம் புலவி மாற்றுவான் சென்றனன்' என்றார். இத் தேவியார்மருங்குல், தனங்களால் வாட்டுதற்றன்மை பெற்ற மையால் அம் மருங்குலின் நுண்மை நோக்கி கழிவிரக்கம் கொள்ளு கின்றார் ஆதலின், 'நூற்பகவன்ன' நுண்மருங்குல்' என்றார். இதனைப் "பொய் கூறிலஞ் சிலர்போல்" என இந் நூலாசிரியர் கூறிய செய்யு ளானும் உணர்க. நின்பால் வைத்த நேயத்தால் சிவபெருமான் தூது சென்றிருக்க, அப் பெருமான் உள்ளக்கிடையை உணராது அது சிவாபராதம் எனச் சிந்தித்திருந்தமைபோலும் என்பார், 'குத்திக் கொண்டது எதுக்கு' என்றார். அவர் உள்ளக் குறிப்பை அறிந்துளீ ராதலின், நீ அறிவிக்க ஐயப்பாடில்லையாம் என்பார், 'நீ புகலாய்' என்றுங் கூறினார். கூறவே, சிவாபராதம் இயற்றினாரைத் தக்கவாறு தண்டிக்க அஃதியலாதேல், தம்முயிர் துறக்க என்பதே தலைமை விதியாதலாற் காணப்பெறின் இவ் விரண்டனுள் ஒன்று நிகழு மென்னுந் துணிபால்,

"அரிவைகா ரணத்தி னாலே ராளுடைப் பரமர் தம்மை
இரவினிற் றூது போக வேவியங் கிருந்தான் றன்னை
வரவெதிர் காண்பே னாகில் வருவதென் னாங்கொ லென்று
விரவிய செற்றம் பற்றி விள்ளுமுள் ளத்த ராகி."

இருந்தாராகலின், வரவு கேட்டுழித் தம்முயிர் துறந்தா ரென்பது. 'காக்கருமதலே' என்புழிக் காத்தற் கருமையாவது-காலங் கடந்தமை யின் மீட்டுயிர்ப்பித்தற் கியலாமை. மதலையும் என உயர்வு சிறப்

பும்மை கொடாதொழிந்தார்; ஆளுடைய நம்பிகளது திருவடிகளே நினைவாரை மீளாப் பிறவியின் மீட்கவல்லனவாயின் மீளாச்சேயை இவர் மீட்பித்த இஃதோர் வியப்பன் றென்பது தோன்றற்கு. இது குறிப்பெச்சம். 'தோன்று நாவலன்' என்பது, காரியத்தைக் காரணமாக வுபசரித்தல். உதிப்பித்தற்கரிய புதல்வனும் உதித்தற் கேதுவாகிய வன்மையர் என்றபடி. (கரு)

ஏயர்கோன் கலிக்காம நாயனார் வயிற்றிடைக் குத்திக்கொண்ட வரலாறு:—

ஏயர்கோன் கலிக்காமநாயனார் திருப்பெருமங்கலத்தில் வேளாண் குலத்தி லுதித்த மகா சிவபத்தர். இவர் சூலை நோயால் வருந்துகையில் சிவபிரான் இவரது கனவி லெழுந்தருளி, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரில் இந்நோய் தவிருமெனத் திருவாய்மலர்ந்தருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவனைப் பரவையார் வீட்டிற்குத் தூதனுப்பியவராதலின் அவர் சிவாபராதியெனக் கருதி அவரால் நோய் தணிவதினும் இறத்தலே நலமென்று தமது உடைவாளால் வயிற்றைப் பீறிக்கொள்ள, சிவபெருமான் அநுக்கிரகித்து உயிரீந்து சூலை தவிர்த்தருளினர். பின்னர்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு மிக்க நண்புற்றிருந்தனர்.

நேரிசை யாசிரியப்பா

16. வலமமு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்

செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே.

(இ - ள்.) வலம் மழு உயரிய - வலப்பக்கத்திலே மழுப்படையை உயர்த்திய, நலம் மலி-புனித நிரம்பிய, கங்கைநதி தலை சேர்ந்த-கங்காநதி தலைக்கூடப் பொலிந்த, நல் கருணைக்கடல் - நல்ல சிவம் என்கிற கிருபைக்கடலை, முகந்து - (பெருந்துறை புகுந்து) மொண்டு, உகந்த - உயர்ந்த, மாணிக்கவாசகனெனும் - மாணிக்கவாசகன் எனப்படுகின்ற, ஒரு மா மழை - ஒப்பற்ற சிறந்த மேகமானது, உலகு உவப்ப - மக்களுயிர்கள் மகிழ, பொழிந்த-சொரிந்த, திருவாசகம் எனும் - திருவாசகம் என்கின்ற, பெருநீர் ஒழுகி-பெருவெள்ளஞ் சென்று, ஓதுவார் - ஓதுவார்களுடைய, மனம் எனும் - உள்ளமென்கின்ற, ஒள் குளம் புகுந்து - ஒள்ளிய ஏரியினுள்ளே புகுந்து நிரம்பி, நா எனும் - வாய் என்கின்ற, மதகில் நடந்து-மதகின்வழி வெளிப்பட்டு, கேட்போர் - சிரவணம் செய்பவர்களுடைய, செவி எனும் - செவிகள் என்கின்ற, மடையில் - மடைகளில், செவ்விதின் செல்லா-வழுவுதல் இல்லாமற் சென்று, உளம் எனும்-அவர்களுடைய மனம் என்கின்ற, நிலம் புக - நிலத்திற் பாய, ஊன்றிய அன்பு ஆம் வித்தில்-அங்கே பதிக்கப்பட்டுள்ள அன்பென்னும் வித்திலே, சிவம் எனும் - சிவமென்கின்ற, மெல் முளை - சிறுமுளை, தோன்றி - முளைத்து, வளர்ந்து - வளர்ச்சியுற்று, கருணை மலர்ந்து-கிருபை விரிந்து, விளங்குறும் - ஒளிர்கின்ற, முத்தி மெய் பயன்-முத்தியென்கின்ற உண்மைப் பயனை, தரும்-உதவாநிற்கும்; (எ-று.)

(வி - ரை.) 'வலம் மழு உயரிய' என்பதற்கு 'வல்லமையாக மழுப்படை உயர்த்திய' எனினுமாம். 'நலம்' ஈண்டுப் புனிதமேற்று;

(புனிதம் - பரிசுத்தம்). கங்கைக்குப் புனிதமாவது மூழ்கியோர்க்கு அகத்தும் புறத்தும் தூய்மையைத் தருதலுடைமை. 'மழுவுயரிய' என்றதனாலும், 'கங்கை நதிதலை சேர்ந்த' என்றதனாலும் கருணைக் கடல் என்பது சிவபெருமானை உணர்த்திற்று. இனி, அனைத்தையும் புரக்கும் அளவுபடாக் கருணை உருவத்தர் என்பார், 'கருணைக்கடல்' என்றார். எவர்க்கும் இன்பம் நல்கலின் 'நற்கருணை' என்றார் எனினு மாம். உயரிய சேர்ந்த என்னும் எச்சங்கள், கருணைக்கடல் என்னும் ஓர் பெயர் கொண்டன. உலகு என்றது மக்களுயிர்களை; இம்மைப் பயன் கோடற்குரியன அவையேயாகலின். இனி, ஆண்பாற்கியைய வலத்தில் மழுவும் பெண்பாற்கியைய இடத்தில் மானும் ஏந்தியவர் என்பார், 'வலமழு வுயரிய' என்றார். சிவபெருமானது சடையில் கங்கைநதி சேர்ந்தமையை, இறைவியார் ஒரு விளையாட்டால் இறைவர் கண்களை மூடுங்கால் எங்கும் இருளடாக் கண்ட அச்சங் காரணமாக வியர்த்த அத் திருக்கரங்களி னுதித்த கங்கை அண்ட முழுதுங் கவர்தல் கண்டு அதனைச் செஞ்சடையின் ஓர் உரோமத்திற் செறித்தனர் என்பதனால் அறிக. இதனை,

"உமையாள் விழிமூ டவிருட் படலத் துலகங் கவலக் கனல்வாள்
விழியா, லமையா வருளு தனிரித் தொளியிக் கருளக் கிவர்
வேர் விரரோ றமெழ, விமையா விழிமா தாவிதிர்ப் பவலை
யெங்கும் பெருவெள் ளமெனப் பெருகக், குமையா தரு
ளென் றெவரும் பரவக் கூவிச் சடிலங் குடியேற் றினனே."

என வரும் தணிகைப் புராணச் செய்யுளானும் உணர்க.

முகத்தல் - மொள்ளல். சிவபெருமான், மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டது திருப்பெருந்துறை யாதலால் அது வருவிக்கப்பட்டது. ஒரு மா மழை என்பதற்கு - மேன்மை வாய்ந்த ஒரு மேகமானது எனினுமாம். மா - கருமையுமாம். உகத்தல் - உயர்தல். எவர்க்கும் சிவபோகம் விளைய வாசகமாகிய மாணிக்க மழையைச்

சொரியும் கருணைமேகமாகிய இவரை யொத்த மேகம் பிறிதொன்றில்லை யென்பார், 'மாணிக்கவாசகனெனு மொருமாமழை' என்றார். திருவாசகம் - அடையடுத்த வாகுபெயராய் நூலை உணர்த்திற்று. ஒண்குளம்-அழகிய குளம்; குளம் ஈண்டு ஏரியின் மேற்று. ஒண்மை- அழகு. நா - ஆகுபெயராய் வாயை உணர்த்திற்று. மடை - நீர் மடுக்குஞ் சிறதுறை. நீர், செவ்வியிற் செல்லா, புக, முளைதோன்றி, தரும் என இயையும். செல்லா - செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; சென்று என்பது பொருள். ஊன்றிய அன்பு-முன்னரே பதிந்துள்ள அன்பு. அன்புள்வழி அவ்வன்பே சொரூபமாகச் சிவம் வெளிப்படு மென்பார், 'அன்பாம் வித்திற் சிவமெனு முளை தோன்றி' என்றார். இந்நூல் கேட்டார்க்கு இறுதியில் தருவது பதமுத்தியன்று பரமுத்தியென்பார், 'விளங்குறு முத்தி தரும்' என்றார். இனி, ஏனைய நூலால் உண்டாகும் முத்திபோலாது அந்தமிலின்பத் தழிவில் வீட்டு நெறியை இந்நூல் தருமென்பார், 'முத்தி மெய்ப் பயன் தருமே' என்றார் எனினு மமையும். அம் முத்தியொன்றே உண்மைப் பயனுவதென்பார், 'மெய்ப்பயன்' என்றார். 'தருமே' என்புழி ஏகாரம் தேற்றம். 'மலர்ந்து' என்புழி மலர்தல் விரிதன்மேற்று; பரந்து என்பது பொருள். கடல் நீர் மிகாது வறள்விக்கும் வடவா முகாக்கினியை எந்தலும் கங்காநதி தலைக்கூடப்பெறுதலுடைய கடலின்கண்ணே மேக முகந்தோங்கி உலகுவப்பச் சொரிந்த பெரு நீர், ஏரியிற் செறிந்து மதகின் வெளிக்கொண்டு மடைவழிச் சென்று நிலம் புகாநிற்க, அதிற் பதித்துள்ள வித்தில் அங்குரந் தோன்றி வளர்ந்து மலர்ந்து பயன்றருமாறுபோலப் பயன் றருமென முற்றும் ஒக்க உருவகித்தமையின் இது முற்றுருவகம். (கசு)

நேரிசை வெண்பா

17 பயனுகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்

சிந்து மெலும்பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்பு திருப் பாட்டு.

(இ - ள்.) சிரபுரத்து நாவலன் சம்பந்தன் - சீர்காழியில் அவதரித்த முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தர், இயம்பு திருப்பாட்டு - திருவாய்மலர்ந்தருளிய திருப்பாடல்களின் விளைவு, நல் ஆண்பனைக்கு-பண்புமிக்க ஆண்பனைக்கு, பயன் ஆகும் - பயனாகும்; விடத்திற்கு மயில் ஆகும்-விஷத்திற்கு மயிலாகும்; நோய்க்கு மருந்து ஆம் - பிணிக்கு மருந்தாகும்; சிந்தும் எலும்பிற்கு உயிர் ஆகும் - உருச்சிதைந்துதிர்ந்த என்பிற்கு உயிராகும்; (எ-று.)

(வி - ரை.) சம்பந்தன் இயம்பு திருப்பாட்டு, ஆண்பனைக்கு - ஆண்பனை சிறத்தற்குப் பயனாகு மெனவும், விடத்திற்கு-விடத்தை யொழித்தற்கு மயிலாகு மெனவும், நோய்க்கு - நோயைத் தீர்த்தற்கு மருந்தாகு மெனவும், சிந்தும் எலும்பிற்கு - உருச்சிதைந்துதிர்ந்த எலும்பு உருக்கொள்ளற்கு உயிராகும் எனவும் பொருள் கோடலும் ஒன்று. இங்ஙனம் உருபிற்கு முன் பயனை வருவித்தலைத் துமர்த்தம் என்பர் வடநூலார். இங்ஙனம் கோடலை, பிரயோகவிவேகம், 'உடனிகழ்கின்ற' என்னும் செய்யுளுரையிற் காண்க. பயன் ஆகும் என்புழி, பயன் - பழம்; பிரயோசனம்: முதற்பொருட்கு னகரவிறுதிப் போலி. 'நல்லாண்பனை' என்றது, முத்தமிழ் விரகராற் பாடப்பெற்று முத்தி பெறற்குரிய முதுதவ முடைமையால். இதனை,

"பின்னை யார்தந் திருவாக்கிற் பிறந்த லாலே தாலமுமுன்
புன்மை பாசம் விட்டகல வொழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவாம்
வள்ள லார்மற் றவருளின் வாய்மை கூறின் வரம்பென்னும்."

எனப் பெரியபுராணச் செய்யுளானும் உணர்க. (கஎ)

கட்டளைக் கலித்துறை

18. பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறக்க
வேட்டான்மலிபெருங் கல்லவன்போலமிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.

(இ - ள்.) மறை புகழும்-வேதங்கள் புகழ்கின்ற, பிறை சூடியை-பிறைதரித்த சிவபெருமானை, பாட்டால் - தமிழ்ப்பாக்களாகிய தேவாரங்களால், பாடி-துதித்து, மகிழ் ஊட்டா-திருவுளம் மகிழ்வித்து, மகிழ் - தானும் மகிழ்ந்த, சொல் இறைவனை - வாகீசவள்ளலை, பாடி-புகழ்ந்து பாடி, உவப்பு உறுக்க - அவருக்கு மகிழ்ச்சியை உறுவிக்க வேண்டுமென, வேட்டான் - அன்புமிக்க ஒருவன், அவன் போல- அவ்வாகீச வள்ளலைப்போல, மிதப்பன் என-(யானும்) மிதப்பேனென்று, மலி பெருங்கல் - மிகப் பருத்ததொரு கல்லை, பூட்டா விழ - தனது உடலிற் பிணித்துக்கொண்டு வீழ்தற்கு, மறி திரை-மடங்குகின்ற அலைகளையுடைய, வார்கடற்கே - நெடிய கடலுக்கே, போதுவன் - துணிந்து செல்வன்; (எ-று.)

(வி-ரை.) மறை பாட்டால் புகழும் எனினும் அமையும். பிறை சூடி - பெயர். 'பாடி' என்பதற்குத் தேவாரப் பாக்களால் பாடி எனலும் ஒன்று. அவ் வேதங்களும் அறியாச் சிவபெருமான் இயல்பனைத்தையும் சிற்றறிவினரும் தெளியுமாறு தேவாரங்களின் அமைத்துத் துதித்து, அச் சிவபெருமானைத் திருவுளம் உவப்பித்து அவர் உவந்தமை கண்டு, தாமும் சாலவுவந்தார் என்பார், 'பிறை சூடியைப் பாட்டால் மகிழூட்டா மகிழ்சொல் லிறைவன்' என்றார். மகிழ் ஊட்டா - மகிழ் ஊட்டி (மகிழ்வித்து). ஊட்டா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; பூட்டா என்பதும் அது. வேட்டான்-வினைப்பெயர். வேட்டால் (யான்) போதுவனென நூலாசிரியர் தம்மைச் சுட்டி நுவன்றதாக உரைப்பாரும் உளர்,

அவன்போல மிதித்தலாவது - இப்படி இயற்றியாயினும் அவர் அருள் பெறவேண்டுமென்பது கருதி என்க. கல்லிற் பிணிப் புண்டு கடலைக் கடக்கும் வருத்தம் கண்டறிந்துள்ளா ராதலின் உடனே அருள்புரிவார் என்பார், 'மலிபெருங்கற் பூட்டா கடற்கே விழப்போதுவன்' என்றார். இனி, தேகாதி பிரபஞ்சத்தைச் சிறி தும் குறிக்கொள்ளான் என்பார், 'வேட்டவன் கடற்கே போது வன்' என்றார் எனினுமாம். 'கடற்கே' என்புழி ஏகாரம் தேற்றம். போதுவனே என்பதிலுள்ள ஏகாரம் ஈற்றசை. வேட்டான் பூட் டாக் கடற்கே போதுவன் என இயையும். போதுவன் - படர்க்கை வினைமுற்று. இனி, வேட்டால் - விரும்பினால், பெருங்கல்-பெருங் கல்லை, பூட்டா - பூட்டி (பிணித்துக்கொண்டு) அவன் போலவே யானும் மிதப்பேனென்று கடற்கண் விழப்போதுவன் எனினுமாம். அப்பொருட்குப் போதுவன் - தன்மை யொருமை வினைமுற்று.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

19. போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை யீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கி யம்ப வேண்டுமே.

(இ - ள்.) நம்பி - நம்பியாரூரவள்ளலே! போதம் உண்ட பிள்ளை - ஞானப்பாலையுண்ட ஞானசம்பந்த வள்ளல், என்பு - எலும் பை, பொருகண் மாது செய்ததோ - காதொடு மோதுகின்ற கண் களையுடைய பெண்ணாகச் செய்ததோ? சொல்லின் மன்னர் - திரு நாவுக்கரசுவள்ளல், கல் மிதப்ப - கல் (தெப்பமாக) மிதப்ப, காதல்

கொண்டு உய்த்ததோ - (அதை) விருப்பத்தோடு செலுத்தியதோ? முதலை - முதலையானது, வாய் திறந்து - தன் வாயைத் திறந்து, கக்க-உமிழ, மகனை நீ அழைத்ததோ - புதல்வனை நீ அழைத்ததோ? யாது அரிது - (இம் முத்தொழில்களுள்) எத்தொழில் அரிதாகும்? நன்று எனக்கு இயம்பவேண்டும் - தெளிய எனக்குத் தெரிவிக்க வேண்டும்? (எ-று.)

(வி-ரை.) 'போதமுண்ட பிள்ளை' என்றது சீர்காழியில் உமாதேவியின் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தரை. பாலுண்டமைக் கேற்ப, 'பிள்ளை' என்றார். திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியது, திருமயிலையில். இச் சரித்திரத்தை, பெரியபுராணம் திருஞானசம்பந்தர் புராணத்துட் காண்க. 'பொரு கண் மாது' என்புழி, பொருதல்-காதளவு சென்று தாக்கல்; 'மாது' என்பது, அழகுடைமையிற் போந்த பெயர். 'செய்ததோ' என்பதிலுள்ள ஓகாரம் வினைப் பொருளது. "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாட, அமணர்கள் பிணித்த கல்லே தெப்பமாக மிதப்ப, அதனை வருணனும் தாங்கலின் மனமகிழ்ச்சியிற் செலுத்தினரென்பார், 'கன் மிதப்பக் காதல் கொண்டு சொல்லின் மன்னர் உய்த்ததோ' என்றார். 'காதல் கொண்டு' என்புழி, கொண்டு மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. சொல்லின் மன்னர் - வாகீசர். உய்த்ததோ என்பதில் ஓகாரம் வினாப்பொருளது. உண்ட மகனை உருச்சிதைவின்றி உடனுமிழ்தலும் முதலைக்கு இயலாதாக, அதுவே, சின்னாட் சென்ற பின் கழிந்த ஆண்டுகட்குரிய வளர்ச்சி நிரம்பிய மதலையாக வுமிழ, அழைத்தனர் என்பார், 'முதலை கக்க மகனை நீ யழைத்ததோ' என்றார். 'அழைத்ததோ' என்பதில் ஓகாரம் வினாவோடு பிரிநிலையுமாம்; அவ்விரு செயலினின்றும் பிரித்தலான். இம்முச்செயலும் செயற்கரிய செய்கையே யாயினும், கன்னிகை யாக்குதற்கு என்பும் மிதத்தற்குக் கல்லும் ஆதாரமாயிருக்க, மகனை யழைத்தற்கு அங்ஙனம்

ஆதார மின்றாகவும் பாடலொன்றானே அம் மகனை யுண்டாக்கி, அழைத்தமையின் அவற்றினும் இஃது அற்புத முடைமையும், இவை தேவரகசியமாகலின் யானே சிந்தித்துணர வல்லனோ நீயே செவ்விதில் தெளிவித்தருள வேண்டுமென்று போதர, 'யாது நம்பி யரிது நன்றெனக்கி யம்ப வேண்டும்' என்றார்.

கன்னிகையாக்குதற்கு என்பும், மிதத்தற்குக் கல்லும்போல ஆதாரமின்றாகவும், பாடலொன்றால் மகனை யுண்டாக்கி யழைத்தமை யால் இவர் செய்கை, அருமை என்பதாம். இதனை,

"வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
னுறைந்திடு முதலைவாய் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

என வரும் செய்யுளா னுணர்க.

இச் செய்யுளை எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தமாகக் கொள்ளுதலேயன்றிச் சந்தக்கலிவிருத்தமாகக் கோடலு மொன்று.

நேரிசை யாசிரியப்பா

20. வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய்! "சிவனே யலந்தே னந்தோ
முறையோ! முறையோ! விறையோ னே!"யென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டும்
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறினைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக!
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்

பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே.

(இ - ள்.) இள ஏறு-இளமைபொருந்திய இடபத்தை, உகந்து ஏறியை - விரும்பிச் செலுத்திய சிவபெருமானை, பரிமா மிசை - குதிரைமீது, வர பண்ணிய வித்தக - வரச்செய்த வித்தகரே! பெருந்துறையிடத்து - திருப்பெருந்துறை யென்னுந் தலத்திலே, பெரும்சீர் - மிக்க மேன்மையையுடைய, குருந்து உறு நீழலில் - குருந்த மரத்தின் விரிந்த நிழலில், திருந்திய - திருத்தமடைந்த, வேதசிரம் - வேதமுடிவிற் செறிந்த, பொருள் முழுதும் - சைவசித்தாந்தப் பொருள் முழுதும், கொள்ளை கொள்வோய்-(சிவபெருமானிடத்துக்) கொள்ளைகொண்ட திருவாதவூரண்ணலே! 'சிவனே - சிவனே! நின் அடியார் மெய் அன்பு-நினது அடியார்களது உண்மையன்பு, எனக்கும் வேண்டும் - எனக்கும் உரித்தாகவேண்டும், அருள்செய் - அருள் செய்வாய்! அலந்தேன்-(அதனைப் பெறாமையாலே) துயருற்றேன், அந்தோ - ஐயோ! முறையோ முறையோ - (அருள் பாலியாமை) முறைமையோ! முறைமையோ!, இறையோனே' என்று அழுது - முதல்வனே என்று அழுது, செம்பொன் அம்பலம் - செவ்விய கனகசபையில், கூத்தன் அருளால்-நடித்தருளும் சிவபெருமானது அருளால், பெற்ற அன்பினில் - அடைந்த அன்பிலே, அடியனேற்கும் - அடியேனுக்கும், ஒரு சிறிது - மிகச்சிறிது, அளித்தல் வேண்டும் - தந்தருளல் வேண்டும்; நீயே கோடல் - முற்றும் நீரே கொள்ளுதல், நின் அருள் பெருக்கிற்கு - நமது கிருபை மிகுதிக்கு, ஏற்றது அன்று - முறைமையன்று; (எ - று.)

(வி-ரை.) 'அடியார் மெய்யன்பு' என்பதற்கு, அடியாரிடத்துக் கொள்ளும் உண்மையன்பு எனினுமாம். 'வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு மருள்செய் சிவனே' என்பதை,

"ஐய நின்ன தல்ல தில்லை மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய் கலந்த தல்ல தில்லை பொய்மை யேனென் றெம்பிரான்
மைகலந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய் கலந்த வன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே."

எனவரும் திருவாசகச் செய்யுளானுணர்க. எனக்கும் என்றது, மணிவாசகப் பெருமானை. உம்மை இழிவுசிறப்போடு இறந்தது தழீஇயது. 'அலந்தேன்' என்பதற்கு 'அன்பைப்பெற ஆவல் மிகுந்தேன்' எனினுமாம். அலந்தேன் என்பதை,

"கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலந்து போனே னுடையானே யுலவா வின்பச் சுடர்காண்பான்
அலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர வடியேற்கே."

என வரும் திருவாசகச் செய்யுளானும் உணர்க. 'அலந்தேன்' என்பதற்கு 'இன்ப வொளியைக் காணும்பொருட்டுத் துன்பப்பட்டேன்' என்னலும் ஒன்று. அலத்தல் - துயருறல்.

"அந்தோ அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்
முனைவனே முறையோநான் ஆனவாறு முடிவறியேன்"
(திருச்சதகம்)

என்றமையால், 'அந்தோ முறையோ முறையோ இறையோனே என்றழுது' என ஆசிரியருங் கூறலாயினர். அந்தோ-ஐயோ; இது சிங்கள நாட்டுச்சொல். முறையோ முறையோ என்னும் அடுக்கு - அவலத்தின்கண் வந்தது. ஓகாரங்க ளிரண்டும் முறைப்பாட்டில் வந்தன. இங்ஙனம் ஒருகாலன்றி ஆங்காங்கும் மிகப் பலகா லழுதமையால் தொழிற்பன்மையுமாம். செம்பொன் அம்பலக்கூத்தன் அருளாற் பெற்ற அன்பு என்றது, திருப்பெருந்துறையினின்றும்

நீங்கித் தில்லையில் பஞ்சகிருத்திய நடம்புரிந்தருளிய பரமராற் பாலிக்கப்பெற்ற அன்பை. செம்பொன் அம்பலக்கூத்தன் என்பது, கூத்தனுயினும் செம்பொன் அம்பலப் பிரானுயுள்ளான் என்றவாறு. தான் அளவிலின்பத்துள் அற்ப நல்கினும் அதுகொண்டு உய்வேன் என்பார், 'பெற்ற வன்பினி லொருசிறிது' என்ருர். ஒரு-தமிழடை. அடியனேற்கும் என்றது, பரிபாகி யல்லாதானும் மணிவாசகப் பெருமானது சந்நிதி விசேடத்தால் பரிபாகியாயினமையை; உம்மை-இழிவு சிறப்பு; இறந்தது தழீஇயதுமாம். அடியனேற்கும் என்பது, ஆசிரியரைக் குறித்தது எனினுமமையும். மெய்த் தொண்டர்க்குரிய மெய்யன்பு எனக்கும் வேண்டுமென் றழுது சிவன்பால் பெற்றீராகலின், அங்ஙனமே வேண்டு மெனக்கும் சிறிதளிப்பதே முறைமை என்பார், 'அருளல்வேண்டும்' என்ருர். அருளல்வேண்டும் - அருள்வீர்; இஃதொருசொன்னீர்மைத்து. தக்காரையும் தகவிலாரையும் ஒப்பப் புரக்கும் அருளில் முதிர்ந்து உலகினர்க்கு அஞ்ஞான விருளோட்டி உண்மை விளக்குவான், ஞானசித்தனுக வுதித்த நீர் நல்காது கோடல் தகுதியன்றென்பார், 'நீயேகோட னின்னருட் பெருக்கிற் கேற்றதன்று' என்ருர். நீயே என்புழி, ஏகாரம் பிரிநிலை. கோடல்-தொழிற்பெயர். அருட்பெருக்கு - அருண்மிகுதி. தருமவிடையை யேறிச் செலுத்திய சிவபெருமானை அத்தரும சொரூபமாகிய வேதப்பரியில் இவர்வித்த வித்தகரென்பார், 'இளவேறுகந்தேறியைப் பரிமாமிசை வரப் பண்ணியவித்தக' என்ருர். இளவேறுகந்தேறி-சிவபெருமான்; இது பெயர். பரிமா-குதிரை; இருபெயரொட்டு. வித்தக-அண்மைவிளி; இதற்கு முதல் வேற்றுமை, வித்தகன். வித்தகம் என்பது, விசித்திரத்தையும் அறிவையும் சுட்டி இரட்டுறமொழிதலாய் நின்றது. மாடேறியைக் குதிரை ஏறச்செய்த சமர்த்தர் என மற்ருெரு பொருள். வேதமுடிவிற் செறிந்த சித்தாந்தப் பொருள்களே திருத்தமுடையன; ஏனையவை பிணக்குடையன வாதலால், 'திருந்திய

வேத சிரப்பொருள்' எனப்பட்டது. பெருந்துறை ஒரு திருப்பதி. வெட்டுந்தோறும் புனல் பெருகி எங்கும் பரவலால் அப்பெயர் பெற்றது. இதனை,

"ஒழிதரான் வெட்டுந் தோறு மூறுபுனல் பெருகி யெங்கும்
வழிதரப் பரவ லாலே பெருந்துறை யெனும்பேர் வாய்ந்த
தழிவிலந் நாரங் கண்டோ ரியாவரு மதிச யித்தார்
பிழிமலர் வேப்பந் தாரான் பேருவப் புடைய னானான்."

எனவரும் திருப்பெருந்துறைப் புராணச் செய்யுளா னறிக. பிறவிக் கடலைக் கடக்குந் துறையாதலால், 'பெருந்துறை' எனக் கோடலும் ஒன்று. அறத்தளிர் தளிர்த்து மெய்ம்மலர் மலர்ந்து விளங்குதலின், அதனைப் 'பெருஞ்சீர்க் குருந்து' என விசேடித்தார். குருந்து - மர விசேடம். உறு நிழல் என்றது, ஆதிபௌதிக முதலிய தாபத்திரயங்களை யொழித்தலான். முழுதும் கொள்ளைகொள்வோய் என்றதனால் வேதசிரப்பொருள் முழுதும் ஒருவர்க்கும் சுதந்தர மின்றித் தானே ஒருங்கு பெற்றனர் எனப் போதரும். கொள்வோய் முன்னிலைக் கண் வந்தது; அதற்குப் படர்க்கை, கொள்வோன் என்க. திருந்திய கொள்வோய் என வினையெச்ச முடிபாக்கலும் ஒன்று; அதற்குத் திருந்திய என்பது செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது கொள்வோய் என்பதன் பகுதியில் முடிந்தது. கொள்வோயே என்புழி, ஏகாரம் ஈற்றசை.

நேரிசை வெண்பா

21\. கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா!—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்க வருகர்.

(இ - ள்.) கொள்ளை கொள்ள - (யாவரும்) கொள்ளை கொள்ளும்படி, வீடு உதவி - முத்தியுலகத்தை யுதவி, கூற்றை - இயமனை,

பிடர் பிடித்து தள்ளும் - அணுகாதகற்றிய, திருஞான சம்பந்தா - திருஞான சம்பந்த வள்ளலே!, கழுவின் காடு - கழுக்கூட்டத்தில், ஏறப் புக்க - ஏறும்படி துணிந்த, அருகர் - அமணர்கள், வெள்ளம் இடும் - வைகைநதிப் பெருக்கிலிட்ட, ஏடு ஏற - ("வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பாசுரப்பதிகம் வரைந்த) ஏடு எதிரேறிச் செல்லப் பார்த்து, பால் குறைந்தது என்று - தம் பக்கம் குறைந்ததென்று, அழுவரே - அழத்தக்கவரே; (எ-று.)

(வி - ரை.) கொள்ளைகொள்ளல் - ஒரு பொருளைச் சுதந்தரமில்லாதாரும் சுதந்தரமாகக் கொள்ளுதல். யாவரும் கொள்ளை கொள்ள வீடுதவினது தனக்குத் திருமணம் நடந்த காலத்து. இக்கருத்துப்பற்றியே,

> "வாட்டுபவங் கொல்புகலி வண்புலவன் பேரின்ப
> வீட்டுபவங் கொள்ளைகொள விட்டகாள்"

என்றார்; இவ்வாசிரியரே திருவெங்கைக் கலம்பகத்தும். 'வீடுதவி' என்றது, பற்றகன்ற பரமுத்தி யுதவினமையை. அம் முத்திபெற்றோர் இரும்புண்ட நீரிற்றிரும்பாமையின் இயமனை அவர் மாட்டு என்றும் எய்தாதவனாக்கினர் என்பார், 'கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளும்' என்றார். கூற்று - இயமன்: உடலையும் உயிரையும் வேறுபடுத்துபவன் என்பது காரணக்குறி. பிடர் பிடித்துத் தள்ளுதல் - அணுகாதகற்றல் என்னும் பொருட்டாய் உலக வழக்குப்பற்றி வந்தது. தம்மை வழிபட்டாரெவரையும் ஞானசம்பந்தராகச் செய்கின்றமையால் 'திருஞானசம்பந்தர்' என விளக்கப்பட்டார். வெள்ளம் - வைகைநதிப் பெருக்கு. ஏடு - 'வாழ்கவந்தணர்' என்னும் திருப்பாசுரத் திருப்பதிகம் எழுதிய திருவேடு.

ஏடேறப் பால் குறைந்த தென்பதும் அருகரென்பதும் சிலேஷடமாய் நின்றன. (சிலேஷடம்-இருபொருட்பதம்.) 'பால்' ஈண்டுத்

தம் கொள்கைமேற்று; பால்-பக்கம்+பால். கழுவின் காடேறப் புக்க அருகர் நாட்டின் விலைவாசி அறியாராதலின் ஏடேறப் பால் குறைந் தமைக்கு உவத்தலன்றி அழுதனரெனச் சாதுரியப் பொருள்படக் கூறினர். கழு - கழுமரம்+கழுகு என்க. காடு என்பதற் கேற்ற அடையென்க. அருகர் - ஆருகதன் என்பவனால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்தையுடையவர்; புத்தி குறைந்தவர். அழுவரே என்புழி, ஏகாரம் தேற்றம். எண் பெருங் குன்றத்து எண்ணாயிரவரும் அவர் மாணாக்கரும் ஏறுதற்குத் தொகுத்த எண்ணிலாக் கழுமரங்களாதலின், 'கழுவின்காடு' எனப்பட்டது. காடு ஈண்டு மிகுதி மேற்று. பிள்ளையார், அறத்தாறு கருதி, "சிவபெருமானுக்கு ஆட்பட்டுய்யுங்கள்! என் வாளா இறக்கின்றீர்கள்?" என்று அருளவும் அதனை இழித்து வலித்தேறிய வன்மையர் என்பார், 'ஏறப் புக்க அருகர்' என்றார். இதனை,

> "இன்ன மறத்தா றிசைக்கின்றே னீரேன் வாளா விறக்கின்றீ?
> அன்னை யனையான் எம்மிறைவ னவனுக் காளா யுய்மின்கள்!
> என்ன வேட சிறியாய்நீ எவ்வா றெங்கட் கடாதமொழி
> சொன்ன தென்று மானமுளார் கழுவி லேறத் தொடங்கினர்."

என வரும் திருவிளையாடற் புராணத்தான் அறிக.

திருத்தொண்டர் திருமடத்தில் தீயிட்ட இவர்க்கிது தகும் எனப் பின், விலக்காமையின் அத் தண்டனைக்குரியவரே என்பார், 'அருகர்' என்றுங் கூறினர். எண் பெருங்குன்றங்களாவன:— அஞ்சனம், கௌஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, குஞ்சரசையம், ஏமகூடம், விந்தமென்பன. இவை சமண்குரவருறையுந் தானங்கள். திருஞான சம்பந்தனே! கழுமரங்களி லேறத்துணிந்த அமணர்கள் அனல் வாதத்தில் தோற்றதே யன்றிப் புனல் வாதத்திலுந் தோற்றமையால் தம் பக்கம் குறைந்த தென்று அழுவ ரென்பதாம். இச் செய்யுளைத் திராவிட மாபாடிய முனிவராகிய சிவஞான சுவாமிகள் மிகப் பாராட்டுவர் என்பர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வீடு உதவிய சரித்திரம்:—

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குத் திருக்கலியாணஞ் செய்தருளுதற்குரிய பருவம் வந்தபொழுது சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தாரும் ஒருங்கு கூடி, பிள்ளையாரை நோக்கித் "தேவரீர் வைதிகச் சடங்கைப் பிறருக்குக் காட்டும் பொருட்டு, ஓர் கன்னிகையை விவாகஞ் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்யப், பிள்ளையார் வேதநெறி நிலைப்படும் பொருட்டு அதற்கு உடன்பட்டருளினார். உடனே தந்தையாரும், சுற்றத்தாரும் மனமகிழ்ந்து 'திருநல்லூர் நம்பாண்டார் நம்பி என்பவருடைய புத்திரியே திருஞான சம்பந்தப் பிள்ளையாருக்கு மனைவியாதற்குத் தகுதியுடையவள்' என்று எண்ணி விவாகம் பேசினர். நம்பாண்டார் நம்பியும் அதற்கு உடன்பட்டனர். பின்பு திருநல்லூரிலே நம்பாண்டார் நம்பி கிருகத்தில் விவாகம் நடக்கும்போது பிள்ளையார் திருமங்கலியத்தைச் சாத்தி, பொரியை அக்கினியில் இட்டு, 'அக்கினியாவார் சிவபிரானே' எனக் கருதி வேத விதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து, தமது திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் சூழும்படி மனைவியாரோடு திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் பிரவேசித்து, தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, "பரம்பொருளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது" என்று,

"கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்திரி
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே."

என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளலும், அப்பொழுது கருணாநிதியாகிய சிவபெருமான் சுத்த சோதிவடிவாய்த் தோன்றுதலும்

அச் சோதியுள் யாவரையு முன்னர்ச் செலுத்திவிட்டுப் பின்னர்த் தாம் மனைவியாரோடு புகுந்து சாயுச்சியம் அடைந்தார் என்பதாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளினமையை:—

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருச்செங்காட்டங்குடியி னின்று புறப்பட்டுத் திருமருகலுக்குப் போய், சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். அந்நாளிலே, ஒரு வணிகன் வழிச் செல்வோனாகி ஒரு கன்னியையும் உடன்கொண்டு கோயிலுக் குப் புறத்திலே ஒரு திருமடத்தில் இராத்திரியில் நித்திரை செய்யும் போது பாம்பினாலே தீண்டப்பட்டு மாண்டான். அது கண்டு, அக் கன்னியானவள் தளர்ந்து அவனைப் பாம்பு தீண்டியும் தான் தீண்டா மல், சமீபத்திலே வீழ்ந்து புரண்டு அழுதாள். அப்பொழுது விஷ வைத்தியர் வந்து தீர்க்கவுந் தீராதாயிற்று. விடியற்காலத்திலே அக் கன்னிகை மிக அயர்ந்து புலம்பி, திருக்கோயிலின் வாயிற் றிக்கை நோக்கிக் கைதொழுது, "தேவர்கள் உய்யும்பொருட்டு நஞ்சை அமுதாக்கிய கடவுளே! வெந்து பொடியாகிய மன்மதனுடைய உயி ரை அவன் மனைவியாகிய இரதி வேண்ட அருளிச் செய்த கருணாநிதியே! மார்க்கண்டேயர் பொருட்டு இயமனை உதைத்த திருவடித் தாமரையை யுடையவரே! திருமருகலில் எழுந்தருளி யிருக்கும் பரமசிவனே! தேவரீர் இந்தக் கொடிய விஷம் நீங்கும் பொருட்டும், அடியேன் துக்க சாகரத்தினின்று கரையேறும் பொருட்டும் அருள் செய்யும்" என்று பிரார்த்தித்தாள். அவ் வோசையைச் சுவாமி தரிசனம் செய்யும்படி எழுந்தருளி வருகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கேட்டு, திருவுளம் இரங்கி, அவளுக்கு அருள் செய்யும் பொருட்டு அடியார்களோடு எழுந்தருளி வந்து நின்று, அவளை நோக்கிப் "பயப்படாதே! நிகழ்ந்த சமாசாரத் தைச் சொல்" என்று அருளிச்செய்தனர். அக் கன்னிகை கண் ணீர் சொரிய, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து நமஸ்

கிரித்து எழுந்து நின்று, "வைப்பூரில் இருக்கின்ற தாமன் என்னும் பெயரையுடைய என் பிதாவுக்குப் புத்திரிகள் எழுவர். அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரையும் தன் மருமகனாகிய இவனுக்கே விவாகஞ் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி பிறரிடத்திலே திரவியம் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டான்; அது கண்டு 'மனவருத்த முற்ற இவனுக்கே நான் மனைவியாதல் வேண்டும்' என நினைந்து, பின் பிதா மாதாக்களை மறைத்து இவனையே சார்ந்து வந்தேன்; இவனும் பாம்பினாலே தீண்டப்பட்டு இறந்தான்; அடியேன் கடல் நடுவே கலங் கவிழப் பெற்றார் போல நிற்கின்றேன்; தேவரீர் எழுந்தருளி வந்து, அடியேனுடைய துன்பமெல்லாம் நீங்க அருள் செய்தீர்" என்றாள். பிள்ளையார் விஷம் நீங்கும் பொருட்டுத் திருமருகற் கடவுள் மேல்,

"சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய் தகுமோவிவளுண்மெலிவே."

என்னுந் திருப்பதிகம் பாடி யருளினார். உடனே வணிகன் விடந் தீர்ந்து எழுந்து, பிள்ளையாரை நமஸ்கரித்தான். அது கண்ட திருத் தொண்டர்கள் எல்லோரும் ஆரவாரித்தார்கள். அக் கன்னிகை மன மகிழ்ந்து, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து வணங்கினாள். கன்னிகையையும் வணிகனையும் மணஞ்செய்வித்து அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு, அங்கே சிலநாள் எழுந்தருளியிருந் தார் என்னுஞ் சரிதத்தா லுணர்க.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வைகையில் இட்ட ஏடு எதிரேறிச் செல்ல அருகர் கழுவேறின சரிதம்:—

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், மங்கையர்க் கரசியாரும் குலச்சிறை நாயனருமாகிய இவ்விருவர் வேண்டுகோளால் பாண்டி

நாட்டை யடைந்து, பாண்டியனுடைய கோயிலுக்கு எழுந்தருளினார்; பிள்ளையார் அரண்மனை வாயிலுள் அணைந்து, முத்துச் சிவிகையி னின்றும் இறங்கி, கோயிலுட் புகப் பாண்டியன் அவரை நோக்கித் தன் முடியின் பக்கத்தில் இருக்கும் இரத்தினாசனத்தைக் காட்ட, அப் பிள்ளையார் அதிலே வீற்றிருந்தருளினார். அதுபொழுது சமணர்களெல்லோரும் அச்சங்கொண்டார்கள். பாண்டியன் பிள்ளை யாரை நோக்கி, அவரது ஊர் முதலியவற்றை வினவ, அதற்கு அவர் திருப்பதிகத்தினாலேயே உத்தரவு கொடுத்தருளினார். பிள்ளையார் இரத்தினாசனத்தி லிருந்தபொழுது, சமீபத்தில் இருந்த சமணர்கள் பொறாமை கொண்டு, பிள்ளையாரொடு பல வாதிட்டு, வெப்பு நோய் தீர்த்தல் முதலியவற்றில் தோல்வியுற்று, இறுதியில், "முன்னே இரண்டுதரம் வாது செய்தோம்; இன்னும் ஒருதரம் செய்யவேண் டும்; மூன்று தரத்தில் ஒருதரமாயினும் வெற்றி பெறுவோம்'' என் றார்கள். பாண்டியன் "இது என்ன வார்த்தை?'' என்று மறுத்த பின் னும், பிள்ளையார் சமணர்களை நோக்கி, "இனி என்ன வாது செய் வோம்?''என்று வினவியருள, சமணர்கள், ''நாம் இருபக்ஷத்தோரும் நம் சமய உண்மையை எழுதி யவ்வேட்டை ஓடுகின்ற வைகையாற் றிலே இடுவோம்; எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப்பொருளுடை யது'' என்று கூற, பிள்ளையார் "அப்படியே செய்வோம்'' என்று அருளிச்செய்தார். சமணர்கள் "அத்தி நாத்தி'' என்று எழுதிய ஏட்டை வைகை நதியில் இட, அது விரைந்து கடலை நோக்கி ஓடிற்று. பிள்ளையார்,

"வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.''

என்னுந் திருப்பாசுரத்தைப் பாடி, ஏட்டில் எழுதி, அதை வைகை யில் இட்டருளலும், அத் திருவேடு நதியிலே எதிர்ந்து, ஜலத்தைக்

கிழித்துக்கொண்டு எதிர் ஏறிச் சென்றது. "நாங்கள் வாதிலே தோற்றோமாயின், எங்களை இவ் வரசர் கழுவில் ஏற்றக்கடவர்" என்று சமணர்கள் முன் சொல்லியவண்ணம், குலச்சிறை நாயனார் கழுத்தறிகளை நிரையாக நட்டுவித்து அவைகளில் ஏற்ற, அதிபாதகர்களாகிய சமணர்கள் எண்ணாயிரரும் ஏறினார்கள் என்பது. (உக)

கட்டளைக் கலித்துறை

22. அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமனம்
உருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே.

(இ - ள்.) கடல் விடம் - பாற்கடலிற் றோன்றிய விஷத்தை, பெருமிடறு கருக - பருத்த கண்டம் கறுக்க, உண்டோன் அடியில் - உண்ட சிவபெருமானது திருவடியில், மனம் கசிந்து உருக - மனம் உருகிக்கசிய, கடல் அன்பு-கடல்போலும் அன்பை, பெற்ற-அடைந்த, சொல்வேந்த-வாகீசமூர்த்தியே!, அருகக்கடல்-சமணக்கடலை, கடந்து ஏறியதோ - நீந்திச் சைவமென்னுங் கரையில் ஏறியதோ?, பெருகு அக்கடல் - பெருகிய அக்கடலை, சிலை அம்பி என - கல் தெப்பமாக மிதப்பக்கொண்டு, கடந்து ஏறியதோ-நீந்திக் கரையேறியதோ?, உனக்கு அரிது சொல் - (இவற்றுள் யாது) உமக்கு அரியது சொல்வீராக! (எ-று.)

(வி-ரை.) ஆழமுடைமையானும், கருநிறமுடைமையானும், முடைநாற்ற முடைமையானும், பிறவும் செறிந்திருத்தலானும் கடலை நிகர்ப்பவர் ஆதலான், 'அருகக்கடல்' என உருவகித்தனர்; அருகர்+கடல்=அருகக்கடல் என்றாயது; "சிலவிகாரமா முயர்திணை" என்பதனால். நீற்றறையில் இடுவித்தல், விடம் ஊட்டுவித்தல் முதலிய கடுந்தொழிலுடைய அவ்வருகக் கடலைக் கடத்தல் அரி

தென்பார், 'அருகக்கடல்கடந் தேறியதோ' என்றார். 'ஏறியது' என்பதற்குச் சைவமென்னுங் கரையில் ஏறியது என உரை கூறப்பட்டது; சமண்சமயச் சார்பு நீங்கிய பின்னர்ச் சைவசமயச் சார்பு பெற்றமையான். சிலை-கல். அம்பி-தெப்பம். பெருகு அக்கடல் - வினைத் தொகை; அகரச்சுட்டு இழித்தற்பொருட்டு; சமணர், கல்லிற் பிணித்துத் தன்கண் விடுக்குங் கொடுந்தொழிற்கு இடமாயினமையான். ஏறியதோ என்னுஞ் சொற்க ளிரண்டினுமுள்ள ஓகாரங்கள், ஐயத்தின்கண் வந்த வினாப்பொருள; அவற்றுள் முந்தியது உயர்வுப் பொருளினும், பிந்தியது இழிவுப்பொருளினும் வந்தன. உம்பரெல்லாம் தன்கட் சென்று பிழைக்கப் பாற்கடலிற் றோன்றிய விடத்தையுண்டு கண்டமட்டுங் கடவாது நிறீஇ அத்தேவர்களைக் காத்த கருணையாளர் என்பார், 'பெருமிடறு கருகக் கடல் விடமுண்டோன்' என்றார். இதனை;

"உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றொர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றோவின்றெம் மண்ண லிரங்கியதே."

என வரும் திருக்கோவையாரானும் உணர்க. கடல் - ஈண்டுத் திருப்பாற்கடல்; அதற்கு நிகரது ஒன்றின்மையால் அடை கொடாது கூறினார். கடுத்தலையுடையது கடல் எனக் காரணக்குறி. அவ்வருக்கடலை, அருட்பெருக்கமும் வாக்கின் முதிர்வுமின்றிக் கடந்தமை அரிதல்லாமல் யானையாலிடறுவித்தல், கல்லிற் பிணித்துக் கடலில் இடுவித்தல் முதலிய இடுக்கண் புரிதலில்லாத இக் கடலை, அவ்வருட் பெருக்கமும் வாக்கின் முதிர்வுங் கொண்டு கடந்தமை அரிதன்று என்பார், 'உனக்கரிது சொல்' என்றார். அடியிற் கசிந்து மனமுருக என்னுந் தொடரிலுள்ள செய்து, செய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் காரண காரியத்தின் பொருட்டு எச்சத்திரிபுகளாகப் பொருள் கூறப்

பட்டன. கசிந்து உருக என்பன முன் பின்னாகப் புணர்ந்த எச்சத் திரிபுகள், 'விடமுண்டோன் அடியில் கடல் அன்பு பெற்ற சொல் வேந்த' என்றது, சிவபெருமான் திருவடிகளில் ஒப்பிகந்த உழுவலன் புடையார் என்றமையை. அற்றேல், உழுவலன்புடையாராயின் சமண் சமயம் சாராராகலின் கடலன்பு பின்னர்ப் பெற்றதாதல் வேண்டும்: அங்ஙனமாக, இவர்பாலது உழுவலன் பென்பது எங்ஙனம் பிறவெனின்,—நன்று வினாயினாய்! சமணநிகளைக் களைந்து சைவத்தை நாட்டவா னவதரித்த இவ்வாசிரியர் உலகநிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய், ஒழுகுங்கால், சாதனங்களுள் மீது சிறந்தாங்குத் தவங்களுட் கொல்லாமை சிறந்ததாகலின், அஃதே சிவகதிக்குரிய நெறியெனத் தேர்ந்து ஆய்ந்த வழியும், இவர் முற்பிறப்பில் வாகீச முனிவராய்க் கைலையின்கண் உறையுநாளில் இராவணனுக்கு அருள் செய்த தீவினை வயத்தால் சமண் சமயிகள் நடிப்பிற்கு மயங்கி அச் சமயத்தில் பிரவேசித்து அத் தீவினைப்பய னாகருங்காறும் அதிற் சிக்குண்டு கிடந்தனர். அஃதொழியவே, அதிற்புக்குத் தாம் கற்ற வித்தைக ளெல்லாம் கானல் நீர்போலத் தமக்குச் சிவபெருமான் அருளால் தோன்றவே, "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" எனவும், "அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை" எனவும் கருதிச் சைவசமயத்திற் பிரவேசித் தவராதலின், அச்சமண் சமயத்து நிலைமை இன்னதென் றுணர்தற் கன்றி உள்ளபடி பிரவேசித்தவரன்று. ஆதலின், அச் சமயத்திருந்த ஞான்றும் மானசீகமாகச் சிவபெருமானை வழிபட்டு வந்தாரென்பது,

"எற்றாயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதும்."

எனவும்,

"நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே
னினையாதொருபோதுமிருந்தறியேன்." எனவும்,

"சலம்பூவொடு தூபமறந்தறியேன்
தமிழோடிசைபாடன்மறந்தறியேன்
நலந்தீங்கினுமுன்னைமறந்தறியே
னுன்னாமமென்னாவின்மறந்தறியேன்." எனவும்

இவரருளிய திருவாக்குகளான் வெளிப்படுதலின் உழுவலன்புடைய ரென்க. அற்றேல், கொடிய சூடர்நோயணுகியவழி இச் சிவோபாசனை யிருந்தும் அச் சமண்சமய விச்சைகளான் அகற்ற முயன்ற தென்னை யெனின், அவற்றிற் பழகித் தேர்ச்சியுற்றுச் சித்தி பெற்றமையின் இவ் விச்சையின் இதுவும் அகலுங்கொலெனை எண்ணி முயன்றா ரென்பது. இன்னோரன்ன ஆசங்கைகள் எழாமைப் பொருட்டுப் பெரிய புராணத்தில் ஆங்காங்குக் குறிப்பித்திருத்தலின் ஆய்ந்துய்த்துணர்க. விரிக்கிற் பெருகும்.

'கடலன்பு' என்புழி, ஒப்பிகந்த அன்புக்கு ஒரு புடை ஒப்புக் கூறினமையின் கடல் ஒப்பலொப்பாய் நின்றது; "விலங்கொடு மக்களனையர்" என்பதுபோல. கடல் விடம் உண்டோனாகிய சிவ பெருமானது திருவடிகளில் மனம் உருகிக் கசியக் கடல்போலும் அன்பைப் பெற்ற வாகீசமூர்த்தியே! சமணக்கடலை நீந்திச் சைவ மென்னுங் கரையில் இவர்ந்ததோ? அஃதன்றிக் கல்லைத் தெப்பமாக மிதப்பக்கொண்டு அக் கடலைக் கடந்து கரையேறியதோ? இவற்றுள் யாது உமக்கு அரியது செப்புவீராக என்பதாம்.

சிவபெருமான் கடல் விடம் உண்டது:—

தேவர்களும் அசுரர்களும் இடைவிடாது போர்புரிந்து வருங்கையில் அவ்விருதிறத்தாரும் தமக்கு மரணம் நேரிடாமலிருக்க அமிர்தபானம் செய்ய எண்ணிப் பிரமனை யடைந்து தம தெண்ணத்தைத் தெரிவிக்க, அவர் தேவாசுரர்களுடன் சென்று, திருமாலை வணங்கிப் பாற்கடல் கடைந்து அமிர்தம் தந்தருளும்படி வேண்டி,

திருமால் கருடனுல் மந்தரமலையைக் கொணர்வித்துப் பாற்கடலில் மத்தாக நாட்டி அதற்கு வாசுகியைத் தாம்பாகப் பூட்டி, ஒரு புறம் தேவர்களும் மற்றொரு புறம் அசுரர்களும் நின்று கடையச் செய்தனர். அவ்வாறு கடைகையில் அவ்வாசுகி என்னும் பாம்பு வருத்தம் பொருமல் விஷத்தைக் கக்கியது. அங்குள்ள எவரையும் கொல்ல எழுந்த அக் கொடிய விஷத்தை அஞ்சிப் பிரமன் முதலிய எல்லாத் தேவர்களும் சிவபெருமானைச் சரண் புகுந்தனர். சிவபெருமானும் சரண்புகுந்த அத் தேவரைக் காக்கும் பொருட்டு அவ் விஷத்தை யுண்டு தமது கண்டத்தில் நிறுத்தினர் என்பதாம். இதனை,

"ஈற்றுக் கோடியி னெழுமுகிற் கோடியி னிருண்டு
கூற்றுக் கோடியின் மறங்கொடு திசைதொறுங் குலவுங்
காற்றுக் கோடியின் விரைவினுல் வடவையங் கடுத்தீ
நூற்றுக் கோடியிற் பரந்ததவ் விடமெலா மொய்தின்."

"முடிவிலா வுனக்கே யன்றோ மூன்னுறு பாக மெல்லாம்
விடமதே யெனினு மாக வேண்டுது மிதனை வல்லே
யடியரே முய்யு மாற்ரு லருந்தினை யருண்மோ வென்னக்
கடிகம ழிதழி வேய்ந்தோன் கலங்கலீ ரினிநீ ரென்ருன்."

"என்றனன் விரைவிற் றன்கை யேந்திய விடமுட் கொள்ளச்
சென்றது மிடற்றி லன்ன திறத்தினை யாரு நோக்கி
யின்றெம துயிர்நீ காத்தற் கிங்கிது சான்ரு யங்க
ணின்றிட வருடி யென்றே நிமலனைப் போற்ற லுற்ருர்."

என வரும் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலச் செய்யுட்களான் உணர்க.

திருநாவுக்கரசு நாயனுர் கடல் கடந்தேறியது:—

பாடலிபுரத்திலே பல்லவராஜன் சமணர்கள் வேண்டுகோளின்படி, திருநாவுக்கரசு நாயனுரை ஒரு கல்லோடு சேர்த்துக் கட்டு

வித்துச் சமுத்திரத்திலே தள்ளிவிடச் செய்தான். அப்போது நாயனார், 'அடியேனுக்கு யாது நிகழினும் நிகழ்க! அடியேன் சிவபெருமானைத் தோத்திரம் பண்ணுவேன்' என்று நினைந்து,

"சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலில்மாய்க்கினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே."

என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். கட்டிய கயிறு அறுந்துபோயிற்று. உடனே சமுத்திரத்திலே கல்லானது, நாயனார் மேற்பக்கத்திலிருக்கத் தெப்பமாய் மிதந்து திருப்பாதிரிப் புலியூரில் வந்து கரை சேர்ந்தது என்பதாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

23. உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன்மீ திவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்றுகாண் குறவே
எனக்கு வந்துறு மோமக வென்றழு கின்றநா ளலைபா
றனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பிரா னலனே.

(இ - ள்.) உனற்கு அரும் - சிந்தித்தற்கரிய, புகழ் மேவிய - புகழ் படைத்த, சுந்தரன்-சுந்தரமூர்த்தி நாயனார், உம்பல்மீது இவரா- வெள்ளையானைமேல் எழுந்தருளி, நினைப்பு அரும் - நினைத்தற்கரிய, கயிலாயம் அடைந்தமை - திருக்கயிலாயத்தை அடைந்தமையை, நின்று காண்குற-எதிர் நின்று தரிசித்தற்கு, மகவு என்று அழுகின்ற நாள் ஏ - குழந்தையெனக் கூறுமாறு விளங்கி அழுத அப்பருவத்திலேயே, பால் அலை - பாற்கடலை, தனித்து அருந்துபு - தனித்துப் பருகி, மாலை உமிழ்ந்திடு - அதில் மிதந்தனாகிய திருமாலை (ஆங்கு) உமிழ்ந்த, தம்பிரான் நலன் - உபமன்னியரிடத்துண்டான உயர்ந்த

சிவானுக்கிரகம், எனக்கு வந்து உறுமோ - அடியேனுக்கு வந்தடையுமோ; (எ-று.)

(வி-ரை.) சுந்தரன் என்பதனை அண்மை விளியாக்கி, சுந்தரனே! நீ உம்பல்மீது இவர்ந்து கயிலாய மடைந்தமையைத் தரிசித்தற்குத் தம்பிரான் நலன் எனக்கு வந்துறுமோ எனப் பொருள் கூறலும் ஒன்று.

பாற்கடலி னுதித்த நஞ்சத்தைக் கொணர்ந்து பரமர் கரத்தீந்து தேவர்கட்குண்டான இடுக்கண் தீர்த்தமையானும், அப் பரமரைப் பரவைபால் ஒருகாலன்றி யிருகாற் றூது செலுத்தல், முதலையுண்ட மதலையை வெளிப்படுத்தல் முதலிய செய்கையானும், அவ்வவதாரத்தும் இவ்வவதாரத்தும் அளவிறந்த அற்புதப் புகழுடைமையால், 'உனற்க ரும்புகழ் மேவிய சுந்தரன்' என்றார். உன்னற்கு - உனற்கு எனத் தொகுத்தல் பெற்றது; உன்னல்-நினைத்தல். உம்பல்-யானை; ஈண்டு வெள்ளையானையை யுணர்த்திற்று: அதன்மீது இவர்ந்து திருக்கைலையை யடைந்தமையால். இவரா-இவர்ந்து; செயா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். 'நினைப்பருங் கயிலாயம்' என்றது, சிவநேசர்க்கன்றி ஏனையோர்க்கு மனத்தினாலும் சிந்தித்தற் கரிதென்பதை.

உபமன்னியு மகாமுனிவர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையை யடைந்தமையைத் தரிசித்தலின் வரலாறு:—

திருக்கைலாசமலையின் அடிவாரத்தின்கண்ணே, வியாக்கிரபாத மகாமுனிவருடைய திருக்குமாரரும், சிதம்பரத்திலே சிவபெருமானால் வருவித் தருளப்பட்ட திருப்பாற்கடலை உண்ட மெய்யடியாரும், கிருஷ்ணரைச் சிவதீக்ஷை செய்து தடுத்தாட்கொண்டருளிய சைவாசாரியருமாகிய உபமன்னியு மகாமுனிவர் எண்ணில்லாத முனிவர்கள் கூட்டம் சூழ எழுந்தருளியிருந்தார். அப்பொழுது அவ்விடத்தில் அவரெதிரே ஓர் பேரொளி ஆயிரஞ் சூரியருடைய ஒளி

போலத் தோன்றிற்று. அது கண்ட முனிவர்கள் எல்லாரும் "இது என்னை ஆச்சரியம்" என்றார்கள். உடனே உபமன்னியு மகாமுனிவர் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அவரது திருவருளினாலே, திருக்கைலாசத்தினின்று நீங்கித் தக்கிண பூமியிலே திருவவதாரஞ் செய்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளியிருக்கின்றார் என்பதனை உணர்ந்து, விரைந்தெழுந்து, இரண்டு கைகளும் சிரசின்மீதேறிக் குவிய, ஆனந்தவருவி திருமேனி யெங்கும் பெருக, அந்தத் திக்கை நோக்கி நடந்தார். அப்பொழுது முனிவர்கள் "முனிவர் பெருமானே! சிவபெருமானை யன்றிப் பிறரொருவரையும் வணங்கா இயல்பினராகிய நீர் இங்கே வணங்கிய காரணம் யாது?" என்று வினாவ, உபமன்னியு மகாமுனிவர் "முனிவர்களே! கேளுங்கள்! ஆதிகாலத்திலே சிவபெருமானுக்குப் புஷ்பமாலை தொடுத்துச் சாத்துதலும் விபூதிபாத்திரம் தாங்குதலுமாகிய திருத்தொண்டுபூண்ட ஆலாலசுந்தரர் என்பவர் சிவபெருமானது ஆஞ்ஞையினாலே திருக்கைலாசமலையினின்றும் நீங்கித் தக்ஷிணபூமியிலே திருவவதாரஞ் செய்தனர். அவர், ஆன்மாக்களெல்லாம் உய்யும்பொருட்டுத் தமிழ் வேதமாகிய தேவாரத்தை அருளிச்செய்து, இதுபொழுது தேவர்கள் சூழ வெள்ளையானை மேற்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளி வருகின்றார். அவர் எம்மாலும் எவராலும் வணங்கப்படும் பெருந்தகைமையை யுடையவர்" என்று சொல்லியருளினார் என்பதாம்.

காண்குற நலன் உறுமோ என இயையும். உறின், எக்காலத்தேனும் அரிது தரிசிக்கப்பெறலாம் என்பது இசையெச்சம். 'காண்குறவே' என்பதிலுள்ள ஏகாரம் பிரித்து நாள் என்பதில் கூட்டப்பட்டது; அசை எனினுமாம்.

வந்துறுமோ என்புழி ஒகாரம் எதிர்மறை. பால் அலை - பாற்கடல். அலை - சினையாகுபெயராய்க் கடலை யுணர்த்திற்று. 'அலைபா

தனித்த ருந்துபு மாலே யுமிழ்ந்திடு தம்பிரான்' என்ற குறிப்பால் உபமன்னியு முனிவரை யுணர்த்திற்று. 'மாலே உமிழ்ந்திடு தம்பி ரான்' என்பதற்கு 'மயக்கத்தை நீக்கிய தம்பிரான்' எனினுமாம். தம் பிரான் - உபகார சீலன். அருந்துபு-அருந்தி; செய்பு என்னும் வாய் பாட்டு வினையெச்சம். 'தனித்து அருந்துபு' என்பது அருந்துதற் கருமை தோன்ற நின்றது. தம்பிரான் அலன் எனப் பதப்பொருள் செய்து உரைப்பாருமுளர்; அது "நலமலி வாதவூர்" எனத் தொடங்கும் அந்தாதித் தொடர்க்கு இயைபின்மைமேலும் போதப் பொருட் பொலிவின்மையும் தெளிக.

'மகவென் றழுகின்ற நாள்' என்றது, உபமன்னிய முனிவர் மகவாயிருந்தகாலத்துத் தம் தாயுடனுறைந்த வசிட்டமுனிவர் ஆச்சிர மத்தே காமதேனுவின் பாலே நுகர்ந்து சுவை கண்டவராய்ப் பின் னர் அன்னேபா லணுகிப் பால்வேண்டி யழுத நாளே.

உபமன்னியுமகாமுனிவர் பாற்கடல் உண்டமையை:—

வியாக்கிரபாதமுனிவர் தமது தந்தையின் கட்டளையின்படி வசிட்டமகாமுனிவரது உடன்பிறந்தவளே மணஞ்செய்து உபமன் னியு என்னும் குமாரரைப் பெற, அக்குழந்தையை மாமனுகிய வசிட் டரும் அவர் மனைவியான அருந்ததியும் எடுத்துக்கொண்டுபோய்த் தமது பர்ணசாலையில் காமதேனுவின் பாலேயூட்டி வளர்த்துவருகை யில், ஒருநாள் தந்தை தாயரான வியாக்கிரபாதரும் அவர் மனைவியா ரும் அன்பினுற் சென்று அக் குழந்தையைத் தமது பர்ணசாலைக்கு எடுத்துக்கொண்டுவந்து தமக்குப் பால் கிடையாமையால் மாவை நீரிலே கரைத்து ஊட்ட, அதனை அக்குழந்தை உட்கொள்ளாது உமிழ்ந்துவிட்டுக் காமதேனுவின் பாலேக் கருதி விரும்பி அழ, பசுப் பாலூட்டிச் சமாதானப்படுத்த வழியில்லாமல், தந்தையானவர் அக் குழந்தையைச் சிவ சந்நிதானத்திற் கொண்டுவிட, அங்கு அக் குழந்

தை பசியாற்றாது அழுது சிவபிரான் அருளாற் பாற்கடலைப் பெற்று உண்டு வளர்ந்தது என்னுஞ் சரிதத்தாலறிக. இதனை,

"பாலனுக்காயன் றுபாற்கடலீந்துபணைத்தெழுந்த
ஆலினிற்கீழிருந்தாரணமோதியருமுனிக்காய்ச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே."

என வரும் தேவாரத் திருவிருத்தத்தானு மறிக.

நேரிசை யாசிரியப்பா

24. நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனநின் றுருக்கு மதுர வாசக!
கலங்குறு புலனெறி விலங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னரிய
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே.

(இ-ள்.) நலம் மலி - வளம் நிரம்பிய, வாதவூர் நல் இசை புலவ-வாதவூரில் அவதரித்த நல்ல கீர்த்தியை யுடையவரே!, மனம் நின்று - (நினைக்குந்தோறும்) உள்ளத்தில் நின்று, உருக்கும் - (அதை) உருக்குகின்ற, மதுர வாசக-இனிய திருவாசகத்தை இசைத் தருளியவரே!, கலங்குறு-நிலைதவறுதற்குக் காரணமாகின்ற, புலன்

நெறி - ஐம்புல நெறிகளினின்றும், விலங்குறு வீர - நீங்கிய ஆண்மையை யுடையவரே!, திங்கள் வார் சடை - ஒற்றைக் கலையாகிய சிறுமதி யிலைந்த நெடுஞ்சடையையுடைய, தெய்வநாயகன்-தேவாதிபர், ஒரு கலையேனும் - வேத முதலிய கலைகளுள் ஒன்றாயினும்; உணரான் - உணரார், (துணிபப்படாதவர்); அஃதான்று - அதுவன்றி, கைகளோ – அவர் திருக்கைகளோ (எனில்), மறிபடும் கைகள்-மறிபடும் கைகளாம்; கண்களோ-திருக்கண்களோ (எனில்), காணின் - தேர்ந்து உணரின், ஒன்று-ஒரு கண், காலையில் காணும்-காலையிற் றோன்றும்; ஒன்று - மற்றொருகண், மாலையில் வயங்கி தோன்றும் - மாலையில் விளங்கித் தோன்றும்; பழிப்பின் ஒன்று - பழிப்பினையுடைய பிறிதொருகண் (நெற்றிக்கண்), விழிப்பின் - விழித்தவழி, எரியும் - (அப்பார்வையிற் பட்டவை) நீறாகும்; ஆயினும் - இங்ஙனம் இருப்பினும், தன்னை நீ புகழ்ந்து உரைத்த - தம்மை நீர் புகழ்ந்து சொல்லிய, பழுது இல் - குற்றமில்லாத, செய்யுள் - திருப்பாடல்களை, இகழ்ச்சி அறியா - இகழ்வு சிறிதும் பெறாத, என்பு அணிவானே - என்பை (ஆபரணமாக) அணிபவராகிய அவ்விறைவரே, எழுதினன் - எழுதினார்; அதனால் - அங்ஙனம் எழுதினமையாலே, புகழ்ச்சி விருப்பன் போலும் - (அவர்) புகழ்ச்சியில் அதி விருப்பர் போல்வர்; (எ-று.)

(வி-ரை.) வேதமுதலிய எண்ணெண் கலைகளையும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நல்லாசிரியர்மாட்டு ஈரெட்டாண் டெல்லையிற் பயின்று, தக்கார்மாட்டுத் தகுபொருளுணர்வான் தருக்கித்தொழுகிய சால்புடைய ரென்பார், 'கல்விசைப்புலவ' என்றார். இனி, "கற்க கசடறக் கற்பவை" என்றபடி உண்மை நூலாராய்ச்சியின் உவப்புடையராய் முதனூ லிரண்டனுள் வேதமானது, சுவர்க்காதி புவனங்களைப் பெறுதற்குச் சாதனமாதலன்றிச் சிவாகமம்போலச் சிவானுபூதிச் செல்வராய் முத்தி நெறி யடைதற்குச் சாதன மாகா

மையின், அவ்வேதத்தினும் சிவாகம நூலாராய்ச்சி மிக்குடையார் என்பார், 'நல்லிசைப்புலவ' என்றாரெனினும் அமையும். நன்மை ஈண்டுக் குற்றமின்மை மேற்று. கலங்குறுபுலன் - உட்பகையாய் நின்று உறுகண் விளைக்கும் ஐம்புலன்கள். கலக்குறு கலங்குறு என மெலித்தல் பெற்றது; கலங்குறு புலனெறி யெனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார் எனினுமாம். கலங்குறு விலங்குறு என்பன ஒரு சொன்னீர்மைய. 'புலன்நெறி விலங்குறுவீர' என்பது ஐம்புலங் களையும் வென்ற பேராண்மையை விளக்கிற்று. புலனெறி விலங் குறுதலாவது-அவற்றின்கட் சென்ற மனத்தை மீட்டு அருட்குரவன் பணியி னிறுவல். 'திங்கள் வார்சடை' என்புழித் திங்கள் ஒற்றைக் கலைச் சிறுமதியை யுணர்த்திற்று. திங்கள் வார்சடைத் தெய்வ நாய கன், ஒருகலையேனும் உணரான் என்னுந் தொடர் - திங்களின் ஓர் கலையாற் றிருமுடி காணப்பட்டாரேனும் சுருதியாதிய கலைகளுள் ஒன்றானும் துணியப்படாதவர் எனலும், தாம் ஒருகலையேனும் ஆசிரி யர் மாட்டு உணர்ந்தறியார் எனலும் பொருள் பயக்கும். கலை-சாஸ்தி ரம். உணரான் என்பது தனக்குரிய செய்வினைப் பொருளையன்றிச் செயப்பாட்டுப் பொருளை யுணர்த்திற்று. அஃதன்றி யெனற்பாலது அஃதான்று எனத் திரிந்தது; செய்யுளாதலின். இதனை,

"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே."

என்பதனானும்,

"அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்." என்பதனானுமறிக.

திருக்கரங்களுள் மூன்று முத்தொழிற் கிணங்கத் துடியும் அபய மும் அனலமும் கோடலானும்; மற்றொன்று, ஒருகாற் கும்பிடிற் கதிகூடுமெனக் குஞ்சித பாதத்தைக் குறித்தலானும், வளைவுற்றமர் வன என்பார், 'கைகளோ டூறிபடுங் கைகள்' என்றார். 'கைகளோ'

என்பதில் ஒகாரம் இழிவுசிறப்பின்கண் வந்தது; 'முறிபடுங் கைகள்' என்றதனால். கண்களோ என்புழியும் அஃதே. இழிவின் மிகுதியை விளக்குவதை யறியாதார் ஒகாரங்கள் வினாப்பொருள என்பர்: அப் பொருள் பயவாமை யறிக.

'முறிபடுங் கைகள்' என்பதற்கு 'முறிந்தகைகள்' என மற்றொரு பொருள் தோன்ற நின்றவாறுங் காண்க. முறி-தளிருமாம். (எழுது முறி-அஃதோலை எடு). சூரிய சோம நேத்திரங்கள் உலகின் தோற்ற நிலைகட் கேதுவாகிய பகலிரவுகளைத் தோற்றுவித்தலான், 'ஒன்று காலையிற் காணும்,' 'ஒன்று மாலையிற்றோன்றும்' எனவும், பிறிதொன்று அவ்வுலகிறுதிக்கு ஏதுவாதலான், 'ஒன்று விழிப்பின் எரியும்' எனவுங் கூறினார். இனி, பழிப்பின் - (ஒருவன்) அவமதிப்பின், ஒன்று - பிறிதொருகண் (நெற்றிக்கண்), விழிப்பின் - விழித்தவழி, எரியும் - (அப் பார்வையிற் பட்டவன் நீறுகத் தீப்பொறி சிந்தி) எரியும்; அதற்குச் சான்று மன்மதன் எரிந்தமை. இதனை,

"எறிதரு கணிச்சிச் செங்கை யீசன்மே லிலக்க நாடுங்
குறியினர் போல நின்ற கொடுந்தொழின் மாரன் றுஞ்ச
நெறியினர்க் கச்ச முண்டோ நினைத்தது முடிப்ப னென்னா
நறுமலர் வாளி யைந்து நாதன்மேற் செல்ல விட்டான்."

"விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுங்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கைலை முற்றுஞ் சூழ்புகை பாவிற் றன்றே."

என வரும் கந்தபுராணம் காமதகனப்படலச் செய்யுட்களா லுணர்க.

பழித்தல் - ஈண்டு அவமதித்தல் மேற்று. இனி - பழித்தால் விழிப்பின் எரியும் எனக் கூறலும் ஒன்று. இதனை, திருவாலவாயுடையார் புராணம் கிழியறுத்தபடலத்து நக்கீர சரிதத்தா லுணர்க.

'பழிப்பிளுென்று' என்பதற்கு 'பழிப்பினையுடைய பிறிதொரு கண்' எனப் பொருள் உரைக்கலாயிற்று; அது நெற்றிக்கண்: தீக் கண்ணுகலானும் விருபாக்கமாகலானும் அங்ஙனம் கூறப்பட்டது.

'கண்களோ வொன்று காலையிற் காணும், மாலையி லொன்று வயங்கித் தோன்றும்' என்பதற்குக் 'கண்கள் ஒருகாலைக் கொருகாலைக் குருடாவன' என மற்றுமொரு பொருடோன்ற நின்றது. தன்னை நீ. புகழ்ந்துரைத்த செய்யுள் - கோவைத் திருவாசகம். அவற்றைச் சிவ பெருமான் எழுதினமையை நான்காவது செய்யுளுரையிற் கூறிய சரிதத்தால் உணர்க. தன்னைப் புகழ்ந்துரைத்த செய்யுளை எழுதுதற் குரிய சாதனங்கள் தன்மாட்டுப் பொருந்தாவிடினும் புகழ்ச்சி விரும்பி எழுதினன் என்பார், 'புகழ்ச்சி விருப்பன் போலும்' என்றார். போ லும்-செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று: போல்வ என்பது பொருள். இனி, "ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்." என்பதனல் கட்டுரைக்கண் வந்த இடைச்சொல் எனினுமாம்.

ஆன்மாக்களெல்லாம் இவரே முதற்கடவுளென்று அறிந்து உய்வான், ஊழிக்காலத்து அச்சுதனுதியவரையு மழித்து, அவரென்பை அணிந்து அனுத்துணையும் இகழ்வெய்திலராய் விளங்கினரென் பார், 'இகழ்ச்சியறியா வென்பணிவானே' என்றார். இகழ்ச்சியறியா என்பு என்றது எவரும் புகழப்படுதலினல். என்பணிவானே என் புழி ஏகாரம் பிரிநிலை; மற்றைத் தேவர்களினின்றும் பிரித்தலான். என்பணிவான் என்பது அவன் எனச் சுட்டாய் நின்றது.

இங்ஙனமிருந்தும் தலைமை நாடாதெய்திப் பழுதில் செய்யுளை உலகினர் ஓதியுணர்ந்துய்வான் வரைந்தனர்; இவ்வுட்கிடை யுணரார்க்கு இச்செயலாற் புகழ்ச்சி விருப்பர்போல்வர்; அவர் இகழ்ச்சியறியா என்பணிவாரே என்பதனேடு நிந்தா ஸ்துதியுமாய் இச்செய்யுள் நிற்பதுணர்க.

என்பணிவான் என்றது சிவபெருமானை.

சிவபெருமான் என்பணிந்தது:—

சர்வசங்கார காலந்தோறும் ஒடுங்குகிற பிரமாது தலைகளையும் விஷ்ணுக்களது எலும்புகளையும் சிவபிரான் மாலையாகத் தொடுத்து, எப்பொழுதும் அழிவில்லாமல் எஞ்சிநின்ற பொருள் தாம் ஒருவரே என்று அப் பிரமனாதியோர் அறிந்து வழிபட்டு நற்கதி யடைதற் பொருட்டு, ஆபரணமாக அணிகின்றனர் என்பதாம். இதனை,

"பரம னிவ்வகை யடுந்தொறு மடுந்தொறும் பலவாம்
பிரம னாதியோ ரென்பினைத் தரிக்குமப் பெரியோர்
சிரமெ லாந்தொடுத் தணியலா வணிந்திடுஞ் சிகைதன்
னூரமு லாவுமுந் நூலென வேயணிந் துறையும்."

"ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணித
லீத லாதொரு திறமுள தியாவரு மெவர்க்கு
நாத னேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்
தீதெ லாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே."

என வரும் கந்தபுராணம், ததீசி யுத்தரப்படலச் செய்யுட்களா லுணர்க.

நேரிசை வெண்பா

25. வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சேரேடு—தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து.

(இ - ள்.) வானும் புகழ் - தேவரும் துதிக்கின்ற, புகலி மன்னன் - சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்த சுவாமிகள் அரு

ளிய, தொடர்பு - திருப்பதிகம், ஒன்று எடுதானும் - எழுதிய திருவேடுதானும், எரி ஆர் - எரிதல் வாய்ந்த, அழல் வீழ்ந்து - தீயில் விழுந்து, கரி ஆய்விடாமல் - கரியாகி நீறுபடாமல், எழுந்து - முன்னையினும் விளக்கமடைந்தெழுந்து, தேன் உந்து இதழியோன் சீர் - தேனைச் சொரியும் கொன்றைமாலை யணிந்த பரமருடைய பரத்துவ நிலையை, கரி ஆய் மொழியும் - தானே சான்றாக நின்று சாற்றும்; (எ-று.)

(வி - ரை.) தொடர்பு ஒன்று எடுதானும் அழல் வீழ்ந்து கரியாய்விடாமல் எழுந்து கரியாய் இதழியோன் சீர் மொழியும் எனக் கூட்டுக. திருமால் முதலிய பெருந்தேவர்களும் சிவபிரான் உணர்த்தியவாறு இச் சுவாமிகளை வழிபட்டுய்ந்தாரென்பார், 'வானும் புகழ் புகலிமன்னன்' என்றார். இதனை,

"இன்ன வாறு நிகழ்ந்ததன்மே லெழிற்சீர் காழிப் பதிநாதன்
அன்ன வூர்தி புள்ளூர்தி யானை யூர்தி யாதியரைத்
துன்ன வோடு மவரெய்தி யுலகே ழீன்ற சிற்றுதரக்
கன்னி பாகத் திருந்தானைக் கசிந்து பணிந்து முன்னின்றார்."

"செம்மைக் கருணைக் கடலனையான்
திருமுன் னின்றோர் தமைநோக்கி
எம்மைத் தலங்க டோறும்பதிகத்
தேத்து ஞானக் கவுணியனை
அம்மைப் பொலஞ்செய் யிம்பத்தி
லாவா கனஞ்செய் தெந்நாளும்
மும்மைப் பயன்பெற் றலகுய்ய
முதுபூ சனைநித் தியமியற்றி."

"நிகழ்சித் திரைபங் குனிமாத நிறையா திரையும் வைகாசிப்
பகர்மூ லத்து மாவணியைப் பசியா மாதச் சதயத்தும்

மகர மதியிற் கதிர்மதிய மருவு நாளு மிதுனமதி
திகழ வருரோ கணியுமென்றேழ் தினத்து மைமித் தியமியற்றி."

"புரையில் கேள்வி யிமையோர்கள் புகல்பங் குனியிற் சதயத்தின்
நிரைசெய் மணிப்பூங் கொடியேற்றி நெடுமான் றலைநா டோர்நடத்திச்
திரைசெய் தீர்த்த மாதிரைநா டிளைத்தா டுதிரென் றருள்செய்ய
விரைவி லமர ராண்டுதொறு மகிழ்ந்திவ் வாறு புரிந்தனரால்."

என வரும் சீர்காழித் தலபுராணம், திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதார அத்தியாயச் செய்யுட்களான் உணர்க. இனி, 'வானும் புகழ்' என்பதனைப் புகலிக்கு அடையாக்கினும் அமையும்; சூரபன்ப னால் தோல்வியுற்ற இந்திரன் முதலிய தேவர்கள் 'பிரமபுரமன்றி நமக்கு வேறு புகலில்லை' என்று கருதிப் புகல் அடைந்தமையால், 'வானும்' என்புழி உம்மை உயர்வுசிறப்பு. தொடர்பு - செய்யுள்: அதற்கு, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவற்றின் தொடர்புடைமையிற் போந்தபெயர். இது, ஈண்டு "போகமார்ந்த பூண்முலையாள்"என்னும் திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தின் மேற்று. ஒன்று ஏடு - வினைத்தொகை; அன்றி, தொடர்பொன்றையுடைய ஏடெனப் பொருள் கூறலும் ஒன்று; அதற்கு இரண்டனுருபும் பய னும் உடன்றொக்க தொகை என்க. 'தேனுந்திதழியோன்' என்பது பிரணவப்பொருளாகிய தான், அப் பிரணவ வடிவாகிய கொன்றை யை யுரிமையாகப் புனைந்தமையை விளக்குகின்றது. தேனுந்திதழி யோன்-சிவன். 'இதழி' ஆகுபெயராய்க் கொன்றைமாலையை யுணர்த் திற்று. சீர்-பரத்துவம். 'ஏடுதானும்' என்பதில் தான் கட்டுரைக்கண் வந்த அசை; உம்மை-இழிவுசிறப்பு. இழிந்த ஏடுதானும் திருப்பதிகம் எழுதப் பெற்றமையின் தெய்வீக முடைமையான், அமணர்கள் எண் ணாயிரவரும் தம்பனஞ் செய்துகொண்டு அக்கினியில் இட்ட ஏடுக ளெல்லாம் கருகிச் சாம்பராகவும் தான் கருகிச் சாம்பராகாது சிவபெரு மானது பரத்துவநிலையைச் சான்றாகாமலே சான்று யுரைத்ததென்

பார், 'ஏடுதானுங் கரியாய்விடாமல் எழுந்து கரியாய் மொழியும்' என்றார். கரி - சாட்சி. கரியாய்விடாமல் என்பது இரட்டுற மொழிதலாக நின்றது; சான்றாகுதல் நீங்காமல், கரிந்துபோகாமல் என இரு பொருள் பயத்தலான். ஆய்விடல் - ஒரு சொன்னீர்மைத்து. 'எரியாரழல்' என்றது அமணர்களெண்ணாயிரவரும் தாம் ஏடுடுங்கால் தம்பனஞ் செய்துகொள்ளும் சிந்தனையாற் சாலமூட்டின அக்கினியை. எரி - முதனிலைத் தொழிற்பெயர். அச் சமணர்கள் தம்பனஞ் செய்துகொண்டு அதிற் றனித்தனி யிட்ட ஏடுகளெல்லாம், கருகிச் சாம்பராகவும், தான் சிவபெருமானையே பொருளாக வுடைமையின் முன்னையிலும் விளக்கமடைந்து விளங்கிற்று என்பார், 'வீழ்ந்தெழுந்து' என்றார். 'எழுந்து' என்பதற்குப் 'பசுமையுற்று இனிது விளங்கி' எனினும் அமையும். இதனை,

"இட்ட வேட்டினி லெய்திய செந்தமிழ்ப் பதிக
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென வுடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே."

என்பதனு லறிக. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகம் எழுதிய திருவேடு தீயில்வீழ்ந்து கரியாகிவிடாமல் முன்னையிலும் பசுமையுற்று விளங்கிச் சிவபெருமானது பரத்துவநிலையைத் தானே சாட்சியாக நின்று சாற்றும் என்பதாம். இச்செய்யுள் கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எரியில் ஏடிட்ட வரலாறு:—

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் மதுரைத் திருப்பதியில் எழுந்தருளி, பாண்டியன் கோயிலுட் சென்று, அவன் முடியின் பக்கத்திலிருக்கும் இரத்தினாசனத்திலிருந்து, அப் பாண்டியனுக்குண்டான வெப்பு நோயைத் தவிர்த்து, ஆங்கிருந்தபோது, சமணர்கள்

பிள்ளையாரை வாதுக்கழைக்க, அப்பொழுது பாண்டியன் "என்னுடைய வெப்பு நோயை நீங்கள் ஒழித்திலீர்கள், உங்களுக்கு என்ன வாது?'' என்று சொல்ல, சமணர்கள் அரசர் உங்களுக்கு என்னவாது என்றதையே வினாவாகக்கொண்டு, "நாங்கள் இருபக்ஷத்தேமும் எங்கள் எங்கள் சமயக் கருத்தை ஏட்டிலே தீட்டி, அக்கினியில் இடக்கடவோம். வேவப் பெறாமையே வெற்றி.'' என்றார்கள். அப்போது அரசர் ஒன்றுஞ் சொல்லுமுன், பிள்ளையார் "நீங்கள் சொல்லியது நன்று. அரசனெதிரே அப்படியே செய்வோம், வாருங்கள்!'' என்று சொல்லியருளினார். பிள்ளையாருடைய ஆஞ்ஞையினாலே பாண்டியன், சபை முன்னே அக்கினி அமைக்கும்படி. ஏவலாளர்களை ஏவ, அவர்களும் அக்கினி அமைத்தார்கள். பிள்ளையார் சமீபத்திலே எழுந்தருளிவந்து, 'பரமசிவனே மெய்ப்பொருள்' என்று தாம் பாடியருளிய தமிழ்வேதத் திருமுறையை ஸ்தோத்திரஞ் செய்து, "நம்முடைய சிவபெருமானே பரம்பொருள்'' என்று சொல்லி வணங்கி, திருக்கரத்தினால் எடுத்து, சிரசின்மேற்கொண்டு, திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்த்து, அத் திருமுறையைத் தமது திருக்கரத்தினால் மறிக்க, திருநள்ளாற்றின் மேலதாகிய * "போகமார்த்த பூண்முலை

* திருநள்ளாறு
பண் - பழந்தக்கராகம்
திருச்சிற்றம்பலம்

"போகமார்த்தபூண்முலையாடன்னொடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
ஆகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே.''

"தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலின்
நளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளிரிளவளரெரியிடினிவைபழுதிலைமெய்ம்மையே.''

யாள்" என்னும் திருப்பதிகம் வந்து நேர்ந்தது. பிள்ளையார் அத் திருப்பதிகத்தையே விரும்பி, திருநள்ளாறரை வணங்கி, அது எழுதப்பட்ட திருவேட்டைக் கழற்றி, திருக்கரத்திலே கொண்டு, பரமசிவனே மெய்ப்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும் பொருட்டு, "இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை; இது சத்தியம்" என்னுங் கருத்தையுடைய "தளிரிளவளரொளி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, அங்குள்ளவர்கள் எல்லாருங் காண, சமணர்களுடைய சிந்தை வேவ, அக்கினியிலே அவ் வேட்டை இட்டருளினார். இட்ட ஏட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம், பரஞானம் அபரஞானம் என்கின்ற இருதனங்களையுடைய உமாதேவி பாகரும் அட்டமூர்த்தியுமாகிய பரமசிவனையே பொருளென உடைமையால், மிகச் சுவாலிக்கின்ற அக்கினியிலே பச்சையாய் விளங்கிற்று என்பதாம்.

கட்டளைக் கலித்துறை

26. துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்புதொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேனுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே.

(இ - ள்.) மடவார்-பெண்களது, துடைவாழைமேல்-தொடையாகிய வாழைமீதுள்ள, அல்குல் பாம்பு - அல்குலாகிய பாம்பு, தொட - தீண்ட, மயங்கி - நிறையழிந்து, நடைவாய் - நடை வாய்ந்த, பிணம் எனப்பட்டார் - பிணமென்று சொல்லப்பட்டவரெல்லாம், குலை உடை - குலையையுடைய, வாழைமேல் - வாழையிற் றங்கிய, நச்சு உரகம் - விடம் பொருந்திய பாம்பு, தீண்ட மாய்ந்த - தீண்ட இறந்த, ஒருவன்-மூத்ததிருநாவுக்கரசு, உயிர் அடைவான் - முன்போலுயிர் அடையும்படி, அருள்புரியும் - திருவருள் பாலித்த, திருநாவுக்

காசினை-திருநாவுக்கரசு நாயனாரை, பெறுகிலர் - (முன் வழிபடுதல்) பெறாதரே; (எ-று.)

(வி - ரை.) குலைவாழையிலுள்ள உரகம் தீண்டினால் மயங்கு வது இயல்பு; அங்ஙனமன்றி இவ்வல்குற் பாம்பு தொடவே மயங் கும் என்பார், 'துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொட மயங்கி' என்றார். தொடை என்பது துடை என மருவிற்று. துடை வாழை - உருவகம். அல்குற்பாம்பு என்பதும் அது. மங்கையர் மைய லின் மூழ்கி மயங்குபவர் உயிர் எய்துதற்குரிய பயன் எய்தாமையின் பிணத்தோ டொப்பாரேனும், பிறர்க்குப் பயன்பாடின்றி, உண்டு உடுத்து உழலாநிற்றலின், அதனின் வேற்றுமையுடைய ரென்பார், 'நடைவாய் பிணமெனப்பட்டார்' என்றார். நடைவாய் பிணம் - இல் பொருள் உவமம். வாய் பிணம் - வினைத்தொகை. நடைவாய் பிணம் என்றது மக்கட்குரிய நல்லறிவின்மையைக் குறித்தபடி. இது இழித் தற்கண் வந்தது;

"உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு."

என்பதில் 'மக்களாதலே வேறு' என்றாற்போல.

பெறுகிலர் - எதிர்மறை வினைமுற்று. இதில் தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. வழிபடுதல் பெறுகிலர் என்புழி வழிபடுதல் சொல்லெச்சம்; "பெற்றாற் பெறிற் பெறுவர்" என்னுந் திருக்குற ளிற்போல, நஞ்சு-நச்சு என வலித்தல் பெற்றது. நச்சு உரகமென்க. நச்சு என்பதை வினைத்தொகையாக்கி நச்சுகின்ற குலை என அடை யாக்கினும் அமையும்; வாழைக்குமாம். நச்சுதல்-விரும்புதல். நச்சுகுலை- மிக இளங்காய்களையுடைய குலை எனலும் ஒன்று; அப்பொருட்கு விகாரத்தியல்பு. 'மாய்ந்த ஒருவன்' என்றது அப்பூதிநாயனாரின். மூத்த குமாரனாகிய மூத்த திருநாவுக்கரசை. பிறிதினியைபு நீக்குத

லாகிய விசேடணந் தந்து நச்சுரகம் என்றார்; ஈண்டு உருவகிக்கப் படு முரகம் நச்சிலதென்பதற்கு: அஃது அல்குற்பாம்பு. எனவே, அவ்வரவம் நச்சுடையதேனும், அது தீண்ட மடிந்த மகன் திருநாவுக் கரசினை வழிபடுதல் பெற்றான். இவ்வல்குற் பாம்பு நச்சிலதேனும் இது தீண்டியவழி மடியாது மயங்கியுழல்வோர் பெறுகிலர். ஆகலின், பயனை யிழப்பித்தலில் அதனினும் கொடிதாகிய இத்தகைய மயலைக் கடத்தற்கும் வாகீச மூர்த்தியின் தியானமே மருந்தென்பதும் கொள் ளக்கிடந்தது. பட்டார் பெறா ரென்னலும் ஒன்று. அதற்குப் பொருள் 'பிணமெனப்பட்டவர் திருநாவுக்கரசினைப் பெறாதவரே ஆவர்' என்பது. உரகந்தீண்டி யொருவன் மாய்ந்த சரிதத்தை கூவது செய்யுளிற் காண்க. திருநாவுக்கரசு நாயனாரை வழிபடுவோர் மாநிலத்து உதித்து உழலார் என்பதனை, "திருநாவுக்கரசடியவர் காடற்கதிகிதி" என்பதனாலும், அம் மயலைக் கடத்தற்கு மருந்தாதலை "குழிந்து சுழிபெறு நாபியின் கொண்மயிர்" என்பதனாலும் அறிக. (திருநாவுக்கரசு தேவர்-திரு ஏகாதசமாலை. உ, க.)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

27. அரசன் பரிமேல் வரநெடுநல் யானை
  பெருத்தத் தமர்ந்துபோய்
வரதன் கைலை மலையடைந்த மணியே!
  மணிநீ ரிடுபசும்பொன்
திரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற்
  செம்பொ னப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத் திருவாய்
  மலர்ந்து பகர்வாயே.

(இ - ள்.) அரசன்-(உயிர்த்துணைவராகிய) சேரமான் பெருமா ளாயனார், பரிமேல் வர - குதிரை மேலேறி உடன்வர, நெடுநல்

யானை எருத்தத்து - நெடிய நல்ல வெள்ளையானையின் பிடரியில், அமர்ந்து போய் - தங்கிச் சென்று, வாதன் - சிவபிரானது, கைலை மலை அடைந்த - திருக்கைலை மலையை யடைந்த, மணியே - மாணிக்கம் போல்பவரே!, மணிநீர்-(முதுகுன்றத்திலே) மணிமுத்த நதியில், இடு பசும்பொன் - இடப்பட்ட பன்னீராயிரம் பசும் பொன்னும், திரை - அலைகள், சங்கு எறியும் - சங்குகளை யொதுக்குகின்ற, குளத்து வர - திருவாரூர்க் குளத்தில் அணுகவும், செங்கல் - (திருப்புகலூரிலே திருமுடி வைத்துத் துயிலப் பெற்ற) செங்கற்கள் பலவும், செம்பொன் ஆ - செம்பொன் ஆகவும், பாடும் பரிசு - பாடுந்திறத்தை, உன் செம்பவளம் திருவாய் மலர்ந்து - உமது செவ்விய பவளம் போலும் திருவாயைத் திறந்து, இன்று எனக்கு பகர்வாய் - இன்று சிறியேனுக்குச் செப்புவீராக; (எ-று.)

(வி - ரை.) ஆளுடைய நம்பிகள் தம் தோழராகிய சேரமான் பெருமாணாயனாரை நினைத்துக்கொண்டு கைலைக்குச் செல்லுகையில் அதனை யுணர்ந்த நாயனார் பரிமேலேறித் தாமு முடன் சென்றார் என்பார், 'அரசன் பரிமேல்வர' என்றார். அரசன் என்றது சேரமான் பெருமாணாயனாரை. பரி - குதிரை; பருத்தலை யுடையது எனக் காரணக்குறி. வர-செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் உடனிகழ்ச்சிப் பொருளது; காரணகாரியமின்றி வந்தமையால். 'நெடுநல் யானை' என்றது வெள்ளை யானையை; அதற்கு நெடுமையாவது - எழுமுழ முயர்ந்தும், ஒன்பது முழம் நீண்டும், பத்து முழச் சுற்றுடையதாயும், முற்பாக முயர்ந்தும், பிற்பாகம் தாழ்ந்து மிருத்தலாம். 'நல்' என்றது உத்தம இலக்கணத்தை. உத்தம இலக்கணமாவது - நான்கு கால்களும் கோசமும் துதிக்கையும் வாலுமாகிய ஏழுறுப்பும் நிலத்திலே தோய்தலும், காலில் வெண்மையான நகமும், வால் கால் உடம்பு துதிக்கை கொம்பு என்னு மிவற்றால் கொல்ல வல்லதும், தறுகண்மையும் செம்புள்ளி வாய்ந்த மத்தகமும், சுளகுபோன்ற செவியும்

மும்மதமும் உடைத்தாயிருத்தலாம். 'எருத்தத்து' என்புழி அத்துசாரியை. எருத்தம்-பிடரி. வரதன்-வரத்தைக் கொடுப்பவன்; (சிவன்). முறை வேண்டுவோரும் குறை வேண்டுவோருமாகிய திருமாலாதியர்க்கும் சனகன் முதலிய முனிவர்க்கும் வேண்டும் வரங்களும் ஞானோபதேசமும் பாலித்து, விநாயகக்கடவுள் முதலியோர் புடைசூழ, அம்பிகை பாகராய்ச் சிவபெருமான் திருக்கைலையிற் றிருவோலக்கங்கொண்டு காட்சிக்கெளியராய் வீற்றிருக்கின்றனர் என்பது தோன்ற, 'வரதன்' என்றார். வரதனுதலை,

"எழுதரும் பனுவ லாகம மேனைக்
கலைகளு மிருடிகண் முதலா
முழுவலன் புடையார்க் கருளவுந் திருமா
லூற்றுதேந் தாமரைக் கிழவன்
முழுதுடல் விழிக்குங் கடவுளா தியர்க்கு
முன்னிய வரங்கொடுத் திடவுஞ்
செழுமணிக் களத்துத் தெய்வதக் குரிசி
றேவியோ டாங்கிருந் ததுவே."

என வரும் தணிகைப் புராணம் அகத்திய னருள்பெறுபடலச் செய்யுளா லுணர்க. மலவாதனை யற்றோரும் பூமியில் மானுடவுருக் கொண்டு சில பகல் வதிவரேல், அவ் வாதனை வந்து சேருதலின், அவ் வுருவை ஞானாக்கினியாற் றகித்து, விசுத்த வுருப்பெற்றுச் சேறல் மரபாக, இவ்வாளுடைய நம்பிகள், தம்முருவம் இயற்கையே விசுத்த வுருவாதல் பற்றி, அவ் வுருவோடு திருக்கைலையை அடைந்தா ராகலின் மாசிலாமணியே யென்பார், மாசறுதலாதி அடைகொடாது, 'மணியே' என்றார். மணியே என்றது சுந்தரமூர்த்தி சுவாமிகளை; அஃது உவமையாகுபெயர்: விளிப்பெயருமாம். இவர் மானுட உருவோடு திருக்கைலை யடைந்தமையை, "ஞான வவ்வாரூ ரரசரை யல்லது நாமறியோம்." எனவரும் திருத்தொண்

டர் திருவந்தாதியா லுணர்க. சேய்மையி லுள்ளதை அண்மையி லழைத்தலாகிய ஆகருஷணமும், இவர்பால் அருள்விளையாட்டாக நிகழ்ந்த தென்பார், 'மணிநீரிடு பசும்பொன் குளத்துவர' என்றார். மணிநீர் - மணிமுத்தாநதி. பசும்பொன் என்பதற்குப் பன்னீராயிரம் பசும்பொன் எனப் பொருள் கூறப்பட்டது; புராணக் கூற்று நோக்கி. இதனை,

"பணிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயிரம் பொன்
னணியருள் கொடுக்கு மாற்றா னல்கிட வுடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னார்முன் பின்னொன்று கழற லுற்றார்."

"அருளுமிக் கனக மெல்லா மடியனேற் காரு ருள்ளோர்
மருளுற வியப்ப வங்கே வரப்பெற வேண்டு மென்னத்
தெருளுற வெழுந்த வாக்காற் செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினை முழுதுமாரூர்க்குளத்திற்போய்க்கொள்கவென்றார்."

என வரும் பெரியபுராணச் செய்யுட்களா லுணர்க.

இரும்பு முதலிய உலோகங்களையேயன்றிச் செங்கல்லைப் பொன்னாக்கல், எத்தகைய வாதிகளுக்கு மியலாததும் இவர் மாட்டு நிகழ்ந்த தென்பார், 'செங்கற் செம்பொனா' என்றார். செங்கல் செம்பொன்னாயது திருப்புகலூரில். 'செம்பொனா என்புழி ஆக என்பது ஈறு தொகுத்தல். ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்தலும், செங்கற் செம்பொன்னாதலுமாகிய இவை மூயனுதற் றொழிலின் றிப் பாடுமளவானே முடிந்தது என்பார், 'பாடும்' என்றார். பாடும் பரிசு - பாடும் திறம். பரிசு - அருட்டன்மையுமாம். செம்மொழி பயிலும் நம் திருவாக்கினன்றிப் பிறர்பாற் கேட்டறிதலில் அன்பி லேன் என்பார், 'உன் செம்பவளத் திருவாய் மலர்ந்து' என்றார். 'செம்பவளத் திருவாய் - செம்மையாகிய பவளம் போன்ற திருவாய்;

முன்னது பண்புத்தொகையும், பின்னது உவமைத் தொகையுமாம். ஆற்றிடுபொன் குளத்து வரவும், செங்கற் செம்பொனாகவும் பாடும் பரிசை அறிந்து வைத்தலினன்றி இயற்றுதலில் ஆவலுடையனல்லே னென்பார், பரிசு சித்திக்கப் பகர்வா யென்னாது, 'பரிசு பகர்வாய்' என்றார். எனவே இவர் எல்லாம் வல்ல சித்தரியல்பும் உடையரென்பது குறிப்பித்தவாறு.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையை யடைந்த சரிதம்:—

சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான்பெருமானாயனார் திருமாளிகையில் எழுந்தருளி யிருக்கும்போது, ஒருநாள் திருவஞ்சைக் களத்துக்குச் சென்று அங்குள்ள சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து, உள்ளே புகுந்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று, அக்கினியிற் பட்ட மெழுகுபோல மனங் கசிந்துருக, இரண்டு கண்களினின்றும் ஆனந்த வருவி சொரிய, சரீரத்திலே உரோமாஞ்சங் கொள்ள, இரண்டு கைகளும் சிரசின்மேலேறிக் குவிய, "அடியேனை இப் பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருளல் வேண்டும்" என்னுங் குறிப்போடு "தலைக்குத் தலைமாலை" என்னுந் திருப்பதிகம் பாடினார். உடனே கைலாசகிரியில் சிவபிரான் அரிபிரமேந்திராதி தேவர்களை நோக்கி, "நீங்கள் போய் நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளை யானையின்மீது ஏற்றிக்கொண்டு வாருங்கள்!" என்று ஆஞ்ஞாபித்தனர். அவ்வாறே தேவர்கள் சென்று அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து வெள்ளை யானையின்மீதேற்ற, அவர் அவ்வியானையின் மேலேறி தம்முடைய தோழராகிய சேரமான்பெருமானாயனாரை நினைத்துக்கொண்டு, பஞ்ச வாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்களெல்லாம் ஸ்தோத்திரஞ் செய்து புஷ்பமாரி பொழியவும் திருக்கைலைக்குச் சென்றார். அதுபொழுது சேரமான்பெருமானாயனார் சுந்தரமூர்த்தி நாயனாருடைய செயலை அறிந்து, அந்த

க்ஷணத்தில் அருகிலே நின்ற ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு திருவஞ்சைக்களத்துக்குப் போய், வெள்ளை யானையில் மேற்கொண்டு ஆகாயத்திற் செல்லுஞ் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு, தாம் ஏறிய குதிரையின் செவியிலே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதினார். உடனே அந்தக் குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து, சுந்தரமூர்த்தி நாயனாருடைய வெள்ளை யானையை அடைந்து, அதனை வலஞ்செய்து அதற்கு முன்னாகச் சென்றது என்பதாம்.

ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்த சரிதம்:—

சுந்தரமூர்த்தி நாயனார், திருவாரூரிலே பரவையாரோடு கூடியிருக்கும் நாளில், ஒருநாள் பரவையாரை நோக்கி, "எனக்குத் திருமுதுகுன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்த நதியிலே புகவிட்டு வந்தேன். இப்போது இத்தலத்திலே இருக்கின்ற திருக்கோயிலுக்கு மேற்றிசையிலுள்ள குளத்திலே அதை எடுத்துக்கொண்டு வருவோம் வா!" என்று சொல்லி, பரவையாருடன் திருக்கோயிலை வலம் வந்து மேற்றிசையி லிருக்கின்ற திருக்குளத்தை யடைந்து அதன் வடகீழ்க்கரையிலே போய், பரவையாரை நிறுத்தி, சுவாமியை வணங்கி, குளத்தி லிறங்கித் தடவினார்.

அப்பொழுது சிவபிரான், சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு திருப்பதிகம் பாடுவிக்கவேண்டும் என்னும் திருவிளையாட்டினாலே பொன்னை அக் குளத்திலே வருவியா தொழிந்தருள, பரவையார், "ஆற்றிலே இட்டுக் குளத்திலே தேடுகிறீரா?" என்றார். அது கேட்ட நாயனார், "பரவையார் நகையாதபடி பொன்னைத் தாரும்" என்று திருமுதுகுன்றர்மேல் "பொன்செய்தமேனியினீர்" என்னும் திருப்பதிகம் பாடி, சிவபிரானுடைய திருவருளினாலே வந்தெழுந்த பொற்றிரளை எடுத்துக் கரையிலேற்றி, அந்தப் பொன்னையும், முன் கொண்டுவந்த மச்சத்தையும் உரைப்பித்து, அது

மச்சத்திலும் பார்க்க உரை தாழ்ந்தது கண்டு, பின்னும் கடவுளைப் பாடக் கடவுளானவர் உரை தாழாது அருள் செய்தனர் என்பதாம்.

செங்கல் பசும்பொன்னான சரிதம்:—

சுந்தரமூர்த்தி நாயனார், திருவாரூரில். எழுந்தருளி யிருக்கும் பொழுது, பங்குனி உத்திரத் திருநாள் சமீபித்தலும், பரவையாரது திருவிழாச் செலவிற்குக் கொடுப்பதற்குப் பொன் கொண்டு வரும் பொருட்டு, திருப்புகலூரை யடைந்து, கோயிலிற் சென்று, சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடி, சமீபத்தில் இருக்கின்ற மடாலயத்திற்குப் போகத் திருவுளங்கொண்டு புறப்பட்டுவந்து, கோயிற்றிருமுன்றிலின் ஒரு பக்கத்திலே அடியார்களோடும் இருந்தருளினார். அப்பொழுது பரமசிவனது திருவருளினாலே நித்திரை வந்தது. உடனே அங்கே திருப்பணிக்காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து உயரம் பண்ணி, அதனையே தலையணையாகக் கொண்டு உத்தரீயத்தை விரித்து நித்திரை செய்தார். பின் விழித்தெழுந்தபோது, அந்தச் செங்கற்கள் எல்லாம் பொற் கல்லாய் இருக்கக் கண்டு, திருவருளைத் துதித்து, திருக்கோயிலினுள்ளே போய்,

"தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே."

என்னும் திருப்பதிகம் பாடியருளினார் என்பதாம்.

நேரிசை யாசிரியப்பா

28. பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே

பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்,
"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மில"வெனும்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே.

(இ - ள்.) அன்னம் ஆடும் - அன்னங்கள் விளையாடுகின்ற, அகல் துறை பொய்கை-அகன்ற துறைகள் வாய்ந்த திருக்குளங்கள் செறிந்த, வாதவூர் அன்ப - திருவாதவூரில் அவதரித்த அன்பரே!, பனிமதி - இளம்பிறை, தவழும் - ஊருகின்ற, பவளம் வார் சடையோன் - பவளம் நிகர்த்த நெடுஞ் சடைகளையுடைய இறைவனது, பேர் அருள் - தெய்வத் திருவருளை, பெற்றும் - பெற்றிருந்தும், பெறாரின் - அதனைப் பெறாதார் போன்று, அழுங்கி - வருந்தி, நெஞ்சம் நெக்கு உருகி - மனநெகிழ்ச்சியுற்றுருகி, நீயே - நீரே, நிற்பை-வாடிநிற்கின்றீர்; பேயேன்-பேய்த்தன்மையுடைய யானே, பெறாது - அவ்வருளைப் பெறாதிருந்தும், பெற்றார்போல - பெற்றவர் போன்று, களிகூர்ந்து - பெரிதும் மகிழ்ச்சியிற்றிளைத்து, உள்ளம் - உள்ளத்தில், கவலை தீர்ந்தேன்-துயரொழிந்தேன்; ஆதலால் - ஆகையால், தெய்வப்புலமை - தெய்வப்புலமையையுடைய, திருவள்ளுவநாயனார்;—"நன்று - தமக்கு உறுதியாயினவைகளை, அறிவாரின் - அறிபவர்களினும்; கயவர்-(அவையறியாத) கீழ்மக்கள், திருவுடையர்-நன்மையுடையராவர்; (அவர்போல) நெஞ்சத்து - தமது நெஞ்சினிடத்து, அவலம் இலர்-(அவை காரணமாக) கவலையிலர்;" எனும்-என்றருளிய, செஞ்சொல் - திருக்குறளின், பொருளின் தேற்று - பொருட்டெளிவை, அறிந்தேன் - தேர்ந்துணர்ந்தேன்; (எ-று.)

(வி-ரை.) சந்திரன் தன் கலைக்குறைவால் நாணி மெல்லப் புடைபெயர்தலுடையன் என்பார், 'பகிர்மதிதவழும்' என்றார். பகிர் மதி என்றது, ஒற்றைக்கலையாகிய மதியை. பவளக்கொடிபோலும் நீட்சியும் நிறமும் பொருந்தின என்பார், 'பவளவார்சடை' என்றார். செம்பவளம் என்றோது பவளம் என்பது, தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேஷண மாதலால், அடைகொடாது கூறப்பட்டது. பவள வார்சடையோன் - சிவபெருமான். 'பேரருள்' என்றது, பசுத்துவ நீக்கிப் பதித்துவம் பயக்கும் தெய்வத் திருவருளை. (பெருமை + அருள்.) பேரருள் பெற்றமையை,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே."

எனவும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர்கைம் மாறே."

எனவும்,

வரும் திருவாசகச் செய்யுட்களான் உணர்க. சிவபெருமான் ஆட்கொள்பவர்க்கு அருளுந் திறம் அளவின்மை நோக்கி, அத்தகைய அருளை மேன்மேற் பெற ஆவல்கொள்ளல் அருட்பேறுடையார்க்கு இயல்பாகலான், இவர்தாமும் அங்ஙனம் ஆவலுற்று நின்றனர் என்பார், 'பெற்றும் பெறாரி னழுங்கி நிற்பை' என்றார். பெற்றும் என்புழி உம்மை உயர்வுசிறப்பு; பெறுதலினும் உயர்வுமிகுதியால். பெறாரின் என்பதில், இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. நிற்பை-முன்னிலைமுற்று. பெறாரின் அழுங்கினமையை,

"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே." எனவும்,

"வன்ப ராய்முரு டொக்கு மென்சிந்தை
மாக்க ணென்செவி யிரும்பினும் வலிது." எனவும்,

மணிவாசகப் பெருமான் ஆங்காங்கு விளக்கிய அருட்டிரு வாக்குக்களான் அறிக. அமைதியின்றிச் சலிக்கும் சித்தத்தனாகலின், அவ்வருளின் திறம் இத்தகையவென அறியாது, உண்டு உடுத்து மகிழ்ந்து உழலா நின்றேன் என்பார், 'பேயேன் பெறாது பெற்றார்போலக் கவலை தீர்ந்தேன்' என்றார். தீர்ந்தேனே என்பதன் ஏகாரம், பேயேன் என்புழிக் கூட்டப்பட்டது. 'நீயே' 'பேயேனே' என்பவற்றிலுள்ள ஏகாரங்களுள் முந்தியது உயர்வினும், பிந்தியது இழிவினும் வந்த தேற்றம். ஏனைய ஏகாரங்கள் அசைகள். 'அன்னம் ஆடும் அகன் துறைப் பொய்கை' என்பதற்கு, 'அன்னங்கள் தாமரையிற் றங்கித் தம் பெட்டையோடு விளையாடுகின்ற அகன்ற துறைகளையுடைய பொய்கைகள்' எனினும் அமையும்; அமையவே, நீர்வள முடைய வாதவூர் எனப் போதரும். "அன்னவயல்சூழருணை" என

வும், "அன்னங் கண்படுக்குந் தண்பணை" எனவும் கூறுதலானும் அறிக. அன்னங்கள் தாமரையிற் றங்கி வசித்தலை,

"தாமரை மலர்தலை யெடுத்துத் தான்கமழ்
தூமலர்க் குவளைகா லணைத்துத் தோலடிக்
காமரு பெடைதழீஇ யன்னங் கண்கொளுந்
தேமலர்த் தடந்தழீஇத் திசைகண் மல்கிற்றே."

என வரும் சிந்தாமணிச் செய்யுளான் உணர்க. அன்ப = அண்மை விளி; அதற்கு முதல் வேற்றுமை அன்பன்.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்."

என்றது,அரும்பொருள் அடங்கினும், ஆசிரிய வசனமில்வழிச் சிற வாதாகலின், இத் தெய்வத்திருக்குறளைப் பொன்போற் பொதிந்து வைத்தா ரென்க. திருவள்ளுவ நாயனார் தெய்வப்புலமையராகலின் அவராருளிய திருக்குறள்களின் சொற்பொருளன்றி அப்பொருட் டெளிவறிதல் தெய்வப்புலமையர்க்கே உரியதாக, ஈண்டு உதகரித்த திருக்குறளின் பொருட்டெளிவைத் தேவரீருக்கும் சிறியேனுக்கும் உள்ள அனுபவத்தை யொட்டி ஒருவா றறிந்தேன் என்பார், 'பொரு ளின் றேற்றறிந்தேனே' என்றுங் கூறினார். செஞ்சொல் - அடை யடுத்த கருவியாகுபெயர்; அது நூலை யுணர்த்தினமையால், தேற் றம் என்பது ஈறு குறைந்தது. தேற்றமாவன - இம்மை மறுமை வீடுகட்குரிய உறுதிப்பொருள்களாகிய புகழற ஞானங்களின் இயல் பறிவார், அவற்றை ஈட்டாநின்றே மிக ஈட்டப் பெறுகின்றிலே மென்றும், ஈட்டுகின்ற இவை தமக்கு இடையூறு வருங்கொல் என் றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமை என்பவற்றுள் யாது விளையுமோ என்றும், இவற்றாற் கவலை யெய்துவர்; கயவர் அப் புகழ்முதலிய வொழித்துப் பழிமுதலிய ஈட்டாநின்றும் யாதும் கவலை யெய்திலராகலான் இவர் திருவுடையரென்று குறிப்பால்

இகழ்ந்தன ரெனக்கோடல் முதலியவை. 'பேயேன்' என்பதற்கு, தேவரீரது தரிசன உத்தேச மாத்திரத்தானே செல்வேன் செல்வேன் என்று செல்லும் ஆசைப்பேயும், தரிசித்தவழிச் செல்வேனென்று செல்லுதலின்றிச் செல்லும் ஆணவப்பேயும், தரிசித்தும் விரோதமின்றிச் சின்னாளிருந்து செல்வேன் என்னும் பிராரத்த வினைப்பேயும், இதனோடு யானும் செல்வேனென்று இரங்குவிற்கும் மாயைப் பேயுமாகிய இவற்றாற் பீடிக்கப்பட்டுள்ளேன் எனப் பொருள் கோடலும் ஒன்று. இதனை, இவ்வாசிரியர் பிறாண்டும்,

"பகலாவெழுத் தைந்தேவடி வாகுஞ்சிவ ஞானி
 பாற்போகுவ னென்றேநினை வுற்றேனது பொழுதே
புகலாசையி ரும்பேயினிப் போவேனெனப் போய்த்தாற்
 புணர்மூலம லப்பேயவற் கண்டேகுவ னென்றே
அகலாமைய கன்றேயக லாநின்றது மெல்ல
 வாகத்தின்வி னைப்பேயவற் கண்டுஞ்சில நாளு
னிகலாமையி ருந்தேகுவ னெனநின்றது மாயை
 யெனும்பேயத னோடேகுவ னெனநைந் ததிரங்கே."

எனக் கூறுதலையும் அறிக. பகிர்மதி என்றது பிறையை.

சிவபெருமானது சடையில் பகிர்மதி தவழும் வரலாறு:—

தக்கனுடைய புத்திரிகளாகிய அசுவினிமுதலிய இருபத்தேழு பெண்களையும் மணம் புரிந்துகொண்ட சந்திரன் அவர்களில் உரோகணியினிடத்து மாத்திரம் மிக்க காதல்கொண்டு அவளுடனே எப்போதும் கூடிக் களித்திருக்க, இச்செய்தியைத் தன் புதல்வியரால் உணர்ந்த தக்கன் சந்திரனை நோக்கி "உன் கலைகள் குறைக!" எனச் சபிக்க, அச் சாபத்தால் சந்திரன் பதினைந்து கலைகளும் குறைந்த போது 'மற்றோர் கலையையும் இழக்க வரும்' எனப் பயந்து சிவபெருமானைச் சரணமடைந்தான். அப்பெருமான் இரங்கி ஒற்றைக்

கலையோடுங் கூடிய சந்திரனைத் தமது சடையி லணிந்து மீண்டும் கலைகள் வளரும்படி அநுக்கிரகித்தனர் என்பது.

நேரிசை வெண்பா

29. தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டுப்பெற் றான்கொனீ—தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின்.

(இ - ள்.) தேன் ஏறு - வண்டுகள் தங்கிய, அலர் சூடி - மலர்களை யணிந்து, சில் பலிக்கு என்று - சிறுபலியின் பொருட்டென, ஊர் திரியும்-(முனிவர் பத்தினிகளின்) இருக்கைகடோறும் திரிந்த, ஆன் ஏறி - இடபத்திவர்ந்த பெருமான், நீ ஏறும் - நீர் ஊருகின்ற, வெள்ளை மணி - வெண்முத்துச் சிவிகையை, யாண்டு பெற்றான் என்று - யாங்குப் பெற்று உமக்கு ஈந்தாரென்று, வினவுவோம் - கேட்போம்; வாங்கிய-(அச்சிவிகையைப்) பெற்ற, அப் பிள்ளையை - அத் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை, யாம் காணப்பெறின் - யாம் தரிசிக்கப் பெறுவோமாயின்; (எ - று.)

(வி - ரை.) வண்டுகள் விரும்பும் மலராதியவற்றி லன்றித் தேவர் மனிதராதியர் விரும்பும் அணிமுதலியவற்றில் அன்பிலர் என்பார், 'தேனே றலர்சூடி' என்றார். தேன் - வண்டின் ஓர் சாதியுமாம். 'தேன் ஏறுஅலர்' என்பதற்குத் 'தேன்பொருந்திய கொன்றை முதலிய மலர்கள்' எனினுமாம். சூடி - வினையெச்சம். வேண்டிய வுணவை ஒரு மனையிற் பெறும் பெரும்பலியன்றித் தாருகாவனத் திருடிபத்தினிமாரது பல மனையின் வாயில்கடோறும் பெறும் சிறு பலியே விழைந்து இடபமூர்ந்து சிவபெருமான் சென்றனர் என்பார், 'சில்பலிக்கென் றூர்திரியுமானேறி' என்றார். சில்பலி என்றது சிறுபலியை; அஃது அளவைக் குறித்து நின்றது. (சில் - சிறுமை)

'பலிக்கென்று' என்பது உள்ளபடி பலிக்குச் சென்றதன்று. 'ஊர்' என்பது முனிவர் பத்தினிகளின் இருக்கையை யுணர்த்திற்று; ஆகு பெயரான். ஆனேறி - சிவபெருமான்; பெயர்: மானேர்தி என்பது போல. பிக்ஷாடனமூர்த்தியாய் இடபத்திவர்ந்து பலிக்கெழுந்தருளி னர் என்பதும் புராணக்கூற்று. இதனை, "பெற்றமேறிப் பலிக்கு வரும் பெருமான்" என வரும் பெரியபுராணத்தில் மூர்க்கநாயனார் புராணச் செய்யுளா னுணர்க.

ஆன் - ஈண்டு இருஷபத்தை யுணர்த்திற்று.

சிவபெருமான் பலிக்கென்று ஊர் திரிந்தமையை:—

தேவதாரு வனத்துள்ள நாற்பத்தெண்ணாயிர முனிவரும், "பிர பஞ்சம் அநாதி நித்தியம்; சிவன் முதலாயினா ரெல்லாம் அநித்தியர்; வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி நித்தியமாயுள்ளது; அதில் வகுத்த யாகாதிகளை யியற்றின் அவையே துறக்க முதலிய பயன் களைப் பயக்கும்; அப் பயனை நுகர்விப்பான் ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவ னொருவனில்லை"; என்று கூறும் மீமாஞ்சை நூலே உண்மை நூலெனக் கொண்டு, சுவதந்திரராகிய சிவபெருமானை வழிபடுத லொழிந்து, பரதந்திரராகிய தங்களைச் சுவதந்திரராகத் துணிந்து, யாகாதிகளை யியற்றி, ஒழுகாநிற்ப; அவர் மனைவியரும், அவர் கற்பித்த அக் கொள்கை வழிநின்று, கற்பிற் சிறந்து, தேவ மங்கையரை அவமதித்தொழுகலின், அவ்வழிப்பட்டு உலகம் அவல முறாதபடி, அவரியற்றும் யாகாதிகள் பயன்பா டின்மையை விளக்கி அவர் மயக்க வுணர்வை யொழித்து ஆட்கொண்டருளுதற் பொருட் டே, திருமாலை அவர் மயங்க மோகினியுருக்கொண்டு செல்ல ஏவி, தான் மங்கையர் மயங்கப் பிக்ஷாடன மூர்த்தியாய் இடபத்திவர்ந்து, அம்மங்கையரிருக்கு மிடந்தோறும் திரிந்து பலியேற்றனர் என்னுஞ் சரிதத்தா லுணர்க.

தாம் கொண்ட கோலத்தால் முத்துச்சிவிகை யீந்தவரெனக் குறிக்கப்படாராயினும், எல்லா முடையராகலின் அவரே அருள் விளையாட்டான் ஈந்தனர்போலும் என்பார், 'யாண்டுப் பெற்றான்' என்றார். (யாண்டு-எவ்விடத்து.) கொல், தான்-அசைகள். மேக முதலியவை யீனு முத்தம் செம்மையாதிய சிறத்தவாகலின் அவற்றானன்று; சங்கீனும் வெண்முத்தாற் சமைந்த தென்பார், 'நீயேறும் வெள்ளை மணி' என்றார். வெள்ளை மணி-முத்துச்சிவிகை. வெள்ளை மணி - அடையடுத்த ஆகுபெயராய்ச் சிவிகையை யுணர்த்திற்று; அடைநீக்கிக் கருவியாகுபெயராகக் கோடலும் ஒன்று. வெள்ளை-சங்கும், வெண்மையுமாம்.

வெள்ளைமணி - வெண்மையாகிய மணியையுடையது; அது சிவிகை என அன்மொழிப் பெயராக் கோடலாகாதோ எனின், அற்றன்று. சேனாவரையர் பொற்றொடியையும், பரிமேலழகர் கனங்குழையையும், வாணன் கோவையுரையாசிரியர் தாழ்குழலையும், சிவஞானசுவாமிகள் அறுபதத்தையும் ஆகுபெயராகக் கொண்டிருத்தல் நியதிப்பெயர் கருதியன்றோ; ஆதலான், ஆகுபெயராகக் கோடலே சால்புடைத்து; நித்திலப்பந்து, முந்நீர் என்புழிப்போல ஆகுபெயரன்மொழியாகக் கருதுதலும் ஒன்று. பிறரால் காணுதற்கரிய பெருந்தகையைக் காணப்பெற்றால், சிவிகை வந்தமை கேட்டுத் தெளிதலுமாமென்பார், 'காணப்பெறின் வினவுவோம்' என்றார். எனவே, அப்பிள்ளை காணப்பெறுவது எளிதன்றென்பது தோன்றப் 'பெறின்' என அருமைகுறித்து நின்றது. 'அப் பிள்ளை' என்புழி அகரம் தலைமைச் சுட்டு. பலாறி பழிச்சொ லுடையராய்ச் சிறுபலிப் பொருட்டு ஊர் திரிதலைக்கொண்டு உயர்ந்த வாகனமின்றி எருதேறியுழலு மவர்க்குச் சங்குமணிதானும் ஏது; ஆயினும், அவர்க்குக் குபேரனுதிவர் உரிமையரெனக் கூறப்படுதலான், அவர்மாட்டுப் பெற்றும் அளித்திருக்கலாமாகலின், யாண்டுப் பெற்றாரென்று கடாவுவோம்; வாங்

கிய அவ்வறியாப் பிள்ளையை யாம் காணின், எனவும் பொருள்பட்டு இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க.

ஆளுடைய பிள்ளையார் முத்துச் சிவிகை பெற்ற சரிதம்:—

திருஞான சம்பந்தப் பிள்ளையார், திருநெல்வாயி லரத்துறைக்குப் போகும்போது தந்தையாருடைய தோண்மேலிருத்தலை ஒழிந்து, திருவடித் தாமரை நோவ, மெய்யப் மைய்ய நடந்து, மாறன்பாடி என்னும் பதியிற் சென்று, அன்றிரவு அப் பதியிலேயே தங்கினார். திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கின்ற கடவுள் தம்முடைய திருக்குமாரராகிய பிள்ளையாருடைய வழி வருத்தத்தைத் திருவுளத்தடைத்து, அந்த ஸ்தலத்தி லிருக்கின்ற பிராமணர்கள் அனைவருக்கும் தனித்தனியே சொப்பனத்திலே தோன்றி, பிள்ளையாருக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னங்களும் தம்மிடத்தில் எடுத்துக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, மகிழ்ந்து, அற்புத மெய்திய சிந்தையோடும் ஆலயத்தில் வந்து கூடி, திருப்பள்ளியெழுச்சிக் காலம் வர, திருக்காப்பை நீக்கி, முத்துச் சிவிகையையும், முத்துக்குடையையும், முத்துச் சின்னங்களையும் கண்டு, ஆனந்தங்கொண்டு, துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, சிவனடியார்களோடு அந்தச் சிவிகை முதலியவற்றைத் தாங்கிக் கொண்டு, ஆளுடைய பிள்ளையாரிடத்துக்குப் போனார்கள். அதற்கு முன் பரமசிவன் ஆளுடைய பிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "நாம் உனக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னங்களும் அனுப்புகின்றோம்; நீ அவைகளை ஏற்றுக் கொள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து தாங்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கும் அடியார்களுக்கும் அருளிச்செய்து, வைகறையிலே விபூதி தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார். சூரியோதயகாலத்தி

லே பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹர ஹர என்னும் ஓசையுடனே முத்துச்சிவிகை முதலியவற்றைக்கொண்டு எதிரே வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, "இவை திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கடவுள் தந்த பொருள்கள்; ஏற்றருளும்" என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அக் கடவுளுடைய திருவருளை "எந்தையீசனெம்பெருமான்" என்னுந் திருப்பதிகத்தினாலே பாடி, திருவருள் வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி, அதில் ஏறியருளினார் என்பதாம்.

கட்டளைக் கலித்துறை

30. பெற்றா னினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்
டேற்றா ரணியினினைப்போற்பிறப்பதுநல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே!

(இ - ள்.) செற்றார் புரம் - பகைவரது திரிபுரங்களை, எரி செய்த - நீறாக்கிய, வில் வீரன் - மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமானது, திருப்பெயரே - திருநாமமாகிய பஞ்சாக்ஷரமே, பற்றா - செவ்விய துணையாகக் கொண்டு, மறி வெண் திரைகடல் - மடங்கி வீசும் வெள்ளிய அலைகள் வாய்ந்த கடலை, நீந்திய பாவலனே - கடந்த வாகீசமூர்த்தியே!, நல் தாரணியில் - உயர்ந்த இந்நிலவுலகத்திலே, பெற்றால் - (ஒரு புதல்வனைப்) பெற்றால், நினை பெற்றவர்போல் - உம்மைப் பெற்ற தாய்தந்தைகளைப்போல, பெறலும் - (உம்மையொத்த ஓர் புதல்வனைப்) பெறுதலும், பிறப்பது உண்டேல் - பிறத்தல் உளதாயின், நினைப்போல் - உம்மைப்போல, பிறப்பதும் நல்ல - (ஒரு புதல்வனாகிப்) பிறத்தலுமே சிறந்தன; (எ - று.)

(வி - ரை.) பெற்றால் உன்னைப் பெற்றவர்போல் உன்னை யொத்த புதல்வனைப் பெறுதலும், உதிப்பின் உன்னைப்போல ஒரு புதல்வனாகி யுதித்தலுமே சிறந்தன என்பதாம். இதனை,

"உருபிறப் பினுமதே பிறப்புமை யுயிர்த்துளார்
மகவுயிர்த் துளார்."

என வரும் தணிகைப்புராணச் செய்யுளா லுணர்க. இந் நிலவுலகத்திலே புதல்வர்ப் பேற்றினருள் எவரானும் புகழ்ப்பெற்றவர் புகழனாரும் மாதினியாருமே யென்பார், 'பெற்றா னினைப்பெற் றவர் போற் பெறலும்' என்றார். பெற்றவர்-தாய்தந்தையர். புதல்வராயினாருள் எவரானும் புகழ்ப்பெற்றவர் நீவிரே என்பார், 'நினைப் போற் பிறப்பது நல்ல' என்றார். ஏனைப் பேறும் பிறப்பும் நல்ல அன்று என்பது குறிப்பெச்சம். எனவே,

"நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே,
யிம்மையிலும் பிழைப்பதென வெம்போல்வா ருந்தெளிய"

மற்றை ஆசிரியரினும் அநுபவத்தில் விளக்கிய அருட்டிற நோக்கி, எவரும் பேணப்படும் இவர் பெருமையையும் ஈன்றார் பெருமையையும் இனிது நிகழ்த்தியபடி. இம்மையிலும் பிழைத்தலை விளக்கினமை:— சமணரால் இடப்பட்ட நீற்றறையினும், விஷங்கலந்த வுணவினும், ஏவப்பட்ட யானையினும், கல்லிற்பிணித்து விடப்பட்ட கடலினும், தப்பி யுய்ந்தமையும் பிறவுமாம். முத்தி பெறற்குரியது இத்தாரணியே யாகலின், 'தற்றாரணி' என்றார். 'பிறப்பது நல்ல கண்டாய்' என்பதில் பிறப்பதுமே எனப் பிரிநிலை யேகாரம் தொக்கது. நல்ல - குறிப்புவினைமுற்று, கண்டாய்-முன்னிலையசை. நல்லவாகச் செய்தாய் எனினுமமையும், தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலி யென்னும் அசுரர் மூவரும், விபூதி ருத்திராக்ஷ தாரணமும் பஞ்சாக்ஷர செப்முமுடையராய்ச் சிவபிரானை வழிபட்டாரேனும்

தேவாதியர்க்கு இடுக்கண் புரிதலுடைமைபற்றி, அச்சுதமூர்த்தி புத்தகுருவாய்ச் சென்று மயக்க, அக்கொள்கையின் மயங்கிச் சிவ பத்தியில் வெறுப்புற்றனர் என்பார், 'செற்றார்' என்றார். செற்றார் என்றது, தாரகாக்கன், கமலாக்கன் வித்துன்மாலி முதலிய அசுரர் களை. புரம்-திரிபுரம்; முன்மொழிகெட்டபின்மொழிநிலையல். இனி, செற்றார் புரத்து ளொருங்கிருந்தும், செறாதார் புரத்தை எரிசெய் திலரென்பார், இதனை யுள்ளுறையாக்கிச் 'செற்றார் புரமெரிசெய்த வில்வீரன்' என்றார். இக்குறிப்பு அமணர்களென்னும் செற்றார்புரத்து ளொருங்கிருந்தும் செறாராகிய இவர் புரத்தைப் புரந்தமை மேற்று. ஈண்டுச், 'செறாதார்' என்றது, சிவபத்தியில் வழாதுய்ந்து சிவபெருமா னது வாயிற் காவல் செய்த சுதன்மன், சுசீலன், சுபுத்தி யென்னும் மூவரையும். செற்றல் - வெறுத்தல். புரம் - ஊரும் உடலுமாகலின் ஏற்ற பெற்றி கொள்க. செற்றவழி, மேருச்சிலையாதிய வுடைய ராய்ச் சென்று, அவர் நிலைமை கண்டு முறுவலிக்க, அதிற் றோன் றிய அனலான் முப்புரங்களும் தீப்பட்டு, அத் திருமா லாதியர்க்கு அபசய முறாதபடி அவருருவாகிய கணையையும் விடுத்த அருளாள ரென்பார், புர மெரிசெய்த வீரனென்னாது 'வில்வீரன்' என்றார். பஞ்சாக்கரம் பரசிவ ரூபமாய் விளங்கித் தியானிப்பாரைத் தற்சொ ரூபமாக்கலின், அது அப் பரமர்க் குரிமையுடைத்தென்பார், 'திருப் பெயர்' என்றும், சிறுமையுடையாரையும் பவக்கடல் கடப்பிக்கும் அத் திருமந்திரம் திருநாவுக்கரசு தேவரை இத் திரைக்கடல் கடப்பி யாது விடுமோ என்பார், 'பற்று' என்றும் கூறினார். 'திருப்பெயரே' என்புழியும், 'பாவலனே' என்புழியு முள்ள ஏகாரங்களுள் முன்னை யது தேற்றம்; பின்னையது விளியுருபு. பஞ்சாக்கரம் சிவாகமாதி சட்கும் மூலமாதலைத் தேர்ந்து, அதனியல்பைச் "சொற்றுணை வேதி யன்" என்னும் திருப்பதிகத்தமைத்துத் துதித்துக் கடலைக் கடந்த அத்தகையர் என்பார், 'கடனீந்திய பாவலனே' என்றார்.

திரிபுரம் எரித்த சரிதம்:—

தாரகன் [சூரபன்மன் தம்பி] புத்திரர்களாகிய தார்காக்கன், கமலாக்கன், வித்துன்மாலி யென்னும் அசுரர் மூவரும் கோடியாண்டு தவமியற்றி, பிரமதேவராற் பொன் வெள்ளி இரும்புகளாலாகிய மூவரண்கள், முறையே சுவர்க்கம் அந்தரம் பூமி யென்புழி நிலை பெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன் வரவும், அவை ஆயிரம் யாண்டுக்கோர்கால் ஒரு முகூர்த்த நேரம் ஒருங்கு தொகவும், அக்காலத்தில் ஒரு கணை விடுத்து அழிப்பினன்றி வேறெவ் வகையானும் அழியாதிருக்கவும், திருமாலாதியர் எதிர்ப்பினும் தோற்றோடவும் வரமேற்று, மயன் வகுத்த மாளிகைகளோடு கூடிய அவ்வரண்களி னுற்று, விபூதி ருத்திராக்ஷ தாரணமும் பஞ்சாக்ஷர செபமு முடைய ராய்ச் சிவபிரானை வழிபட்டாரேனும், தேவாதியர்க்கு இடுக்கண் புரிதலுடைமை பற்றி, அச்சுதமூர்த்தி புத்த குருவாய்ச் சென்று மயக்க, அக் கொள்கையின் மயங்கிச் சிவபத்தியில் வெறுப்புற்ற ஞான்று, சிவபெருமான் தேவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, பூமி தேராகவும், சூரிய சந்திரர் இரு சக்கரங்களாகவும், நான்கு வேதங்கள் நான்கு புரவிகளாகவும், பிரமன் சாரதியாகவும், மந்திரம் கடிவாள மாகவும், பிரணவம் சாட்டையாகவும், ஆதிசேடன் நாணாகவும், திரு மால் பாணமாகவும், வாயு அம்பிற் கட்டிய சிறகாகவும் கொண்டு திரிபுரத்தை யடைகையில், தேவர் ஒவ்வொருவரும் தம்மாலேயே திரிபுரதகன நிறைவேறுவதாகத் தருக்குற்றனர். அதனை யுணர்ந்த சிவபெருமான் நகைக்க அதனால் அற்றைஞான்று திரிபுரம் எரிந்தன என்பதாம். திரிபுரத்தை நகைத் தெரித்தமையே யன்றிக் கணையை யும் விடுத்தமையை,

"இவைகண்டு கணையாகு முகுந்தனும்வா யுவுமதிய
மனலு மெய்ம்மை
நவைகொண்டார் புரத்தேவு கெனவிரந்து சொலவீசன்
விடுப்ப நண்ணி

யவையுண்ட வழலைமிக வெழமூட்டி மீண்டமல
ரடியிற் ருழத்
துவர்வென்ற செங்கனிவாய் பங்கனுநல் லருள்கூர்ந்து
துலங்கி நின்றான்."

என வரும் இலிங்கபுராணச் செய்யுளா லுணர்க.

பஞ்சாக்கரம் பரசிவரூபமாய் விளங்குதலை,

"சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோதமல மாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னுமே."

என வரும் திருமந்திரச் செய்யுளா லுணர்க.

பஞ்சாக்கரம் பவக்கடல் கடப்பித்தலை,

"இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
வருளுமெய் யஞ்செழுத் தரசதை யிக்கட
லொருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ."

என வரும் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் புராணச் செய்யுளா லுணர்க.

பஞ்சாக்கரம் சிவாகமாதிகட்கு மூலமாதலை,

"அஞ்செழுத்தே யாகமமு மண்ணை லருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து-மஞ்செழுத்தே
யானந்தத் தாண்டவமு மாறு றுக் கப்பாலா
மோனந்த மாமுத்தி யும்."

என வரும் உண்மைவிளக்கச் செய்யுளா லுணர்க.

திரிபுராதகனஞ் செய்த காலத்து மூவ ருய்ந்தமையை,

"முப்புரங்களின் மூவர்புத்தன் மொழிதிறத்து மயக்கிடா
தப்பணிந்தவர் தாள்பணிந்தரு ளாற்றினின்றன ராதலாற்
பொய்ப்புரந்தபு காலைநீற்றறை நாவின்மன்னவர் போலெறி
தப்பிவாழ்ந்தன ரீசனுணைவயி னிற்பவர்க்கிடர் சாருமோ."

என வரும் காஞ்சிப்புராணம் முப்புராரி கோட்டப்படலச் செய் *யுளா னுணர்க.*

திருநாவுக்கரசுநாயனார் கடல் நீந்திய சரிதத்தை 22-*வது செய் யுளில் காண்க.*

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

31. *பாவாய்ப் பொழிந்த வானமுதப்*
பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருதுந் தருமமுடைத்
தேவன் மலைக்குப் போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
கழறிற் றறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே.

(இ - ள்.) *வான் அமுதம் - சிறந்த முத்தி சாதனங்களை, பா ஆய் - திருப்பாடல்களாக, பொழிந்த - சொரிந்த, பவளம் திருவாய் நம்பி-செம்பவளம்போலும் திருவாயையுடைய நம்பியாரூரவள்ளலே!, தருமம் - தருமதேவதையை, பொருதும் - சண்டையிடுகின்ற, சே ஆய் - இடபமாக, உடை - உடைய தேவன், மலைக்கு - சிவபிரா னமரும் திருக்கைலைமலைக்கு, நீ போம்பொழுது - நீர் எழுந்தருளுங் கால், கா ஆய் - கற்பகத்தருவை நிகர்த்து, பயந்த - (கருதுவார் கருதுவன வெறுப்ப) நல்கிய, மலர் தட கை - செந்தாமரை மலர் போலும் பெருமைவாய்ந்த திருக்கரங்களையுடைய, கழறிற்றறிவார் -*

சேரமான் பெருமாணுயனுர், கடாவி வரும் - செலுத்திவரும், மா ஆய் பிறக்கும்-இனி உகமுடிவிற் குதிரையா யுதிக்கும், திருமாற்கு கிடையாது - திருமாலுக்குக் கிட்டாது; (எ - று.)

(வி-ரை.) இவ்வுலகே யன்றி எவ்வுலகமும் உய்யும்பொருட்டு மூத்தி சாதனங்களை யாண்டும் முற்றுவித்தவர் என்பார், 'வானமுதப் பாவாய்ப் பொழிந்த நம்பி' என்றார். வானமுதம் என்றது பரமுத்தி யை; அது ஈண்டு அதன் சாதனங்களின் மேற்று: ஆகுபெயர் மூகத்தான்; சிறந்த முத்தி எனினுமமையும். (வான் - சிறப்பு, அமு தம் - முத்தி.)

இவ்வுலகன்றி எவ்வுலகு முய்வித்தமையை,

"பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிக
மித்தாரணி முதலாவுல கெல்லாமுய வெடுத்தார்"

என வரும் பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணச்செய் யுளா லுணர்க.

வான் அமுதம் பாவாய்ப் பொழிந்த பவளத்திருவாய் நம்பி என மாற்றுக. பாவாய் - பாடல்களாக. ஆய் - செயவெனெச்சத்திரிபு. சென்ற வோர் தேயுப் பிரளயத்தில், அச்சுதனுதிய பிரபஞ்சம், அன லான் முடிவுற்றதாக, அது கண்ட தருமதேவதை, 'யானும் இறப்பன் கொல்' என்று இனைந்து, இடபவுருவி னெய்திப் பிரார்த்திக்க, அதனை ஊர்தியாகக் கொண்டு, "இவ்வடிவோடு எங்கும் எம்முன் வதிக" என்று உரிய வரமு நல்கிச் சங்கார கர்த்தாவாகிய அத்தலை மைக் கடவுள் அமர்தலின், நொடித்தான்மலை யென நுவலப் பெற்ற தென்பார், 'சேவாய்த் தருமமுடைத் தேவன் மலை' என்றார்.

தேயுப் பிரளயத்தில் அச்சுதனுதியர் அனைத்தும் ஒடுங்குதலை,

"ஆய தன்மையி லச்சுதற் காயுவு
மாயு மெல்லையின் மன்னுயிர் யாவையுந்

தேயு மண்டஞ் சிதைந்திடு மெங்கணும்
பாயி ருங்கன லேபரந் துண்ணுமால்." என்பதனாலும்,

தருமதேவதையை ஊர்தியாகக்கொண்டு உரியவா மீந்தமையை,

"இறத்தலை யின்மையும் யான மாய்த்தனைப்
பொறுத்திடுந் தன்மையும் பொருவில் வன்மையு
முறைத்திடு மன்பும்வா லுணர்வு நல்கியே
யறத்தனிக் கடவுளக் கண்ணால் கூறுவான்."

"மைதவி ரடியர்செய் பவமு மற்றுளார்
செய்திடு தருமமுந் திரிப தாகியே
யெய்திடு கின்றதி னாமுன் றன்னிடை
மெய்திக ழுயிரென மேவும் பான்மையால்."

என்பதனாலும் கந்தபுராணம் ததீசியுத்தரப் படலத்தில் அறிக.

பொருதலில் வல்லதாகலின், 'பொருதுஞ்சே' எனப்பட்டது. "பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி" எனப் பிறண்டும் வருதல் காண்க. 'தருமமுடைத்தேவன்' என்புழி 'உடைய' என்பது ஈறு தொக்கது. மன்னுயிர் வெஃகியவற்றை வரையாது கொடுத்த வள்ளன்மையர் என்பார், 'காவாய்ப் பயந்த தடக்கை' என்றார்.

'காவாய்' என்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருட்டு; (கற்பகத் தருவை நிகர்த்து). அனைத்துயிரும் உளத்தோடு உசாவலை யறிந்து அவற்றின் உள் நிலவிய துயரனைத்தையும் ஒழிப்பவர் என்பார், 'கழறிற்றறிவார்' என்றார். தடக்கை - பெருமை வாய்ந்த கை. தட - பெருமை; அது கொடையாற்பெற்ற மேன்மை மேற்று:—"தடவுங் கயவு நளியும் பெருமை" என்பதனா லுணர்க. சேரமான் பெருமாணாயனருக்குக் 'கழறிற்றறிவார்' என்பது ஒரு பெயர். இதனை,

"அளவில் பெருமை யகிலயோ னிகளும் கழறிற் றறிந்தவற்றி
ஞுளமன் னியமெய் யுறுதயா மொன்று மொழிய வகையகற்றிக்
களவு கொலைகள் முதலான கடந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்."

எனவரும் பெரியபுராணத்தில் சேரமான்பெருமாணுயனார் புராணச் செய்யுளான் உணர்க. கழறல் பேசலே யாயினும் ஈண்டு மனத்தொடு உசாவலின் மேற்று. திருமால் மாவாகச் சிந்தித்திருப்பரேல் அங்ஙனமே கொண்டு செலுத்துவரென்பது தோன்றக் கழறிற்றறிவாரென்றார். கடாவல் - விரைவிற் செலுத்தல்.

திருமால், போரில் தம்மாற் றுரத்தப்பட்ட தானவரைப் புரந்தமை காரணமாகப் பிருகுமுனிவர் மனைவியாகிய கியாதியைக் கொன்றமையின், அம் முனிவரிட்ட சாபத்தா னேர்ந்து, சிவபிரானால் நிக்கிரகாநுக்கிரகங்கள் புரியப்பெற்ற பத்தவதாரத்துள், 'உகமுடிவி லுறுதற்கு எஞ்சிநிற்கும் கற்கியவதாரத்தும், அப் பிரானை வழிபட்டே அநுக்கிரகம் பெறவேண்டுமென்றே. இச் சேரமான் பெருமாணுயனார் ஊரும் கற்கியா யுதிப்பின், அவ் வழிபாடின்றி அப்பொழுதே அநுக்கிரக முற்று, அப் பிறப்பும் அகன்றிருக்கலாம்; அதற்குத் தவப்பே றின்றாயிற்று என்பார், 'மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே' என்றார். கிடையாதே, திருமாற்கே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் அசைகள். பொருதுஞ் சேவாகத் தரும தேவதையையுடைய தேவன் எனவுங் கொள்க. கொடித்தல் - அழித்தல்.

திருமாலின் கற்கி அவதார வரலாறு:—

கற்கி, திருமாலின் தசாவதாரங்களின் ஒன்றாகிய கடைசியவதாரம். அவர் கலியுக இறுதியில் சிம்மளத்தீவில் சம்பளமென்னும் கிராமத்தில் விஷ்ணுஎச்சன் கிருகத்தில் குதிரை முகமாக அவ

தரித்து, அதர்மங்களைப் போக்கித் தருமங்களை நிறுத்துவர். இவர் ஏறுங் குதிரை தேவதத்தம். இவர் விஷ்ணுயசச்சன் பாரியையான சுமதியின் கருப்பத்தில் நான்கு சகோதரருடன் பிறப்பர். இலக்குமி யும் அத்தியில் பிரகத்ரதன் பாரியையான கௌதமியின் உதரத்தில் வைசாக சுக்கில துவாதசியில் பிறப்பள்.

இவர் சென்ற யுகங்களுள் ஓர் யுகத்தில் பரசுராமரிடத்து வேதங் களையும் தனுர்வித்தையையும் கற்றுணர்ந்து, பத்மாவதியைச் சிம்மளத் தில் மணம் புரிந்து, ஜயன், விஜயன், மேகலன், வலாகன் என்னும் புத்திரர்களைப் பெற்றனர். கல்கி கிருதயுகம் ஆரம்பித்து விட்டதென்று திக்குவிசயத்திற்கு ஆரம்பித்து, சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்து அவரிடத்துக் குதிரையையும், எல்லா மறிந்த கிளியையும், வாளையும் பெற்று, திக்கு விசயஞ் செய்து, சுத்தோதனன் முதலிய வர்களை எதிர்த்து, மிலேச்சர்களைக்கொன்று, தருமத்தை நிலைநாட்டி, மீண்டும் பரசுராமரைச் சேவித்துத் திக்குவிசய தரிசனங்களை அவ ரிடம் கூறினர். பிறகு தேவர்கள் வேண்டக் கல்கிபகவான் தன் குமா ரர்களுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து, சிவபிரானைப் பூசித்து வை குண்டமடைந்தனர் என்பதாம்.

நேரிசை யாசிரியப்பா

32\. திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
ரு யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே.

(இ - ள்.) திரு ஆர் பெருந்துறை - திருப்பெருந்துறையிலே, செழு மலர் குருந்தின் நீழல்வாய்-செழித்த மலர்கள் செறிந்த குருந்த மரநிழலில், உண்ட - பருகிய, நிகர் இல் ஆனந்தம் தேன் - ஒப்பிகந்த சிவானந்தத்தேன், தேக்கு எறியும் - உவட்டெடுக்கும், செய்ய மாணிக்கவாசகன்-ஞானவொழுக்கச் சிறப்பையுடைய மாணிக்கவாசக வள்ளலார், புகன்ற - அருளிச்செய்த, மதுரம் வாசகம்-இனிய திரு வாசகம், யாவரும் - எவரும், ஓதும் - ஓதுகின்ற, இயற்கைத்து - இயல்புடையது; ஆதலின் - ஆகலான், பொன் கலம் நிகர்க்கும் - (அது) பொற்பாத்திரத்தை யொக்கும்; பூசுரர் (ஓதும்) நால் மறை- பூதேவராகிய அந்தணர் ஓதுகின்ற நான்கு வேதங்களும், மண்கலம் நிகர்க்கும் - மட்பாத்திரங்களை யொக்கும்; (அஃதன்றி) மதுரம் வாசகம் ஓதின் - இனிய திருவாசகத்தை யோதினால், உறு பயன் முத்தியே - (அதனால்) அடையும் பயன் முத்தியே; வேதம் ஓதின்- அவ்வேதங்களை யோதினால், மெய்ப்பயன் அறமே-(அவற்றா லடையும்) உண்மைப் பயன் விண்ணுலகாதி பதங்களே; (எ - று.)

(வி - ரை.) மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலில் உண்ட சிவானந்தத்தேன் உவட்டெடுப்ப, அதனை இடையறவின்றி அருந்தாநிற்றலிற் றிருமேனி யன்றித் திருவாசக மும், அத்தேன் மயமாகி, எவர்க்கும் சிவானந்தம் பயப்பதென்பார், 'திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி, னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத், தேன்றேக் கெறியுஞ் செய்ய மாணிக்க, வாசகன் புகன்ற மதுர வாசகம்' என்றார். திரு ஆர் பெருந்துறை - திரு ஆர்ந்த பெருந்துறை; (திருப்பெருந்துறை). 'நீழல்வாய்' என்புழி வாய் - ஏழனுருபு.

நிகரில் ஆனந்தம் - சிவானந்தம். தேக்கெறிதல் - உவட்டெடுத் தல். 'செய்ய மாணிக்கவாசகன்'என்பதிலுள்ள குறிப்புப் பெயரெச்சத் தின் பகுதியதாகிய செம்மை ஞான வொழுக்கச் சிறப்புடைமையை

புணர்த்திற்று. இம் மதுர வாசகமும் இன்ன வருணத்தாருக்கு உரித்தென்பதின்றி, அந்தணர் முதலிய பல திறத்தாராயுள்ள சைவசமயிகள் பலர்க்கும் பயன்படுவதென்பார், 'யாவரும் ஓது மியற்கைத்து' என்றார். 'யாவரும்' என்பதில் உம்மை முற்று. இயற்கைத்து - குறிப்பு வினைமுற்று. பலரும் பரிசிக்கினும் இழிக்கப்படாது, உயர்வுற்றதென்பார், 'பொற்கல நிகர்க்கும்' என்றார். வேத நான்கும், வைதிக நெறியை மேற்கொண்ட அந்தணர் முதலிய மூவர்க்கும் உரியவென மொழியப்படினும், மற்றை யிருவர்க்கும், ஓதுதற்கன்றி ஓதுவித்தற்கு உரிமை நுவலாமையானும், அவ் வோதுதலுமிக்காலத்தின்மையானும், அந்தணர் ஒருவர்க்கே உரித்தாய வென்பார், 'பூசுரர் நான்மறை' என்றார். அந்தணரைப் பூதேவர் எனக் கூறுதலுண்மையான், 'பூசுரர்' எனப்பட்டார். நான்மறையுட் சில கூறு, ஏனையோரால் கேட்கவும் படாதென அந்தணரான் மறைக்கப்படுதலின், உற்றனுசற்கும் உரிமையுறாதவென்பார், 'மறை மட்கல நிகர்க்கும்' என்றார். இக் கருத்துப்பற்றியே இவ் வாசிரியரும் பிறாண்டும், "நிலக்கலமும், பொற்கலமு மன்ன மறையும் புகழ்மூவர், சொற்கலையு மொத்துத் துதிப்பவிருந்து" என்றார். பலர்க்கும் ஓதுதற் குரித்தாயதன்றி, உயர்கதியையு நல்குவதென்பார், 'மதுர வாசக மோதின் முத்தியே' என்றார். முத்தியளித்தல் முதுமறைகட்கு இன்றென்பார், 'வேத மோதினறமே' என்றார். நான்மறையை யிழித்தும் திருவாசகத்தை யுயர்த்தியும் கூறியது முகமனன்று, உண்மையே என்பார், 'மெய்ப்பயன்' என்று விதந்தார். இனி, வேத நான்கும், உதாத்தம் அநுதாத்தம் சுவரிதம் என்னும் சுரங்களின் வழுவாமல் ஓதவேண்டுமென்னும் நியதியவாகலின், அவற்றை ஏட்டின் எழுதி வைப்பின் வலியில்லாரும் ஓதுதலான் அவற்றின் சொற்செறிவின் திட்பம் குறைபுமென ஏட்டி னெழுதாது, வாய்ப்பாடமாகப் போற்றிவருதலின், அச் சுரங்களில் வல்ல பூசுரரே அவற்றிற்கு அதிகாரிகளாயினர்; இதற்கு அந்நியதியின்மையின், வல்லுநரும் வல்லாருமாகிய

சைவசமயிகள் பலரும் எட்டி லெழுதி ஓதுகின்றா ராதலின், அவரனைவரும் அதிகாரிகளே யென்பது தோன்ற, 'யாவரும்' என்றார். 'மறை' என்பது இரகசியப் பொருளுடைமையிற் போந்த பெயரேயாயினும், ஈண்டு 'மறைக்கப்படுவது' என்னும் பொருட் குறிப்பின் மேற்று. 'அறம்' என்றது அறப்பயனை. அறமே யென்னும் தேற்றேகாரம் முத்தி என்புழியும் கூட்டப்பட்டது. 'உறுமெய்ப்பயன்' என ஈரிடத்தும் பிரித்தும் கூட்டியும் முடித்தலு மொன்று. திருவாசகத் தேன் சிவானந்தம் பயத்தலை மேலே விதந்தாம். கடைப்பிடிக்க;

ஆனந்தத்தேன் தேக்கெறிதலை,

"குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின்
கோடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப்
புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங் களைந்தருணன்
னீர்கால் பாய
வறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த வமுதருந்தா
தருந்தி நின்றார்."

என வரும் திருவிளையாடற்புராணம் மண்சுமந்த படலத்தா னுணர்க;

வேதமோதின் அறமே யென்பதனை,

"சுருதிவழி யொழுகினர்கள் சுவர்க்கத்தார்."

என வரும் கோயிற்புராணம் இரணியவன்மச் சருக்கச் செய்யுளா னறிக.

நான்மறையை ஏட்டி லெழுதாமையை,

"ஆற்ற லழியுமென் றந்தணர்க ளான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்."

என வரும் திருவள்ளுவமாலைச் செய்யுளா னுணர்க;

நேரிசை வெண்பா

33. "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"யை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து.

(இ - ள்.) சம்பந்தன் சிவிகை - திருஞானசம்பந்தப் பெருமானது முத்துச் சிவிகையை, பரித்தார் - தாங்கப் பெற்றவர், உந்தும் சிவிகையினை - செலுத்தும் வேறு சிவிகையை, ஊர்ந்து - நடாத்தி, திரிகுவர் - (இது பொழுதும் சிறந்த தேவராய்த்) திரிகின்றாராகலான், அறத்து ஆறு - தருமத்தின் பயன், இது என - இது வென்று (யாம் ஆகம வளவையால் அறிவிக்க) வேண்டா-வேண்டிய தில்லை; சிவிகை-தண்டிகையை, பொறுத்தானோடு-சுமப்பவனோடு, ஊர்ந்தானிடையை - செலுத்துவோனிடத்துக் (காட்சியளவையினாலேயே அறியப்படும்) என்னும் பொருளமைந்த திருக்குறளை, மறுத்தார் - மறுத்தவராயினார்; (எ - று.)

(வி - ரை.) 'சிவிகை பரித்தார்' இப்பொழுதும் சிறந்த தேவராய் உந்துஞ் சிவிகையினை யூர்ந்து திரிகின்றார் ஆகலான், "அறத்தா றிது" என்னுந் திருக்குறளை மறுத்தார் என்க. ஆகலான் என்பது சொல்லெச்சம். 'பரித்தார் திரிகுவராய் ஊர்ந்து மறுத்தார்' எனப் பொருள்கோடலும் ஒன்று; அப் பொருட்குத் திரிகுவர் என்பது முற்றெச்சம் என்பர். அற்றேல், "வினைமுற்றே வினையெச்சமாகவும்" என்றதனால் இறந்தகால வினைமுற்று அங்ஙனமாதலன்றி, எதிர்கால வினைமுற்று எச்சமாத லின்மையானும், வகர இடைநிலை முக்காலத்தன்மை யுணர்த்துமெனின், முற்றாக்கிச் சொல்லெச்சம் வருவித்தலே சால்புடைத்தாதலானும் அவ்வுரை யுரையன்மை என அறிக. அறமார்க்கத்திற் செல்லுவதா லடையும் பயனை, 'அறத்

தாறு' என்றார். ஆறு - பயன்; கருவியாகுபெயர். அதனை ஆறு (வழி) என்றது பின்னதாகலின்: அறத்தின் பயன் அறத்தைக் கைக்கொண் டொழுகியதன் பின்னர் உண்டாகின்ற தாகலின் என்று கொள்க. 'என' என்னும் செயவெ னெச்சத்தால், சொல்லள வையாகிய ஆகமப்பிரமாணமும், 'பொறுத்தானோ டூர்ந்தானிடை' என்றதனால் காட்சியளவையாகிய பிரத்தியக்ஷப் பிரமாணமும், அறி யப்படுமென்பது குறைந்து நின்றதனால் சொல்லெச்சமும், திருக்குற ளில் உய்த்துணரக் கிடப்ப துணர்க. இடையென்னுந் திருக்குறளை மறுத்தார் யெனற்பாலது இசையெச்சமாய் இடையை மறுத்தாரெனக் குறைந்து நின்றது. மற்று-வினைமாற்று; தாங்குந் தொழிலை மாற்றி வேறு சிவிகையைச் செலுத்துந் தொழிலை யுடைமையால். சம்பந்தன் சிவிகை பரித்தார் இம்மை யின்பெய்திய பின்னர், அம்மையிற் சிறந்த தேவராகி, இன்னவிடத்திற் செல்கவென்ற துணையானே ஆண்டுச் சேறற்குரிய தேவயான மூர்வர் என்பார், தாங்குஞ் சிவிகை யென்னாது 'உந்துஞ் சிவிகை' என்றார். அற்றேல், இந்திரன் சிவிகை அகத்திய மாமுனிவர் முதலிய முனிவ ரெழுவரால் ஏந்தப் படுவ தென்ப தென்னை யெனின், இந்திரனென்னும் பெருமை அவ னுக்குளதாக அவரால் ஓர்கால் ஏந்தப்படுவதன்றி எப்பொழுதும் ஏந்தப்படுவது அதற்கியல்பு அன்றென்க. இதனை,

"மாதவ ரெழுவர் தாங்க மாமணிச் சிவிகை மீது
போதரி னவனே வானோர் புரந்தரன்."

என வரும் திருவிளையாடல், இந்திரன் மழிதீர்த்த படலச் செய்யுளா னறிக.

திரிகின்றார் என்னாது 'திரிகுவர்' என்றார்: விழாவில் இப்பொ ழுது பரித்தாரும் விண்ணுல கடைவரென்ப தறிவித்தற்கு. இனி, 'திரிகுவர்' என்பதற்கு, 'சின்னாள் நுகர்ந்தபின் அத்தேவ வின்பத்தி

னும் வெறுப்புறவர்' எனப் பொருள் கொண்டு, வெறுப்புறவரேல், மேலெல்லனை மெய்துவ ரென்னுங் கடாவை ஆசங்கித்து, சிவிகை பரித்த லாதிய வழிபா டுடையார், சிவலோக மெய்துவது திண்ண மாகலின், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனுள், எய்தாதெஞ்சி நிற்கும் அவ்வீட்டை, எய்தாநிற்பர் என்றிசைத்தலும் ஒன்று. அற முடையார் சிவிகையை யூர்தலும், அஃதிலார் அதனைப் பரித்தலும், விழுமிய வேதநூற் றுணிபும், அநுபவமு மாயினும், சம்பந்தனது சிவிகையைப் பரித்தல், அறமில்வழிக் கிட்டாதாகலின், அஃதுடை மையிற் பரித்தார், அம் முப்பயனும் எய்துதலின் அந்நியதியைக் கடந்தவராயினு ரென்பார், 'மறுத்தார்' என்றார். உவகை மேலீட் டால் வாகீசமூர்த்தியும் ஓர்காற் பொறுத்த அச்சிவிகை பொறக்கப் பெறுவது எவர்க்கும் எளிதன்றென்பது கருத்து.

சிறந்த தேவராதலை,

"மேனாட் டமரர் தொழவிருப் பாரும் வினைப்பயன்க
டானாட் டருநர கிற்றவர் வாருந் தமிழ்நர்தங்கள்
கோனாட் டருகர் குழாம்வென்ற கொச்சையர் கோன்கமலப்
பூநாட் டடிமணிந் தாருமல் லாத புலையருமே." எனவும்,

சிவபத மெய்துவது திண்ணமாதலை,

"பெறுவது நிச்சய மஞ்சனெஞ் சே!பிர மாபுரத்து
மறுவறு பொற்கழன் ஞானசம் பந்தனை வாழ்த்துதலான்
மிறைபறு வான்மறி யுண்டடங் தோள்வல் விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி யெம்பெரு மானமர் பொன்னுலகே."

எனவும் வரும், திருஞானசம்பந்தர் திருவந்தாதிச் செய்யுட்களா னுணர்க.

கட்டளைக் கலித்துறை

34 உளர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்விட் டுறுமுனக் கேவருஞ் சைவநலஞ்

கூர்ந்து மிளிர்தரு நாவர சே!நல் குரவுமுனஞ் [மே.
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமு

(இ - ள்.) நாவரசே - வாகீசப் பெருந்தகையே!, நல்குரவு - தரித்திரத்தை, முனம் சேர்ந்து-முன்னர்ச் சார்ந்து, மருவினர்க்கே- (பின்னர்ச் செல்வம்) எய்தப் பெற்றவர்க்கே, செல்வமும்-அச்செல்வமும், சிறந்து ஓங்குறும் - அருமையுடைத்தாய் விளங்கும்; (அது போல) இள ஏறு - இளமை வாய்ந்த இடபவாகனத்தை, ஊர்ந்து வரும்-செலுத்திவரும், உடையான்தன் - இறைவருடைய, உளத்து அருளால் - திருவுளக் குறிப்போடு கூடிய திருவருளானே, சமண் சார்ந்து - சமண் சமயத்தை யடைந்து, (அருளால்) விட்டு - அத்திருவருளானே (அதனை) நீங்கி, உறும் உனக்கே - சைவசமயத்தைச் சார்ந்த நுமக்கே, வரும் சைவ நலம் - (சின்னுள் நீங்கிப் பின்னர்ச்) சேர்ந்த அச் சைவத்தின் சிறப்பு, கூர்ந்து மிளிர்தரும் - சிறந்து விளங்கும்; (எ - று.)

(வி - ரை.) இளவேறுடையான் - சிவபெருமான். அமண் அடைவித்தமை அருளாமைபோலக் காணினும், உய்த்துணரின் அருளேயா மென்பார், 'அருளாற் சார்ந்து சமண் விட்டு' என்றார். சமண் வீட்டிறும் எனவும் பாடம். உளத்தருள் - உளத்தோடு கூடிய அருள். ஈண்டு உளமென்பது (அவ்வமணை யழிப்பிக்கும்) உளக்குறிப்பின் மேற்று. அருளாற் சார்ந்து, அருளால் விட்டு எனத் தனித்தனி கூட்டுக. சமண் என்பது தாப்பிசையாய் நின்றது. சமண் - சமணர் குழாம். 'உனக்கே' என்புழி ஏகாரம் தேற்றம். மிளிர்தரும் - செய்யுமென்னும் முற்று; (மிளிர்தா - பகுதி). வருமிள வேறு என்புழியும், வருஞ் சைவ நலம் என்புழியுமுள்ள 'வரு' இரண்டும்,

"தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந்
தன்மை முன்னிலை யாயீ ரிடத்த."

என்னும் சூத்திரத்திற்கு மாறாகப் படர்க்கை யிடத்திற்கு வந்தமை யின் இடவழுவமைதி. 'நல்குரவு முனம் சேர்ந்து மருவினர்க்கே சிறந்தோங்குறும் செல்வமும்' என்பது எடுத்துக்காட்டுவமை. நல்குரவு - தொழிற்பெயர்; (நல்கூர் - பகுதி.) மருவினர்க்கே என்புழி ஏகாரம் தேற்றம். ஓங்குறும் - முற்று. ஈண்டு 'நலம்' என்றது சார்ந்தாரை அவ்விரு பேற்றிற்கும் உரியராகப் புரக்குந் தன்மையை. 'முனம்' என்பது காலத்தின் பழமை சுட்டாது பிற்பெறுஞ் செல்வத்திற்கு முற்படுங் காலத்தைச் சுட்டிநின்றது. சிறந்தோங்குறு மது போலக் கூர்ந்து மிளிர்தரும் என இயையும். நல்குரவு சார்தற்கும் செல்வ மெய்தற்கும் வினை ஏதுவாதல்,

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

என்னும் சுருதியா னுணர்க. வறுமை மல்கிச் செல்வமெய்தியார் அதனருமையறிந்து போற்றலின் அவர்மாட்டே அது சிறத்தல்போன்று தேவரீர்மாட்டே அச் சைவத்தின் பொலிவு அரிது சிறக்கும் என்னலும் ஒன்று. அப்பொருட்கு 'உனக்கு' என்புழியும், 'மருவினர்க்கு' என்புழியு முள்ள நான்கனுருபு இரண்டையும் ஏழனுருபாக்குக. இனி, கூர்ந்து மிளிர் தரும் - சிறந்து விளங்குகின்ற, நாவரசே - வாகீசப் பெருந்தகையே!, சைவ நலம் உனக்கே வரும் - சைவத்தின் சிறப்பு உனக்கே வராநிற்கும். என்றலும் ஒன்று.

சைவநலங் கூர்ந்து மிளிர்ந்தமையை,

"பொய்வாய் மைபெருக் கியபுன் சமயப்
பொறையில் சமணீ சர்புறத் துறையா
மவ்வாழ் குழியின் கண்விழுந் தெழுமா
றறியா துமயங் கியவம் புரிவேன்
மைவா சநறுங் குழன்மா மலையாண்
மணவா வன்மலர்க் கழல்வந் தடையு

மிவ்வாழ் வுபெறத் தருகு லையினுக்
கெதிர்செய் குறையென் கொலெனத் தொழுதார்."

எனவும்,

"இத்தன் மைநிகழ்ந் தழிநா வின்மொழிக்
கிறையா யெவன் பருமிந் நெடுநாட்
சித்தந் திகழ்தீ வினையே னடையுந்
திருவோ விதுவென் றுதெருண் டறியா
வத்தன் மையனு யவிரா வணனுக்
கருளுங் கருணைத் திறமா னவதன்
மெய்தன் மையறிந் துதுதிப் பதுவே
மேற்கொண் டுவணங் கினர்மெய் யுறவே."

எனவும் வரும் பெரியபுராணத்தில் வாகீசமூர்த்தி புராணச் செய்யுட்களா னுணர்க.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

35. செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகனு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே.

(இ - ள்.) செல்வம் நல் ஒற்றியூரன் - கல்விச் செல்வமும் பொருட் செல்வமுமுடைய சிறந்த திருவொற்றியூரில் எழுந்தருளிய சிவபெருமான், செய்ய சங்கிலியால் ஆர்த்து-பெருமையுற்ற சங்கிலி நாச்சியாராற் பிணிப்புடையராக்கி, மல்லல் - பண்புமிக்க, அம் பரவை தன் கண் - அழகையுடைய பரவை நாச்சியாரிடத்தே, மாழ்கு உற- ஆர்வ மீதூரக்கண்டு, அமிழ்த்துமேனும் - அவர்பால் பொருத்துவித்தாராயினும், நம்பியாரூரன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள், மகிழ் அவன் அடியில் - மகிழ்ச்சியைப் பயக்கும் அக் கடவுளின் உபய

திருவடிகளில், அல்லும் நன் பகலும் - இரவும் பகலும், நீங்காது எய்தி - இடைவிடாது ஒடுங்கி, நல்ல இன்பு - சிறந்த இன்பத்தை, அடைந்திருப்பன் - நுகர்ந்து திகழ்வார்; (எ-று.)

(வி-ரை.) "நாவீற் றிருந்த புலமா மகளோடு நன்பொற்
பூவிற் றிருந்த திருமா மகள்புல்லி நாளும்."

என ஆன்றோர் கூறினமையால், செல்வம் என்பதற்குக் கல்விச் செல்வம் பொருட் செல்வம் எனப் பொருளுரைக்கப்பட்டது. ஒற்றியூரன்- படம்பக்கநாதன். சங்கிலி நாச்சியாரை மணம் பேச விடுக்கப்பட்டாரோடு விடுத்தானும் மடிந்தானாகலின், அவர் மற்றை மாதர்போல மதிக்கற்பால ரல்ல ரென்பார், 'செய்ய சங்கலி' என்றார். ஆர்த்து - பிணித்து. சங்கிலியார்பால் நெடுநாளுறவித்தில ராதலின், 'ஆர்த்து' என்றார். மல்லல் அம்பரவை - பண்பு மிக்க அழகையுடைய பரவை நாச்சியார். அம் - அழகு. மல்லல் அழகுக்கு அடையென்க; "மல்லல் வளனே" (தொல் - உரி.) என்றாராகலின். மல்லல் - வளம்; ஈண்டுப் பண்பு மிகுதி மேற்று.

அமரருட் சிறந்தார்க்கும் அணுகுதற்கும் அரியராகி, அருளானெய்திய அற்புதக் காந்தியுடைய ரென்பார், 'மல்லலம் பரவை' என்றார். இனி, மல்லலம் பரவை என்பதற்கு, அம்-சாரியை யாக்கி, 'எல்லாச் செல்வங்களையு முடைய பரவை' எனினுமாம். ஆரூரருக்கு ஆர்வ மேலீடுகொண்டு இவர் மாட்டு நெடுநாள் எய்துவித்தனர் என்பார், 'மாழ்குற அமிழ்த்து மேனும்' என்றார். மாழ்குற அமிழ்த்தல் - காரியத்தைக் காரணமாக வுபசரித்தல். மாழ்குறல் - மயங்குறல். காரியம், அதன் காரணம் ஆர்வம். அவ் விருவரையும் தாம் அவாவிய வாசனை யகலத் திரோபவித்து, இங்ஙனம் சேர்த்தினாரேனும், அவ் வின்பத்தைச் சிற்றின்பமாக நுகராது, அக் கடவுளின் திருவடிகளென்னும் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபகத்தில் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகள் வியாப்பியமாக இரவும் பகலும் இடையீ

டின்றித் தாடலை போலடங்கிப், பேரின்பமாக நுகர்ந்தனர் என்பார், 'அல்லும் நன்பகலும் நீங்காதவன் மகிழடியி லெய்தி யின்படைந்து என்றார். பகல் பலவு மெய்தற்குச் சாதனமாகலின் 'நன்பகல்' எனப் பட்டது. மகிழடி - இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. ஏனை யின்பமுற்றும் அவற்றின் மிக்கவற்றை நோக்கத் துன்பமாய் முடிதலின் அவ்வின்ப மனைத்தும் ஒருங்கு திரளினும் அணுத்துணை யும் ஒவ்வா இச் சிவானுபவ வின்பமே இன்பமாவ தென்பார், 'நல்லவின்பு' என விசேடித்தனர். இது பொழுதும் ஆலால சுந் தரராய் இவ்வியல்பின் இருக்கின்றன ரென்பார், 'இருப்பன்' என்றார். இருப்பன் - காலமயக்கம்; "ஆடுவார் அடி சூடுவார்" என்புழிப்போல. ஒற்றியூரர் சங்கிலியா லார்த்துப் பாவையி லழுத்தி னும், ஆரூரர் அவரையே நம்பி அவரடியி னெய்தி இன்புற்றிருப்ப ரென மற்றொரு பொருள். இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்ப துணர்க. தான், ஏ, அசைகள்.

நாச்சிமா ரிருவரையும் விசேடித்தமையை,

"தைய லார்சங் கிலியார்தம் திறத்துப் பேசத் தகாவார்த்தை
யுய்ய வேண்டு நினைவுடையா ருரையார்." எனவும்,

"அணங்கேயாகு மிவள்செய்கை யறிந்தோர் பேசவஞ்சவர்."
எனவும்,

"நங்கை பரவையார்,
சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியார்" எனவும்,

"பாசமாம் வினைப் பற்றறப் பான்மிகு
மாசை மேலுமொ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
வீச னாரரு ளெங்கெறிச் சென்றதே."

எனவும் வரும் பெரியபுராணச் செய்யுட்களா லுணர்க.

அடியி லெய்தி இன்புற்றமையை,

"தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையா ருடன்கூடி விளையாடிச் செல்கின்றார்."

எனவும், (பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம்-கஅஉ.)

"இந்நிலையிற் பேரின்ப மினிதமர்வா ரிறையுறையு
மன்னுபுக ழொற்றியூ ரதனின்மகிழ் சிறப்பினாற்
சென்னிமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினால் வந்தகலி."

எனவும் வருவனவற்றா னுணர்க. (கலிக்கம்ப நாயனார் புராணம்-உகசு.)

சிவானுபவ இன்பமே எவற்றினும் சிறந்தமையை,

"கார்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ்
நன்னுநா கந்த ருவர்தா
கவினுமவர் தமினமர கந்தருவ ரவர்தம்மி
னுடரிய தேவ ரவரிற்
சுராதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன்
சொன்முறையி னூறு மடிமேற்
றன்னுசுக மொருநிலை யளவுமின் றாகமிகு
சுகவேலை."

என்பதனு னறிக. (இஷ்டலிங்க அபிஷேகமாலை-கo.)

நேரிசை யாசிரியப்பா

36. தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத லானைக்
கடியின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.

(ப -.ரை.) சிவன் - சிவபெருமான், அவன் அடியன் வாத ஊரனை - தனது அடியவராகிய திருவாதவூரடிகளை, கடிவு இல் - நீக்க மில்லாத, மனத்தால்-உள்ளத்தால், கட்ட வல்லார்க்கு - (நேசித்துப்) பிணிக்க வல்லவர்க்கு, தானே - தாமே (முற்பட்டு), முத்தி தருகுவன் - பரமுத்தியைத் தந்தருளுவார்; (எ - று.)

(வி - ரை.) வல்லார்க்கே தருகுவன் என இயையும். 'தானே முத்தி தருகுவன் சிவன்' என்பது எவர்க்கும் முத்தி யளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமா னொருவரே என்னும் வேதநூற் றுணிபையுஞ் சுட்டி இரட்டுற மொழிதலாய் நின்றது. 'தானே' என்னும் படர்க்கைப் பெயர் சிவபெருமானை யுணர்த்திற்று. அதிலுள்ள ஏகாரம் தேற்றம். இவ்வாதவூரடிகள் உலகை யீடேற்றுவான் அவதரித்த அருட்குரவராகலின், பிற சிறு தேவரைத் தெய்வமெனப் பேணுவாரைக் காண்டற்கும் அஞ்சுதலுடையவராய்ச் சிவபெருமானை முதற் கடவுளென எவருந் தெளியுமாறு தெருட்டி, ஆனந்த மேலீட்டான் அக் கடவுளை அன்புடன் நோக்கி நிற்றலும் அழுதலும் தொழுதலுமுதலிய அமைந்தவரென்பார், 'அவனடியன் வாதவூரன்' என்றார். இவ்வுண்மை யுணர்ந்து மனவொருமை யுற்று, இடையறவின்றி இவரை வழிபடல், சிவபுண்ணிய முதிர்வினர்க்கே சித்திக்குமென்பார், 'வாத ஊரனைக் கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கு' என்றார். கடிவு இல் மனம் என்புழி, இல் - எதிர்மறைப் பெயரெச்சம். பாலர், பித்தர், பிசாசர் போன்று தற்போத மிழந்து, இறைவர் பணியினின்றா ராகலின், இவர் செயலெல்லாம் இறைவர் செயலாக முடிதலான், இவரை வழிபடுவோர்க்கு அவ்விறைவர்தாமே அவற்றை யேற்று முத்தியளிப்பர் என்பார், 'தானே முத்தி தருகுவன்' என்றார். 'தானே' என்புழி ஏகாரம் தேற்றம்; தெளிந்தமையான். நுகர்வு நாடி விழைத லின்மையாற் பாலரையும்; நன்மை, தீமை, சீலம் அகன்றிடுதலாற் பித்தரையும்; செய்யும் செயல் சிவன் செய

லாய் முடிதலாற் பசாசரையும் உவமித்தவாறு. செயலற வொழு தற்கும், ஒருகாற் செய் தொருகா லொழிதற்கும், செயலிழப்பி னின்று செய்தற்கும், மூவரையும் முறையே ஒப்பித்த தென்னலும் ஒன்று. 'வல்லார்க்கே' என்புழி ஏகாரம் பிரிநிலை; வல்லார்க்கே யல் லது பிறர்க்குத் தருவரல்லர் எனக் கொள்ளுதலான். (பிறரினின் றும் பிரித்தமையால்); அசையுமாம்.

சிவபெருமானே முத்தியளிக்க வல்லரென்பதை,

"அன்றியு மொன்று கேண்மோ வம்புய னாதி யாகி
நின்றவர் தம்மை யெல்லா நீக்கியச் சிவனென் றுள்ள
வொன்றொரு முதல்வன் றானே யுய்த்திடு முத்தி வேண்டி
னென்றுமஃ தியம்பிற் றென்னின் யாவரே தேவ ராவார்."

"பாசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்ற
லுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ."

என வரும் கந்தபுராணத்தில் உபதேசப்படலச் செய்யுட்களா னுணர்க.

மூன்றடியான் முடிவது அகவற்பாவுக்குச் சுருக்கமாகிய சிற் றெல்லையாகும் என்பதனை யுணர்த்துவான் இங்ஙனம் கூறினர். அக வற்கு மூன்றடி சிறுமை என்பதனை,

"வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்."

என்பதனு லறிக.

நேரிசை வெண்பா.

37. வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தாவின்ப ஞானங்க—ளெல்லாந்

திருஞான சம்பந்தன் சேவடியே யென்று
மொருஞான சம்பந்த முற்று.

(இ - ள்.) வண்மை - பொருளும், நலம் - (அப்பொருளான் எய்தும்) புண்ணியமும், இன்பம் - (அப் புண்ணியப் பயனாகிய இம்மை மறுமை) இன்பங்களும், கல்வி - கல்வியும், நல் ஆதரவு - (அக் கல்வியா னெய்தும) நல்லன்பும், ஞானங்கள் எல்லாம் - (அவ் வன்பின் பயனாகிய) ஞானமும் ஆகிய யாவும், திருஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தப் பெருமானது, சேவடியே என்னும்-சிவந்த திருவடிகளே எனக் கருதும், ஒருஞானசம்பந்தன் - ஒரு ஞானசம்பந்தத்தை, உற்று - அடைந்து, வல்லார் - வல்லுநரல்லாரும், பிறப்பு அறுப்பர் - பிறப்பை யொழிப்பார்; (எ - று.)

(வி - ரை) ஞானங்களெல்லாம் சேவடியே என்னும் சம்பந்த முற்று வல்லார் பிறப்பறுப்பர் என முடிக்க. 'வல்லார்' என்பது இரட்டுற மொழிதலாய் எதிர்மறையினும் உடன்பாட்டினும் வந்த வினைக்குறிப்புப் பெயராய், வல்லுநரல்லாரையும் வல்லுநரையும் உணர்த்திற்று. வல்லாரும் என்னும் உம்மை விகாரத்தாற் றொக்கது. வண்மை முதலியன அவரவர் பரிபாகத்திற் கேற்ப இம்முறை பிறழ வருதலும் உளவேனும், இதுவே நியதியாகலின், இங்ஙனம் இசைத்ததென்பது. அற்றேல், இங்ஙனம் முறைப்படுத்தோதாத தென்னை யெனின்:—இக் காரண காரிய முறை யுணராது எல்லாந் திருவடிகளே யெனக் கொள்ளும் சிந்தனை யுடையாரும் உதித்துழலாரென்ப துணர்த்துதற்கென்க. அல்லதூஉம், காஞ்சியிற் சிவபெருமா னருளியபடி செயற்கரிய தவ மியற்றியிருந்த திருமாலுக்கும் சிவசாரூப மளித்தமையின் இப் பெருந்தகையின் இணையடிகள் கிரியாசத்தி ஞானசத்தி யுருவாய்க் கிளர்ந்து செல்வமுதலிய போகசாதனங்களையும், கல்விமுதலிய மோட்சசாதனங்களையும் நல்குவனவாமென்னும் இத்தகைய ஒப்பிகந்த ஞானத்தை யுற்று வல்லுநரும் பிறப்பை யறுப்

பர் என்னலும் ஒன்று. 'பிறப்பறுப்பர்' என்றமையின் மேற் பேறெய்துவ ரென்பது சொல்லாமே யமையும். வண்மை - வளத்தின் றன்மை. எவர்க்கும் நன்மை பயத்தலின் அறத்தை 'நலம்' என்றும், அன்பை 'நல்லாதரவு' என்றும் கூறினார். உம்மைத்தொகையாகலின் ஞானங்களெனப் பன்மையீறாயிற்றென்க. இதனை, 'உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே' என்னுஞ் சூத்திரத்தில், 'பலரீறே' என்ற தேற்றேகாரத்தால் அஃறிணையிலும் கொள்ளப்படும். அன்றி, ஞானம்: பரஞானம் அபரஞானம் என இருதிறப்படுதலின், 'ஞானங்கள்' என்றா ரெனினும் அமையும். இதனை,

> "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
> மூவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்."

என்பதனா லறிக. 'எல்லாம் சேவடியே' என்பது காரியத்தைக் காரணமாக வுபசரித்தல். அதிலுள்ள ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். முத்திக்கு முடிந்த சாதனமென்று உணர்த்துதற்கு ஞானத்தை இறுதியில் வைத்தார். 'ஒரு ஞானம்' என்பது ஒப்பிலாத ஞானத்தையும் வைராக்கிய ஞானத்தையும் சுட்டி, இரட்டுற மொழிதலாய் நின்றன; தமிழ்நடையுமாம்.

அறமும் இன்பமும் பொருட்பேறதலை,

> "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள்." என்பதனாலும்,

ஆதரவும் ஞானமும் கல்விப்பேறதலை,

> "கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள்
> சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கண்

மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே."

என்பதனாலும் அறிக. (திருமந்திரம் கல்லாமை-கூ.)

ஞானமே முத்திக் கேதுவாதலை,

"உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான
மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே."

என வரும், பிரபுலிங்கலீலை, சித்தராம தேவர்கதிச் செய்யுளா லுணர்க. திருமால் சிவசாரூபம் பெற்றதைக் காஞ்சிப்புராணம், திரு மேற்றளிப் படலத்திற் காண்க.

பிறப்பறுத்தலை,

"நிலைத்தெழில் சோற மானப யிற்றவர்மா,
சதுரால்வினை செற்றதன் மேலனு கார்பிற விக்கடலே."

என்பதனா லறிக.

கட்டளைக் கலித்துறை

38. உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர் [தம்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்ப
பெற்றானொருநம்பி யப்பூதியென்னும் பெருந்தகையே.

(இ - ள்.) ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகை - ஒரு நம்பி யப்பூதியென நம்பியாரூரரால் உயர்த்தித் துதிக்கப்பட்ட மிக்க மேன்மையுடையவர், தவம் உற்றான் அலன் - சரியை கிரியை யோகங்களாகிய தவத்தை அநுட்டித்தவருமல்லர்; தீயில் நின்றான் அலன் - பஞ்சாக்கினி நடுவினின்று கடுந்தவம் புரிந்தவருமல்லர்;

புனல் ஊண் ஆ - நீரை உணவாகக் கொண்டு, நுகர்வு அற்றானும் அலன்-மற்றையுணவுகளை நீக்கினவருமல்லர்; திருநாவுக்கரசு எனும் ஓர் சொல்தான் - திருநாவுக்கரசு என்னும் ஒரு சொல்லையே, எழுதியும் - (யாண்டும்) தீட்டியும், கூறியுமே - (அதனை உயிர்க்குறுதி பயக்கும் மந்திரமாக) உச்சரித்துமே, என்றும் - எக்காலத்திலும், துன்பு இல் பதம் - துன்பமென்பது எட்டுணையும் எய்துதலில்லாத முத்தியை, பெற்றான் - எய்தினர். (எ - று.)

(வி - ரை.) ஒரு நம்பி அப்பூதி என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதித்தமையை, "ஒரு நம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்" எனவரும் திருத்தொண்டத்தொகையா னுணர்க. 'தவம்' என்றது சரியையாதிகளை. இதனை,

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி னின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து."

என வரும் செய்யுளில் 'தவத்தான்' என்புழிக் காண்க. (சிவஞானபோதம் - அ - சூத்.) மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு அநுட்டிக்கும் வன்மை மென்மைத் தவங்களை வேறு விதத்தலின் இச் செய்யுளில் தவமென்றது சரியை கிரியை யோகங்களையென்க. புனல் ஊணாக எனை நுகர்வு அற்றானும் அலன் என உம்மை பிரித்துக் கூட்டுக. புனலா என்புழி ஆக என்பது ஈறு குறைந்தது. நுகர்வும் என்புழியுள்ள உம்மை இறந்ததுதழீஇயது; தவமுற்றானலன் என்பதைத் தழுவுகின்றமையால். திருநாவுக்கரசென்னும் திருமந்திரம், ஏனை மந்திரங்கள் போலாது, இம்மை மறுமை யின்பங்களில் உவர்ப்புறவித்து, பிறவியிற் செலுத்தாது சிவபதத்து உய்ப்பதெனத் தேர்ந்து, அதனையே யாண்டுந் தீட்டி உச்சரித்தமையின்,

அதுவே, ஞானநெறியாய்ச் சிவபதம் நல்கிற்றென்பார், 'திருநாவுக்கரசெனுமோர், சொற்றானெழுதியுங் கூறியுமே' என்றார். எழுதியும் கூறியும் என்புழியுள்ள உம்மை எண்ணின்கணின்ற சிறப்பு. 'சொற்றான்' என்புழித் 'தான்' கட்டுரைக்கண் வந்த அசை. 'கூறியுமே' என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். இப்பேறு இன்பமெல்லாந் திரண்ட சிவானந்தப் பேறே யென்பார், 'என்றுந் துன்பில்பதம்' என்றார். என்றும் எழுதியும் கூறியுமே துன்பில் பதம் பெற்றான் எனினும் அமையும். பெருந்தகை - அன்மொழி; குணிப்பெயர் எனினும் அமையும். திருநாவுக்கரசென்னுந் திருமந்திரம் சிவபதத்துய்ப்பதென்பதனை,

"இலமா டென்றிடர் பரியா ரிந்திர
னேயொத் துறகுறை வற்றாலு
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர்
நிழ்சன்மக் கடலிடை யிற்புக்
கலையார் சென்றா னெறியா குங்கரை
யண்ணப் பெறுவர்கள் வண்ணத்தின்
சிலைமா டந்திகழ் புகழா மூநறை
திருநா வுக்கர சென்போரே."

என்பதனு லறிக. (திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை - ௭.) இச் சரிதையே ஞானநெறியாய்ச் சிவபதம் நல்கியதை,

"இவ்வகை யாசி னும மேத்தியெப் பொருளு நாளு
மவ்வருந் தவர்பொற் றாளே யெனவுணர்ந் தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்று ளாடு
நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழ லண்ணி னாரே."

என வரும் பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் புராணச் செய்யுளா னறிக.

துன்பில் பதம் என்பதனை,

"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்திங் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
யறத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னிணைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."

என வரும் சிவஞானசித்தியார் சுபக்கம் கக-சூத். கஉ-வது செய்யுளா னுணர்க.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

39. பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்று னென்றால்
விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ
வுரையதினின் றனைவெறுப்ப தென்கொ லின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயிற்
சுரர்முனிவர் பரவுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதனால் வகைசெய்தோயே.

(இ - ள்.) சுரர் முனிவர் - தேவர்களும் முனிவர்களும், பரவுறும் - துதிக்கின்ற, பெரு சீர் தொண்டத்தொகை - மிக்க கீர்த்தி படைத்த திருத்தொண்டத் தொகையை, செய்தோய் - அருளிச் செய்தவரே!, அறம் முதல் நால்வகை - அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும், செய்தோய்-வகுத்தருளியவரே!, பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகி - பெருமிழலைப் பதியிலிருந்த குறும்பநாயனா ரென்னும் பரமயோகியான

வர், பெரிது உவந்து - கழிபேருவகையுற்று, உன் திருவடித்தாம ரையை போற்றி-தேவரீருடைய திருவடிக் கமலங்களைத் துதித்து, விரை மலர் தூய்-மணமிக்க மலர்களா னருச்சித்து, வந்தனை செய்கின்றான் என்றால் - வழிபடுகின்றானென அறிஞர் விதப்பாராயின், விளங்கு இழையார் இருவரொடு - திகழும் அணிகளைப் புனைந்த தேவிமா ரிருவரோடு, முயங்கல் ஆமோ - சேர்ந்து வாழ்வது தகுதியோ? (தகுதியன்றாயினும்), தின்னை உடையானுக்கு - உம்மை அடிமையாகவுடைய உமாபதிக்கு (சிவபெருமானுக்கு), அடுத்த செயல் - உரிய செய்கை, உனக்கும் ஆயின் - உமக்கும் பொருந்துமானால், (அஃதுணர்ந்து வழிபடாது) நின்றனை - உம்மை, வெறுப்பது என் உரைமதி-வெறுப்பது என்னை? உரைப்பீராக! (எ-று.) மதி - முன்னிலையசை.

(வி - ரை.) பெருமிழலைக் குறும்பர் - பெருமிழலை என்னும் ஊரில் இருந்த குறும்பநாயனார். இந் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளது பெருமையைக் குறித்துத் தியானிக்க, அணிமாவாதி அட்டசித்திகளும் வாய்த்தமைகண்டு, மேலுமேலும் வழிபட்டனர் என்பார், 'பெரிது வந்துன் திருவடித் தாமரையைப் போற்றி, விரைமலர் தூய்வந்தனை செய்கின்றான்' என்றார். இதனை,

"நாளு நம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே
யாளும் படியா லணிமாதி சித்தி யான வணைந்தற்பின்
மூளுங் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்துங்
கேளும் பொருளு முணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்."

என வரும் பெரியபுராணத்தில், பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணச் செய்யுளா னுணர்க. இவர் குருபத்தி முதிர்ச்சியாலே தாம் முக்கால வுணர்ச்சி யுடையராகி, சுந்தரமூர்த்தி நாயனார் உத்தர கைலாசத்தை அடைவதை முன்னுணர்ந்து, தாம் அவரைப் பிரிதலாற்றாமை

யால் முதனுனே யோக முயற்சியினுல் பிரமரந்திர வழியால் உடலி னின்றும் பிரிந்து திருக்கைலாயத்தை யடைந்தன ரென்பார், 'பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி' என்றூர். இதனை,

"மண்ணிற் றிகழுந் திருநாவ லூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேனென்
றெண்ணிச்சிவன்றாளின்றேசென்றடைவன்யோகத்தாலென்பார்"

எனவும்,

"நாலு கரணங் களுமொன்றாய் நல்ல வறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
வேல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறைமூ லத்திறப்ப
மூல முதல்வர் திருப்பாத மடைவார் கயிலை முன்னடைந்தார்."

எனவும் வரும் பெரியபுராணத்தில் பெருமிழலைக்குறும்ப நாயனூர் புராணச் செய்யுட்களா னுணர்க.

என்றூல் - என்று அறிஞர் விதப்பராயின். அறிஞர் என்பது சொல்லெச்சம். இத்தகைய பரமயோகியர் வழிபடத் தாம் பரம போகி போன்றிருப்பது இயல்பன் றென்பார், 'விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ'' என்றூர். விளங்கிழையா ரிருவர் என் றது, பரவைநாச்சியார், சங்கிலிநாச்சியா ரிருவரை. முயங்கலாமோ என்புழி ஓகாரம் எதிர்மறை; முயங்குதலை மறுத்தமையான். தேவிமா ரிருவரும் கிரியாசத்தியும் ஞானசத்தியுமாய்த் திகழ, அக் கடவுள் போன்று, ஆன்மாக்களுக்குப் போக மோக்ஷங்களை அளிப்பவ ராயினு ரென்பார், 'உடையானுக் கடுத்த செய லுனக்கு மாயின்' என்றூர். உடையான் என்றது சிவபெருமானை. குறும்பநாயனூர் இவ்வுண்மை குணித்துப், பரமயோகி யெனத் தேர்ந்து பரவித் தாமும் அங்ஙன மாக, அதனை யறிந்துவைத்தும், போகியென மதித்துப் புகலாகித்

தல், எவ்வளவு பெரியதோர் அறியாமை யென்பார், "வெறுப்ப தென்கொல்' என்றார். கொல் - அசைநிலை. வெறுப்பவர்,

"ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு."

என்பதற் கிலக்காயுள்ளார்.

ஆகலின், அவர்க் கிசைத்தல் பிறர்க் கியலாது; அவருந் தெளிந் துய்வான் எல்லாம் வல்ல தேவரீரே யுரைப்பீராக வென்பார், 'உரை' என்றார். இனி, 'நின்றனை வெறுப்பது என் உரைமதி' என்பதற்கு, 'உம்மை வெறுப்பது என்னை? மதி யுரைப்பீராக!' எனலும் ஒன்று. மதியுரைத்தல்-அறிவு கூறுதல்: (மதி-அறிவு). சுரர்முனிவர் பாவல் திருத்தொண்டத் தொகைக்குமாம். இதுவும் வெளிப்படையின் நிந்தாஸ்துதியாக சிறப்ப துணர்க. இப் பொருட்கண் உடையானுக் கடுத்த செயலென்பது இருமனைவியரை உடைத்தாதல் என்க.

சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருமாலாதியர்
எதிர்கொண்டு இறைஞ்சினமையை,

"இந்திரன்மால் பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமான்
நந்தமரூரனென்றானொடித்தான் மலையுத்தமனே."

என அந்நாயனா ரருளிய ஸ்ரீகயிலாயத் திருப்பதிகச் செய்யுளா னறிக.

தேசமுய்வான் திருத்தொண்டத்தொகை யருளினமையை,

"நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்."

என வரும் பெரியபுராணத்தில் சண்டேசுரநாயனார் புராணச் செய்யுளா லறிக.

தேசிகனை சிவனென மதித்த லியல்பை,

"சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணு வதிமூடர்
பொய்த்தகுங் கண்ணு னமரென்பர் புண்ணிய
ரத்த னிவனென் றடிபணி வாரே."

எனவும்,

"தேசிகனை யீசனெனச் சிந்தனைசெய் வார்தினைப்பார்
பாசமறுத் தேபேரின்பம்."

எனவும் வரும் திருமந்திரம் குருதரிசனம், சங்கற்ப நிராகரணத் திருக்குறள் செய்யுட்களான் முறையே யுணர்க. இந் நாயனார் செயல் இறைவர் செயலாய் நிகழ்ந்தமையை,

"யோக மறத்திடினு முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன வவர்தம்மைத் - தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
யேதாகச் சொல்லே னியான்."

என வரும் திருக்களிற்றுப்படியாரா னுணர்க.

நேரிசை யாசிரியப்பா

40. செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே."

(இ - ள்.) செய்ய - சிவந்த, வார் சடை-நீண்ட சடைமுடியை யுடைய, தெய்வசிகாமணி - தேவாதிபரது (சிவபெருமானது),

பாதம் - திருவடிகளை, போற்றும்-வழிபடுகின்ற, வாதவூர் அன்ப- திருவாதவூரில் அவதரித்த அன்பரே!, பூ எனப்படுவது - பூவென்று யாவராலும் உயர்த்திச் சொல்லப்படுவது, பொறி-திருமகள், வாழ்- வாழ்கின்ற (தங்கிய), பூவே-செந்தாமரை மலரேயாம்; (அதுபோல) பா எனப்படுவது - பாவென்று யாவராலும் பகரப்படுவது, உன் பாட்டு - நுமது திருப்பாடல்களேயாம்; (எ - று.)

(வி-ரை.) "மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை"

எனவும்,

"கொக்கிப் பூவும் பச்சை மத்தமுங்
கொல்லைப் போது மென்றுணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கட் டலையு
மரவு மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு
நான்முகன் காந்த பானிற வன்னங்
காணு வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே யொருபாற்றிரு முடி."

எனவும்,

இப் பொருள் குறிப்பின் விளங்கச் 'செய்யவார்சடை' எனச் சடை- யைச் சிறப்பித்துக் கூறினார். எவரெவர் எவ்வத்தேவரைக் குறித்து வழிபடினும் அவ்வத் தேவரிடமாக நின்று அவற்றை யேற்று அவ ரவர் வேண்டிய பயன்களை அளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமா னொருவரே என்பார், 'தெய்வசிகாமணி' என்றார். இதனை,

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்

*வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே."*

என வரும் சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரம்-உ௫-வது செய்யுளா னுணர்க.

தெய்வசிகாமணி - சிவபெருமான்: தேவர்கள் சிரோரத்தினம் போற் கொள்ளத்தக்கவர் என்பது பொருள். மும்மல வழுக்கை ஞான நீராற் கழுவி, மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி, அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வனெனவே கண்டு வழி படுதல், அரன் கழலணிந்த சீவன்முத்தர்க் கியல்பாகலின், இவ் வாசிரியரும், போக சாதனமாயுள்ள உட்கரணங்களும் புறக்கரணங் களுமாகிய பசுகரணங்களெல்லாம் அளத்திற்பட்ட புற்போலச் சிவப் பிரகாசத்தினுற் சிவகரணமாய் நிகழச் சுகானுபவ முதிக்கப்பெற்று, அந் நெறியி னொழுகினு ரென்பார், 'பாதம் போற்றும் வாதவூ ரன்ப' என்ருர். சிவபத்தியையும் சிவப்பேற்றையும் பயப்பதாய்ப் பாடலுட் சிறந்தது திருவாசகமென மேல் விதந்தமையின், திருக்கோவையார் அவ் வியல்பின தன்றோவென ஐயப்பாடு நிகழு மன்றே, அது நிக ழாமற் பரிகரித்தற் பொருட்டு, அதுவும், அவ் வியல்பினதே யென் பார், வாசக மென்னுது, அதனையுஞ் சுட்டப் 'பாவெனப்படுவதுன் பாட்டு' என்ருர். உன் பாட்டு என்புழிப் பூவே என்பதிலுள்ள தேற் றேகாரம் கூட்டப்பட்டது. அற்றேல், அத் திருக்கோவையார் சிற் றின்பப் பொருளதாய்த் திகழ்வ தென்னை யெனின்:—அண்ணல்பா லார்ந்த பேரின்பச் சுவையை ஆர்வ மேலீட்டால் நாயக நாயகி முறையின் நயந்து பாராட்டல் ஞானிக ளியல்பாகலின் அதற்கோர் இலக்கியமாக இறைவர் கட்டளைப்படியே அருளினமைபற்றிக் காமஞ் சான்றமைபோற் காணப்படினும், பேரின்பப் பொருள் பயப்ப தாய், வேத சிவாகமங்களின் சாரமாய்ப் பாடலுட் சிறந்து விளங்க லின், ஞானப்பனுவலேயா மென்க.

சிவபெருமானை முதல்வனெனவே வழிபடுதலை,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
மாலயந் தானு மரனெனத் தொழுமே."

என வரும் சிவஞானபோதம் பன்னிரண்டாஞ் சூத்திரத்தா னுணர்க.

பாதம் போற்றுதலை,

"மன்னு மூன்னுள வுயிர்க்கர ணங்கண்
மாய்ந்து பொய்ம்முத லறிவிழுந் தருளாற்
றன்னு மின்னருட் சிவகர ணங்க
டோன்ற லாற்சுக வறிவதிற் றோன்றிச்
சென்னி யின்மிசை மேவிய பாதந்
திருந்து கண்ணிணை சேர்த்திரு கரத்தா
லுன்னல் செய்திடு மிதயமே லணைவித்
துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி லெழுந்தார்."

என வரும் திருவாதவூரர் புராணத்தில் திருப்பெருந்துறைச் சருக்கச் செய்யுளா னுணர்க.

திருக்கோவையார் வேதாகமங்களின் சாரமாய்ப்
பாடலுட் சிறந்தமையை,

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
வேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே."

எனவும்,

"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே."

எனவும் வருவனவற்றானும்,

திருக்கோவையார் பேரின்பப் பொருள் பயத்தலை,

"இயற்கைப் புணர்ச்சித் துறையீ ரொன்பதுஞ்
சத்திநி பாத மொத்திடுங் காலத்
துத்தம சற்குரு தரிசன மாகும்."

"பாங்கற் கூட்டம் பதினெட் டின்பந்
தாங்குதற் போதந் தான்கண் டகறல்."

என இன்னனம் தொகையும் வகையுமாகச் செய்யுண்முற்றும் விதந்து விளக்கிய திருக்கோவையார் உண்மையானும்,

திருக்கோவையார் சிவப்பே றளித்தலை,

'மெய்த்தவ வாத வூரர் விளம்பிட வெழுது மிந்தப்
புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று
முத்தியை யுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச்
சித்திர மலர்க்கை யாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார்.'

என வரும் திருவாதவூரர் புராணம் திருவடி பெற்ற சருக்கச் செய்யுளானும் அறிக.

சாக்கிரத்திலே நின்மல துரியாதீதத்தைப் பொருந்திச் சீவன் முத்தராய்த் திரியும் சிவஞானிகளுக்கே தலங்கடோறுஞ் சென்று தம் பெருமானைப் பணியும் சரியை முதலியன அநுட்டிக்க வேண்டுவதில்லை யாகவும், இணையின்றித் தெய்வத் திருவருளுருவாய் விளங்கிய இந்நால்வரும், அநுட்டித் தொழுகியது எற்றுக்கெனின்,—

நன்று வினவினாய்! சிவஞானிய ராவார் ஞானமுதலிய நான்கிற்கும் உரியரென வகுத்ததூஉமன்றி,

"ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலருன் மத்தர் பசாசரி லெனவு
முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந்
தானே தவிரா தானுற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துத லிடமே."

எனவும் சிவாகமங்கள் செப்பினவாகலானும், தமதுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த தமக்குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி, எத்தனையு மெளியதம்மை எத்தனையு மரியதானும்வண்ணம் செய்தளித்த பெரியதோ ருதவியை மறப்பின், அஃது இதற்குமுன் அறியாமையான் மறந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன்றாகலானும், முதல்வன் தான்றானே யாகச் செய்தாலும் இதுகாறும் தமக்குச் சுதந்தரமின்றி முதல்வனது உபகாரத்தை இன்றியமையா தெய்தி அடிமையாகிய தாம் எக்காலத்தும் அவ்வாறு அடிமையேயா மாகலானும், அப் பெருமானை வழிபடுதல் அவர்க்கே வேண்டற்பாலனவாம் ஆயின், ஆன்மாக்கள் உய்தற்குரிய ஞானவொழுக்கச் செயல்களை விளக்கிக்காட்டி அவற்றினிறவி, இஷ்ட சித்திகளையும் பர முத்தியையும் பாலித்தற் பொருட்டே அவதரித்த இவ்வாசிரியர் நால்வருக்கும் அவை, உலகுய்வான் ஒருதலையாக வேண்டற்பாலன வென்பது சொல்லாமே அமைதலின், எத் தொண்டினுஞ் சிறந்த அத் தொண்டினை ஞானத்திற் சரியையாக அநுட்டித் தொழுகினா ரென்க.

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றமுனோர்
பொன்றரிய ஞானம் புகுந்திருக்கச்—சென்று

பதிதோறம் பாடிப் பணியுமதென் மாட
மதிதோ யருட்டுறையாய் வந்து."

என்றதூஉம் இக்கருத்துப் பற்றியே. (சதமணிக்கோவை—உக)

ஞானத்திற் கிரியை முதலியவற்றை,

"ஞானத்தின் ஞானதி னான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்றமை
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே."

என்பதனானும், (திருமந்திரம் - ஞானம் - அ.)

ஞானிகள் ஞானதி நான்கிற்கும் உரியராதலை,

"ஞானயோ கக்கிரியை சரியை நான்கு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
னூனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்ற னெண்கிரியை யாதி
யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோ
னச்சரியைக் கேயுரிய னதலினா லியார்க்கு
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே
யீசனிவன் றனென்று மிறைஞ்சி யேத்தே.

என்பதனானும்,

(சிவஞானசித்தியார் - பன்னிரண்டாஞ் சூத்திரம்-ரு)

முத்தியிலும் அடிமையாதலை,

"தன்னை யறிவித்துத் தான்றனச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே

தானேதா னுச்செய்துந் * தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.'' என்பதனும்,

(சிவஞானபோதம் - பன்னிரண்டாஞ் சூத்திரம்.)

ஆசிரியர்க்கு ஆலய வழிபாடாதியன ஒருதலையாக வேண்டுமென்பதனை,

"போதகனு கியகுரவ னெஞ்ஞான்று நற்கருமம்
புரிக வென்று
வேதமுத லாகியநூன் முழுதுமொருங் கொருவர்தம்
விதித்த லாலே
சாதகனு கியபருவ மானுக்கன் பாசவலி
தணிக்க வல்லான்
மேதினிமே லுடலொடுகற் செயல்விடுவ தன்றியிடை
விடலா காதால்.'' என்பதனும்,

(பிரபுலிங்கலீலை - கோரக்கர்கதி-உக)

ஆலய வழிபாடு எவற்றினும் சிறந்தமையை,

"என்று கூடுமிப் பருவமென் றியம்பில்
யாமி ருந்துள விடந்தொறு மிறைஞ்சி
நன்றி சேர்சிவ புண்ணியம் புரிய
நன்மை யாவது நணுகுமென் றறிநீ.''

என்பதனும் அறிக.

(திருவாதவூரர் புராணம்-திருப்பெருந்துறைச் சருக்கம் - கஎ)

இனி, இவ்வாசிரியர் நால்வரும் தொண்டர் போன்றேனும், ஒவ்வொருவரும், அக்காலத்திலே சைவசமயங் குன்றும்படி அநேக்

---

* தைவம்-தேவனது உடைமை; எனவே, அடிமை என்றபடி.

கிரமித் திருந்த பொய்ச் சமயங்களாகிய சமணம் பௌத்த முதலிய வற்றை நிராகரித்து, தன்வயத்தனாதன் முதலிய எண் குணங்க ளுடைமையின் சிருட்டியாதிய கர்த்திருத்துவ முதலியவற்றை அருள் விளையாட்டி னெய்திச், சைவசமய மகிமையைப் பற்பல ஏதுக்களால் விளக்கினமையின், சைவசமய குரவர் எனப் பெயர் பெற்று, தம்மை வழிபடுவார்க்கும் மேற்கூறிய சித்திகளை யுளவாக் கிப் பரமுத்தியைப் பாலித்ததுமன்றிப், பிற்காலத்தவரும் ஓர்ந் துய் வான் இறைவனை யெய்தற்குரிய சாதன வகைகளையும் அச் சாதன நெறி நிற்பா ரெய்தும் பயன்களையும் வகுத்தருளி, இறைவர் திரு வுளப் பாங்கின்படி வதிந்த ஆசிரியத்தலைமை யுடையவர்களே யாக லான், இவர் பாலித்த அருட்டிறத்தை மறந்து, உய்தியில் குற்றம் பெறாது, இவரை இறைவ ரெனவே தேர்ந்து வழிபடின், அவ் விறைவரே முன்னின்று தற்சொரூப மாக்குவ ரென்பதே, இந் நூலாசிரியர் தந்துணிபாகக் கொண்டு,

'கடிவின் மனத்தாற் கட்ட வல்லார்க்குத்
தானே முத்தி தருகுவன் சிவன்'

என விளக்கியருளினா ராகலின், அங்ஙனமே மனமொழி மெய்க ளான் வழிபட்டும், இவர்கள் அருளிப தேவாரம் திருவாசகம் திருக் கோவையார் என்பனவற்றைப் பசுவாக்கியமென்று நினைப்பினும், அந்நினைவு அதிபாதகமாகிய சிவத்துரோகமேயாகி எரிவாய் நிரயம் பயந்தேவிடுமாகலின் பதிவாக்கியமெனவே ஐயந்திரிபறத் துணிந்து, சிவமாந் தன்மைப் பெருவாழ் வெய்தலே தெள்ளியோர் கடமை யாகும்.

இச் சமயகுரவர்கள் உலகுய்வான் அவதரித்தமையை,

"அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறுந்

தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்.''

எனவும்,

(பெரியபுராணம்-சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - உகூ)

''அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ
வுலகில்வரு மிருணீக்கி யொளிவிளங்கு கதிர்போல
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்.'' எனவும்,

(ஷெயில் வாகீசமூர்த்தி புராணம் - கஅ)

''மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப் போதுவார்.'' எனவும்,

(ஷெயில் - திருமலைச்சிறப்பு - உரு)

''தீதகன் றுலகமுய்யத் திருவவதாரஞ் செய்தார்.'' எனவும்,

(ஷெ - தடுத்தாட்கொண்ட புராணம்)

''ஆயவனம் பதியதனி னமாத்தியரி லருமறையின்
றூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான்
மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்.''

எனவும் வருவனவற்றானும்,

(திருவிளையாடல்-வாதவூரடிகளுக் குபதேசித்தபடலம்-சு)

அருள்விளையாட்டிற் சிருட்டியாதிய ஐந்தினமையை,

''பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்.'' எனவும்,

(திருக்களிற்றுப்படியார் - கஉ)

"தவந்த வென்பிணைப் பெண்ணெனப் படைத்துஞ்சார் மழவ
னுவந்த பெண்ணுயி ரளித்துமொட் டாதெதிர் புத்த
னிவந்த சென்னியை யுருட்டியு மூத்தொழி னிறவிப்
பவந்த தேத்துயிர்க் கருளுஞ்சொற் பனவனைப் பணிவாம்."

எனவும் வருவனவற்றானும்,

(பேநர்ப்புராணம் - கடவுள் வாழ்த்து)

சைவநெறி பாலித்தமையை,

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரே னீறெங்கே? மாமறைநூ லெனங்கே?
எந்தைபிரா னைந்தெழுத் தெங்கே?" என்பதனானும்,

(சிவானந்தமாலை - பாயிரம்)

இறைவர் திருவுளப்பாங்கின்படி வதிந்தமையை,

"அன்ன தன்மையர் கயிலையை யணைவதற் கருளார்
மன்னு நீர்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனற் றடமுமொன் றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால்."

எனவும்,

(பெரியபுராணம் - வாகீசமூர்த்தி புராணம் - ௩௬௧)

"தித்திக்கு மணிவார்த்தை யின்னஞ் சின்னாட்
டிருச்செவி வருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம்
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபோன் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
முடித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி

யெத்தித்தொண் டரைக்கருமஞ் சிறி துண் டிங்கே
யிருத்தியென வுருக்கரந்தா னடிய ரோடும்.''

எனவும் வருவனவற்று னும்,

(திருவிளையாடல் - வாதவூரடிகளுக் குபதேசித்தபடலம்-ருரு)

மறத்தல் உ்: தியில் துற்றமாதலை,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''

என்பதனு னும்,

(திருக்குறள் - ககo)

பவப்பகை யொழித்தலை,

"ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதுமூ துணர்வோர்முற்
பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்கிளம்
பாவைய ருரைபோலுங்
கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ
கட்டுரை யெனக்கொள்வாய்
விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும்
விருப்பினர் விருப்பீதே.'' என்பதனு னும்,

(வைராக்கிய சதகம்.)

சிவன் தற்சோருப மாக்குதலை,

"சிவனெனவே சிந்தித்துச் செய்பூசை கொண்டே
சிவனே பலத்தைச் செயும்.'' எனவும்,

(சங்கற்பநிராகரணத் திருக்குறள்)

"பரப்பிரம மிவனென்றும் பரசிவன்று னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்று னென்று
மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடவே யவனிவன்று னுயே
யிரங்கியவா ரணமாமை மீனண்டஞ் சினையை
யியல்பினொடும் பரிசித்து நினைத்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே."

எனவும் வருவனவற்றானும் அறிக.

(சிவஞானசித்தி - பன்னிரண்டாஞ் சூத்திரம் - எ)

இந்நூல் அந்தாதித் தொடையால் முடியவேண்டு மாதலால், பூவென நான்முகத்தி லெடுத்து இறுதியில் பூ என முடித்தார்.

இப் பிரபந்தம், இவ் வாசிரியர்களின் அற்புதங்களுட் பலவற்றை எடுத்துக்கொண்ட செய்யுட்கு இணங்குமளவும் சுருங்கச் சொல்லல் முதலிய அழகு நிரம்பத் தொகுத்து விதத்தலால், சுருங்கியதோர் தோற்ற முடைத்தாய் விளங்கினும், உரை செய்வான் புகும் நுண்ணறிவாளர்க்கெல்லாம் பொருளகலங் காட்டி அணிபெற விரிந்து நிற்றல் பற்றி, திராவிடபாஷியகர்த்தரென வியக்கத்தக்க பெரியாரும் இதயத்தமைத்துப் பேணிய தெய்வீக முடையதென, அறிஞர் பலரால் அறிந்துவைத்தும், இதற்கு, சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிக ளவர்களால் இயற்றப்பட்ட உரையை யொருவாறு தழுவி, எம் சிற்றறிவிற்கு இயன்றவளவு எழுதிய இவ் வுரையில், இன்னும் ஆங்காங்கு விரித்துரைக்கற்பாலன மிகப்பல வுளவாகவும், அவற்றை விரிவஞ்சி விடுத்தமையின், விரித்தவை கொண்டு விரியாதவற்றையும் உய்த்துணர்ந்து, மாறுபாடின்றி அறிஞர் பெரிதும் சுகிப்பாராக, சுபம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசு நாயனாருக்குக் கட்டளைக் கலித்துறையும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாக அருளிச் செய்த

நால்வர் நான்மணிமாலை

விருத்தியுரையோடு

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

சிவப்பிரகாச சுவாமிகள் துதி

*"புனையெழில் வடிவி னோர் பொதுமகட் கண்ட மைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின் றமிழ்ப்பா மாலை
சினவிடை யவற்கே சாத்துஞ் சிவப்பிர காச னென்னு
முனைவனெம் மடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்."*

*"சிவப்பிர காசந் திருவடி போற்றத்
தவப்பிர காசந் தானே வருமே."*

சைவசமய குரவர்கள் திருவடி வாழ்க.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

அநுபந்தம்

(கள-வது, ககூ-வது செய்யுட் குரியது)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், என்பைப் பெண்ணாக்கிய சரிதம்:—

திருமயிலாப்பூரிலே, வைசியர் குலத்திலே, சிவபத்தி அடியார் பத்தி முதலியவற்றிற் சிறந்த சிவநேசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருஞான சம்பந்தப் பிள்ளையார் ஞானப்பால் உண்டமையை யும், பாண்டி நாட்டிற் சென்று செய்தருளிய திருவருட்டிறங்களையும் கேட்டு மனமகிழ்ந்து, பிள்ளையாரைத் திக்கு நோக்கி நமஸ்கரித்து எழுந்து நின்று, தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தருங் கேட்க, "அடியேன் என்னுடைய புத்திரியாகிய அழகிற் சிறந்த பூம்பாவை யையும், திரவியங்களையும், என்னையும் திருஞானசம்பந்தப் பிள்ளை யாருக்குக் கொடுத்துவிட்டேன்" என்று சொல்லிப் பேரானந்தம் அடைந்தார். அப்படியிருக்க, ஒருநாள் பூம்பாவை சேடியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்திலே இருந்த பூஞ்சோலையிற் சென்று பூக் கொய்யும்பொழுது, ஒரு பாம்பு மல்லிகைப் பந்தரிலே மறைந்து வந்து விரலிலே தீண்ட, அவள் இறந்தனள். சிவநேசர் அது கண்டு, "இவளைப் பிள்ளையாருக்கு என்று சொல்லியதனால், பிள்ளையார் வருமளவும் இவ் வுடலைத் தகனஞ் செய்து, எலும்பையும் சாம்பரை யும் சேமித்து வைப்பேன்" என்று துணிந்து அப்படியே தகனஞ் செய்து, எலும்பையும் சாம்பரையும் ஓர் குடத்தில் இட்டுக் கன்னி மாடத்தில் வைத்துத், தினந்தோறும் மஞ்சனம், மாலை, சந்தனம், அன்னம், விளக்கு முதலியவைகளை அமைத்து வந்தார்.

இப்படி நிகழுநாளிலே, "பிள்ளையார் திருக்கூட்டத்தோடு திருவொற்றியூரில் எழுந்தருளி வந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருக்கின்றார்" என்று பலர் வந்து சிவநேசருக்குச் சொல்ல,

அவர், அவர்களுக்கு வஸ்திர முதலியவற்றைக் கொடுத்துப், பெருங் களிப்புடையராகித் திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தர் இட்டுத் திருவொற்றியூருக்குச் சமீபித்தார். அப்பொழுது பிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று, திருமயிலாப்பூரை நோக்கி அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருள, சிவநேசர் அளவில்லாத மகிழ்ச்சி கொண்டு விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கித் தொழுதுகொண் டெழுந்தருளி, சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக் கேட்டுத் திருமயிலாப்பூரை அடைந்து, சிவநேசரிடத்து நிகழ்ந்ததைத் திருவுளத்தடைத்து, அவருடைய கருத்தை முற்றுவித்தற் பொருட்டுக் கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்துச் சிவபெருமானை நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு, திருக்கோயிலுக்கு மேற்புறத்திலே வந்து சிவநேசரை நோக்கி, "உம்முடைய மகளது எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிற் புறமதிற் றிருவாயிலிலே கொண்டுவாரும்!" என்று அருளிச்செய்தார்.

சிவநேசர் அவ்வாறே அக் குடத்தைச் சிவிகையிற் கொண்டு வந்து சிவலிங்கப் பெருமானுக்கு அபிமுகத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணினார். அதைப் பார்க்கும் பொருட்டு மனிதர்கள் பூமியிலும், தேவர்கள் ஆகாயத்திலும் வந்து நெருங்கினார்கள். பிள்ளையார் அடியார் திருக்கூட்டம் சூழ்ந்துவரத் திருக்கோபுரவாயிலின் நேரே வந்து, பூம்பாவையினது அத்தி யிருக்கின்ற குடத்தைக் கண்டு சிவபெருமானுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்து, திருவருளைக்கினாலே "பூம்பாவாய்" என்று விளித்து, பூமியிலே மாநுடப் பிறப்பு எடுத்தவர்கள் பெறும் பயன் அன்புடனே சிவபிரானுடைய அடியார்களைத் திருவமுது செய்வித்தலும், சைவாகம விதிப்படி செய்யப்படுகின்ற அச் சிவபெருமானுடைய திருவிழாவைத் தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாயின், நீ இவ்வுலகர் முன் வருவாய் என்று,

"மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சுரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய்."

என்னுந் திருப்பதிகத்தை எடுத்தோதி யருளினார். அதில் அருளிச் செய்யப்பட்ட "போதியோ" என்னுந் திருவாக்காகிய அமிர்தம் அவ் வங்கத்திலே பொருந்த, அது குடத்தினுள்ளே சரீரமாய்ப் பரிணமித்தது. பூம்பாவை முதற் றிருபாட்டிலே வடிவு பெற்று, வேறெட்டுப்பாட்டிலே பன்னிரண்டு வயதடைந்து குடத்தினுள் அடங்கியிருந்தனள். பின்பு பிள்ளையார், சமணர்களும் பௌத்தர்களும் இச் செய்கையை எற்றதன்று என்று எடுத்துச் சொல்வார்கள் என்னுங் கருத்தினால் பத்தாந் திருப்பாட்டை அருளிச் செய்யப் பூம்பாவை தன் கை வெளியே தோன்ற, குடமுடைந்து எழுந்தனள். அது கண்டு பிள்ளையார், திருக்கடைக் காப்புச் சாத்தியருளினார். எல்லோரும் அற்புதம் அடைந்தார்கள். சிவனடியார்கள் ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள். தேவர்களும் முனிவர்களும் புஷ்பமாரி பொழிந்தார்கள் என்பது.

ஆற்றிவிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்த சரிதத்திற்குத் தேவாரம்:—(உஎ-வது செய்யுள்)

திருச்சிற்றம்பலம்

"பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலும்மெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவடன்முகப்பே
என்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே."

ஆளுடைய பிள்ளையார் முத்துச் சிவிகை பெற்ற சரிதத்திற்குத் தேவாரம்:—(உக வது செய்யுள்)

"எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமேல்
அந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே."

(௩௧ - வது செய்யுட் குரியது)

பெருமிழலைக் குறும்ப நாயனார் சரிதம்—

மிழலை நாட்டிலே, பெருமிழலை யென்னும் ஊரிலே, சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்த பெருமிழலைக் குறும்ப நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களைக் காணுந்தோறும் விரைந்து எதிர்கொண்டு வணங்கி, அவர்களுக்குக் குறிப்பறிந்து தொண்டு செய்பவர். அவர்களை நாடோறுந் திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுந் திரவியங்களைக் கொடுப்பவர். அவர் சுந்தரமூர்த்தி நாயனாருடைய பெருமையை அறிந்து, 'அவருடைய திருவடிகளை மனம் வாக்குக் காயங்களினாலே சிந்தித்துத் துதித்து வணங்குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்கு உரிய நெறி' என்று அப்படிச் செய்து வந்தார். அதனால் அவர்: அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளையும் அடைந்தார். அங்ஙனம் அடைந்தும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்து வந்தார்.

இப்படி நிகழுங் காலத்திலே, திருவஞ்சைக்களத்திற் சென்று திருப்பதிகம் பாடும் சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பரமசிவனுடைய திருவருளினாலே உத்தர கைலாசத்தை அடையும் வாழ்வு கிடைப்பதைத் தம்முடைய ஊரிலிருந்துகொண்டே யோகப்பிரத்தியக்ஷத்தால் அறிந்து, "சுந்தரமூர்த்தி நாயனார் உத்தர கைலாசத்தை நாளைக்கு அடைய நான் பிரிந்து இங்கே வாழமாட்டேன்" என்று நினைந்து, "இன்றைக்கு யோகத்தினாலே சிவபிரானுடைய திருவடியை அடைவேன்" என்று துணிந்து, யோக முயற்சியினாலே பிரமரந்திரந் திறப்ப, உடலினின்றும் பிரிந்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை யடைந்தார் என்பதாம்.

உ

நால்வர் நான்மணிமாலையின்
செய்யுள் முதற்குறிப் பகராதி

செய்யுள்	பக்கம்
அ	
அரசன்பரிமேல்	108
அருக்கடல்	87
அறத்தாறிது	137
அறிந்துசெல்வ	29
இ	
இகாட்டுண்	33
இலைபடர்ந்த	22
உ	
உற்றனலன்	150
உளற்கரும்புகழ்	92
ஊ	
ஊர்ந்துவருமிள	139
எ	
எப்போதக	2
எனவயன்பு	25
க	
கடனிறவண்ணன்	43
கொ	
கொள்ளைகொள்ள	80
கொள்ளைக்கதிர்	36
சே	
செல்வகல்	142
செய்யவார்சடை	157
தா	
தாயிலியாகுஞ்	63
தானேமுத்தி	145
தி	
திருவார்பெருந்	133
து	
துடைவாழை	106
தே	
தேனேறலர்	120
ந	
நலமலிவாதவூர்	96
நோ	
நோக்குறநுதலோ	65
ப	
பகிர்மதிதவழும்	114
படியிலாதின்பா	10
பயனுகல்	71
பா	
பாட்டான்மறை	73
பாவாய்ப்பொழி	129
பூ	
பூவான்மலி	3
பெ	
பெருந்துறை	31
பெருமிழலை	153
பெற்றனினை	124
போ	
போதமுண்ட	74
ம	
மகிழ்ச்சிமிக	61
வ	
வலமழுவுயரிய	68
வல்லார்பிறப்	147
வா	
வாங்குசிலை	40
வானும்புகழ்	101
வி	
விளங்கிழை	17
வீ	
வீட்டிற்குவாயி	6
வே	
வேண்டுகின்	76

நால்வர் நான்மணிமாலையின் செய்யுள் முதற்குறிப் பகராதி
முற்றுப் பெற்றது.

ரிப்பன் புஸ்தகசாலை, **87**, தம்புசெட்டி வீதி. சென்னை.

துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

திருவெங்கைக்கோவை மூலமும் உரையும்

உயர்ந்த கிலிட்டு பயிண்டு : விலை ரூபா 2-8-0

உய்த் துணருமிடத்துப் பண்டைய தமிழ் நூல்களின் கூற்றுக்கள் அனைத்தும் இரண்டே பகுதியிற் படுவன வாகும். அவைதாம் அகப்பொருளும், புறப்பொருளும் என்பன.

இனி, அகப்போருள் என்பது அகத்தினு ளாய பயன். ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடிய கூட்டத்தின் பின்னர், ஆண்டு அக்காலத்தே நுகர்ந்த இன்பம் எவ்வாறிருந்ததென்று அவ்விருவரில் ஒருவரை யொருவர் கேட்பின், தமக்குப் புலப்படக் கூறப்படாததாய், உணர்வே நுகர்வதாய், அகத்தே நிகழும் இன்பமாம். புறப்போரு ளென்பது புறத்தைச் சார்ந்து வரும் பொருளாம்.

அகப்பொரு ளிலக்கணத்திற் கோர் இலக்கியமாக விளங்கும் கோவை நூல் நமது தமிழ் மொழிக்கே சிறப்பு நூலாம். ஓரின மணிகளை ஒழுங்குபடக் கோத்தல்போல, அகப்பொருட் கிளவிகளை ஒழுங்குபடக் கோத்தலின், இந்நூல் கோவை எனப்பட்டது.

இத் திருவெங்கைக்கோவை துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர் திருவாய்மலர்ந் தருளியது. தமிழ்த்துறையி லிறங்கும் மாணவர்க்கும், தமிழ்க் கடலுள் படிந்து திளைத்து முழுகும் புலவர்க்கும் பெரும் பேறாக விளங்க அம் முனிவர் இயற்றி யருளிய தமிழ் நூல்களின் சிறப்புக்கள், அவற்றை ஐயமறக் கற்று மகிழ்ந்தோரே யன்றி மற்றையோர் அறியற்பாலன வன்றாம். துறைப் பொருட்குத் தகப் பாட்டுடைத் தலைவனது கீர்த்தியைத் தொகுத்துக் கூறும் ஒற்றுமை இவ் வெங்கைக்கோவை ஒன்றினே காணக் கிடைப்பதாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இக் கோவை நூலுக்கு உரை யொன்று வேண்டுவது இன்றியமையாதது பற்றி, கோவை நூலில் மிக வல்லுநரென யாவரானும் நன்கு மதிக்கப்படும் காஞ்சி மகா வித்வான் இராமாநந்த யோகி அவர்களைக்கொண்டு, பதவுரை கருத்துரை விசேஷவுரை முதலியன சொன்னயம், பொருணயம் பொருந்த எழுதுவித்து வெளியிடலாயிற்று.